Registered as a News Paper in Sri Lanka

தினமுரசு வாரமலர்

பக்கம் 20

ஜுன.02-08,1994

ரூபா 8/50

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 32



எக்ஸ்ரே ரிப்போர்ட்

## கொப்பேகடுவ விட்டுச் சென்ற இடம் வேறு தளபதிகளால் நிரப்பப்படுமா?



தேர்தல் ஆண்டு
1994
அரசியல் அலசல்

சிறுகதைகள்
கவிதைகள்
புதுமைத் தொடர்



அழகுக் குறிப்புகளோடு
லேடீஸ் ஸ்பெசல்

மகாபாரதம்
கதை-வசனம்

கடிஜோக்ஸ்

ரசிகனின் இலக்கிய நயம்

விடுகதை-சிறுகதை
பாப்பா முரசு

வர்ணப்படங்களோடு
சினிவிசிட்

## நொண்டிக் குதிரையின் அபார சாதனை!

# புறம்பான மேல்நோக்கிய பார்வை



"பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப் பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்; நானே தேவன். வேறொருவரும் இல்லை." ஏசாயா 24:22. இது ஆன்மீக வாழ்க்கையின் அடிப்படையாய் இருக்கிறது. "நீதிபரரும் இரட்கருமாகிய" அவரை நோக்கிப் பார்ப்பதினாலே இரட்சிப்பு கிடைக்கிறது. படைக்கப்பட்டது நிச்சயமாக படைத்தவரை நோக்கிப் பார்க்க வேண்டும். என்பதற்கே தேவனை நோக்கிப் பார்ப்பதற்கு ஆயத்தம், முயற்சி, நகைதிறன், ஞானம், செல்வம், வலிமை தேவை இல்லை. நமக்கு தேவையான எல்லாம் ஆண்டவராகிய நம் தேவனில் இருக்கிறது. நாம் எல்லாவற்றிற்கும் அவரை நோக்கிப் பார்த்தால் எல்லாம் கிடைக்கும். இரட்சிப்பும் கிடைக்கும்.

தூர விலகிப் போனவர்களே, வந்து இங்கு பாருங்கள். உலகின் மூலை முடுக்கில் எல்லாம் உள்ளவர்களே, இந்தப் பக்கமாக நோக்கிப் பாருங்கள். வெகு தூரமான இடங்களில் உள்ளவர்கள் கூட சூரியனைப் பார்த்து, அதன் வெளிச்சத்தை அனுபவிப்பது போல, மரணத்தின் எல்லையிலும் நரகத்தின் வாயிலிலும் இருக்கும் நீங்களும் நோக்கிப் பார்த்தாலே கடவுளின் வெளிச்சத்தையும், பரலோக வாழ்க்கையையும், கடவுளாயிருப்பதால் இரட்சிக்கக் கூடியவருமான ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பையும் பெறுவீர்கள்.

குணபிரபா-வெள்ளவத்தை.

# ஆன்மீகம்

## நபிகள் நாயகத்தின் மணிமொழிகள்

- பாவங்களில் மிகப் பெரியது, அல்லாஹ்வுக்கு இணை வைத்தலும், பெற்றோர்களை மனம் நோவித்தலுமாகும்.
- மறுமையில் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அன்னவர்களுடைய மக்களின் தலைவராகவும் கப்ரில் இருந்து வெளியாவோரில் நானே முந்தியவராகவும் சிபாரிசு செய்வோரில் நானே முந்தியவராகவும் சிபாரிசு ஏற்றுக் கொள்ளப்பட்டோரில் முதலானவராகவும் நானே இருப்பேன்.
- நிச்சயமாக நான் அருளாகவே அனுப்பப் பட்டுள்ளேன். சபிப்பவராக அனுப்ப வில்லை.
- தன்னுடைய நன்கொடையைத் திரும்பப் பெறுபவர், நாயைப் போன்றிருக்கின்றார்.
- என்னைப் பின்பற்றியவர்கள் மற்றைய நபிமார்களைப் பின்பற்றியவர்களை விட மறுமை நாளில் அதிகமிருப்பர். மேலும் சுவன பதியின் கதவைத் தட்டுவோரில் நானே முதன்மையானவன்.
- சுவனத்திற்குப் புகுந்த ஒருவன், பாக்கியம் பெறுகின்றான்; எந்தத் தொல்லையும் அடையமாட்டான். அவனுடைய ஆடைகளும் பழமையாகாது. அவனது வாலிபமும் அழியாது.
- என்னுயிர் எவனது கைவசமுள்ளதோ அவன் மீது ஆணையாக! நான் அறிந்தவற்றை நீங்கள் அறிந்து கொண்டால் அதிகமாக அழுவீர்கள். குறைவாக சிரிப்பீர்கள்.
- உமக்கு மோசடி செய்தோருக்கு நீர் மோசடி செய்யாதீர். குழப்பங்களின் போது வணக்கம் புரிவது, என்பால் ஹிஜ்ரத் செய்து வருவதற்குச் சமமாகும்.
- ஐவேளைத் தொழுகையைத் தொடர்ந்து தொழுது வருபவனுக்கு ஷைத்தான் பயப்படுவான்.
- மனிதன் இரண்டு விஷயங்களை வெறுக்கின்றான். ஒன்று மரணம் மற்றையது சொத்து(செல்வம்) இருப்பது.
- விதவைப் பெண்ணுடையவும், ஏழைகளுடையவும் தேவைகளை நிறைவு செய்பவர் அல்லாஹ்வுடைய வழியில் போர் செய்வோர் அல்லது பகலில் நோன்பு நோற்று இரவில் தொழுதுவருவோர் ஆகியவரைப் போன்றாவார்.
- நிச்சயமாக அல்லாஹ் உங்களின் தோற்றத்தையும், பொருட்களையும் நோக்குவதில்லை; ஆனால் உங்களின் உள்ளத்தையும் செயல்களையும் நோக்குகின்றான்.

தொகுப்பு: மசூத் அஹமத்
காத்தான்குடி-03.

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
மகாபாரதம் தொடரை
தமிழில் தரும் முரசின் முயற்சியை
பலரும் பாராட்டியுள்ளீர்கள்.

அதே சமயம்-
வாசக நெஞ்சங்கள் சிலர்
தமக்குப் பிடித்தமான சிலபகுதிகள்
இடைக்கிடையே காணாமல் போவதாக
வருத்தம் தெரிவித்து மடல் வரைந்துள்ளார்கள்.

இடம் காணாமல் போவதால்
ஏற்பட்டுவிடுகின்ற நிர்ப்பந்தம்.
எனினும்-இனிமேல் கவனிக்கப்படும்.
■

"புதிய எழுத்தாளர்களை
மேலும் அறிமுகப்படுத்துங்கள்.
குறிப்பிட்ட சிலருக்கே
தொடர்ந்து இடம் தருகிறீர்களே
நியாயமா- நீதியா?" என்றெல்லாம்.
காரசாரமாய் கேட்டு ஒருமடல்.
கூடவே ஒரு கதையும் வந்தது.
வாசித்துப் பார்த்த போது
தமிழக எழுத்தாளர் ஒருவர்
கஷ்டப்பட்டு எழுதிய கதையை
சுலபமாகப் பிரதிபண்ணி,
சில மாற்றங்களோடு அனுப்பியிருப்பதை
அறிந்து கொள்ள முடிந்தது.

அனுப்பியவர் காத்திருந்து பார்த்தார்.
முரசு பிரசுரிக்காது என்று தெரிந்து
வேறு ஒரு பத்திரிகைக்கு
அதே கதையை அனுப்பியிருக்கிறார்.
கடந்த வாரம் அது பிரசுரமாகியிருந்தது.

சமகாலத்திய சிறப்பான எழுத்தாளர்களது
பாதிப்புக்கள் புதிதாக எழுதுவோரிடம்,
இருக்கவே செய்யும்.
ஆனால் பாதித்தல், பாதிப்பு
என்பவை வேறு,
பார்த்தெழுதல் என்பது வேறு.
பார்த்தெழுதிவிட்டு
'படைத்தவர் நானே' என்று
பெயர் போட்டுவிடுவது பெரிய கொடுமை.
அதனைத்தான் சிலர்
செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதனால்தான்-
குறிப்பிட்ட சிலருக்கே தொடர்ந்து
களம் கொடுக்க வேண்டியதாகிறது.
வாசகர்கள் அதனால் வருந்தவில்லை.
பார்த்தெழுதி அனுப்பிவிட்டு
கூடவே வேறு பெயரில்
கடிதம் எழுதி
புதியவர்களுக்கு களம் கொடுங்கள் என்று
ஆலோசனை சொல்லும் "அதி புத்திசாலிகள்."
சிலர்தான் வருத்தப்படுகிறார்கள்.

திறமையுள்ள புதிய முகங்களை
தெரிந்தெடுத்து அறிமுகப்படுத்த
முரசு எப்போதுமே தயங்காது.
தகுந்த இடம் தந்தே தீரும்.
■

பெய்யெனப் பெய்யாத மழை
போதும் என்று நினைத்த போதும்
கொட்டியபடியே இருந்தது.
பெய்யாதே போதும் என்ற போதும்
பெய்த மழையால்
நாடெங்கும் வெள்ளக்காடுகள்.

இயற்கையும் எமக்கு எதிராகிவிட்டதோ
என்று நினைக்க வைக்குமளவுக்கு
அகதிகளையும்-
தொடர் போரினால் விரக்தியுற்ற மக்களையும்
வெள்ளப் பெருக்கு வருத்திவிட்டது.

துயரங்கள் மட்டுமே தொடர்கதையாக
மக்களின் மனங்கள்
வெறுமையாகிக் கொண்டிருக்கின்றன.
எழுதுகிறவர்கள் மட்டும்
தொடர்ந்து எழுதிக்கொண்டே இருக்கிறார்கள்.
மையாக மாறுவது மக்களின் குருதி.
மையாக மாறுவது மக்களின் கண்ணீர்.
■

கிறிஸ்மஸ்-புத்தாண்டு
வாழ்த்துக்கள் அனுப்பிவைத்த
அன்பு நெஞ்சங்களுக்கு நன்றி சொல்லி
மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை

அன்புடன்
—ஆசிரியர்—

## தினமுரசு போன்: 820265

## கவிதைப்போட்டி இல-29

களம்தேடி வந்து முகம் காட்டியவற்றில் பரிசு பெறுவதும், பாராட்டுக்குரியவையும்.

### பரிசுக்குரிய கவிதை

**நன்றி**

**கோட்சேயின்**
**புதை குழியில் - ஒரு**
**பூமரம் நட்டு**
**நன்றி சொல்ல!**
**இன்று நான்**
**இல்லாமல் போனதற்கு...!**

**நாகலிங்கம் சுரேஷ்**
**கோட்டைக்கல்லாறு-1.**

### பாராட்டுக்குரிய கவிதைகள்

**சூழ்நிலை**

'ஷெல் சத்தம்
கேக்குது
பெடியளும் ஆமியும்
மோதுகினம் போல'
குறுக்கால
நீங்கொரு ஆளு
'காந்தீயம்
காந்தீயம்' ன்ட்டு...!
முதல்ல மாட்டிக்காம
ஒடுங்கோ
பதுங்கு குழியிக்க!

ஒலூர் றகீமா-வாழைச்சேனை.

**நினைவின் கனவு**

தேடடி பெண்ணே
காந்தி காலடிமண்ணே
காந்தீயம் தோற்றதினால்
களத்திலே வாழ்க்கையென
கூறடி பெண்ணே.

தெ.லோஜனா
கொழும்பு-15.

**எப்போது?**

அகிம்சை
எப்போது
உயிர்த்தது?

பீ.விறைனர்

**சொல்**

வாய்மையே வெல்லுமென மார்தட்டி இவ்வுலகில்
தூய்மையாய் வாழ்ந்த திருத்தொண்டர்-தீமையைச்
சொல்லால் சிதைத்த நம் காந்தியார் ஓடல், வரும்
"செல்"லால் துரத்துண்டோ சொல்?

சி.கிருஷ்ணவேணி-மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல-32



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=. அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 08.1.1994.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 32
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5



விரைவாய்
வாருங்கள்
தாத்தா!
நாங்கள்
வேகமாய்
இறங்குமுன்

செ.நடேஷலிங்கம்
மட்/ஊறணி.

**விரை தாத்தா**

காந்தித் தாத்தா!
"ஒலிவ்" இலையோடு
இஸ்ரேலை நோக்கி
விரை!
மீண்டு மொரு
வளைகுடா யுத்தம்
தோன்ற முதல்.

அக்குறணை ஹஸீரா அனஸ்.

**அராஜகம்**

ஓ...
அராஜகம்
உன்னைக்-கைது
செய்யத்-
துரத்துகின்றதோ.

எஸ்.சிவதர்ஷனி
கொழும்பு-4.

**எமக்காக...!**

மகாத்மாவே
நீ மறைத்துவிட்டுச்சென்ற
சமாதானக் கதவின்
சாவியை
கொடுத்துவிட்டுபோவே!

ஹப்புத்தளையூர் எப்.லெனாட்குமார்.

மன்னிக்க வேண்டும்
மகாத்மாவே!
உங்கள் வருகைக்கு
இப்போது இங்கு
இடமில்லை.

ரீ.லக்ஸ்மி
குறுமண்வெளி-11.

**பாரும் கண்மணி**

மாண்பே உன் வழி
நாடும் எம் விதி
பாரும் கண்மணி
நோகும் உன் விழி.

ஏ.அஹ்மது ஜுனைது
ஏறாவூர்-6.

**தெரியாது**

சுதந்திரமா...!
எனக்கு ஒன்றும்
தெரியாது
என்னை
விட்டுவிடுங்கள்.

செ. ஆனந்தராஜா
கொழும்பு-11.

**ஏன்?**

கையிலே வெற்றியின் சின்னம்
காலிலே உறுதியின் திண்ணம்
யார் அறிவார் அண்ணல்
ஒடுவதின் எண்ணம்..!

குமுதா-ரஜமல்வத்தை.

**சமரசம்**

சமரசஞ் செய்ய
சமர்க்களஞ் சென்று
விமர்சனம் செய்ததால்
வந்த திந்த வினையோ?

ச. மகாலிங்கம்
வெளிமடை.

**எதற்கு?**

எப்போதோ
தொலைந்து போன
காந்தீயத்தை
இப்போது
தேடியோடித்
திணறுவது
எதற்கையா?

ம.மு கமால்கான்
கல்முனை.

தாத்தா!
கவனமாக
காலை வையுங்கள்!
நிலத்தில்
மிதி வெடி
இருக்கலாம்.

ப.ரமேஸ்
மட்டுநகர்.

**நீ இருந்தால்...**

சாந்தியும்
சமாதானமும்
இருக்கவேண்டிய
பூமியெங்கும்
சமாதிகள்
முளைத்திருப்பதைக்கண்டு
இப்படி
தறிகெட்டு
ஓடியிருப்பாயோ?

செல்வி. சுப்பிரமணியம்
வாணீஸ்வரி
அப்பர் கலஹா.

**அவதான அவதரிப்பு!**

மஹாத்மாவே
எங்கள்
ஆத்மாக்களின்
அவதிகளைப்
பார்க்கவா
உங்கள்
அவதரிப்பு?...

ஏ.எம். அப்துல் றகுமான்
கந்தளாய்.

**பயம்**

எயிட்ஸ் நோய்
பரவுகிறது
என்றதும்
பாய்ந்தோடும்
காந்தி மகான்

தா.லெ.கபீப்
கல்முனை.

அதோ பார்
வெள்ளைப் புறா
பறக்கிறது.

எம்.எஸ்.எம். பாயிஸ்

அடப்பாவிகளா...!
ராமராஜ்யத்தைத்தானே
ஏற்படுத்தச் சொன்னேன்
பாபர் மசூதியையா
அழிக்கச் சொன்னேன்?
உங்களைவிட
என்னை அழித்த
கோட்சே மேலானவனே!
அப்பா...கோட்சே
நீ எங்கிருக்கிறாய்...
நன்றி சொல்ல வேண்டும்
நான்உனக்கு!

ஆர்.பாலகிருஷ்ணன்
மாத்தளை.

**தோற்றுப்போவாய்**

தேசபிதாவே -நீ
எதைத்தேடி ஓடுகிறாய்
ஓ... உனது தேசத்தையா?
தேடிப்பார்...
தோற்றுத்தான் போவாய்.

ஏ.துஸ்யந்தி
அக்கரைப்பற்று.

# வாசகர்சாலை


அன்பின் முரசே,
நீ என் கரங்களில் வந்ததும் நான் உன்னை முழுமையாய் ரசித்து சுவைக்க படும் பாட்டை நீ அறிவாயா? முதல் பக்கத்தை புரட்டும் முன்னே ஓசியில் படிக்கும் வாசகர்கள் வந்து தொல்லையோ தொல்லை. ஒரு முறை இருமுறை கொடுத்துப் பார்த்தேன். கூட்டம் கட்டுப்படியாக வில்லை. பொறுமைக்கும் எல்லை உண்டல்லவா? ஒரு கிழமை நீ என் கரம் வந்தாய். லபக்கென்று உன்னை பதுக்கி விட்டேன். உன்னை ஒரு முறை சுவைத்தவர்கள் விடுவார்களா? உன்னைத் தேடி வியாழன் தோறும் நீ விற்பனையாகும் கடைகளை நோக்கி ஓடுகிறார்கள். எப்படி என் ஐடியா? இப்போ உன்னை நிம்மதியாய் ரசித்து சுவைக்க வழி பிறந்திருக்கிறது.

பெமிலா ராஜேஸ்வரன்
தெஹிவலை.

•

அன்பிற்குறிய தினமுரசே,
நீ தரும் அத்தனை அம்சங்களும் தரமானதாக அமைந்துள்ளன. அத்தோடு எக்ஸ்ரே ரிப்போர்ட், நாரதரின் அரசியல் கட்டுரை, அதிரடி அய்யாத்துரை போன்ற யதார்த்தமாக கூறப்படுவதும் மிகவும் அருமையாக உள்ளது. தினமுரசே, நீ நூறாண்டு வாழ்க என வாழ்த்தும்,

செல்வி.எஸ். நதிச்சந்திரிகா
வாகரை.



அன்பின் தினமுரசே,
எனது முதல் கண் வணக்கம் உனக்கு.
தேண் கிண்ணம் பகுதியில் என்னை பூரிக்க வைத்துவிட்டாய். வாராவாரம் புத்தம் புதிய கவிதைகளை தரும் காத்தான்குடி அனு, எம் சுரேஷ், ஆகியோர்களுக்கு எனது வாழ்த்துக்கள். வளரட்டும் உன் சேவை.

கருணா-கருணாநிதி-பொகவந்தலாவ.

•

ரசிகனின் கண்ணே மதுமிதா ஒவ்வொரு வாரமும் எங்களை வியக்க வைக்கிறது.
சாபிகான், சபான் ஸமீனா, டஹ்லான் ஆசிக்கான், ரிஸ்க்கான், நிஸ்லானா, நிசானி, ருஷ்தா, சிபான்-பட்டுகொடை.

•

ஒவ்வொரு வாரமும் என் இதயத்தில் உதயமாகும் தினமுரசே.... நீ நீடுழிகாலம் நாடோடி வாழ்க. மலர்க.

வ.மு.ஜவாஹிர்-கிண்ணியா-06.

•

அன்பின் தினமுரசே!
உனக்கு எழுதும் ஆக்கங்களை என்றோ ஒரு நாள் பிரசுரிப்பாய் என்ற நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்தேன். என் நம்பிக்கை வீண்போக வில்லை. நான் "ஆன்மீகம்" பகுதிக்கு எழுதியதை பிரசுரித்ததற்கு நன்றி. என் போன்றோருக்கு ஊக்கமளிக்கும் முரசே! நீ வாழிய பல்லாண்டு.




திருமதி. பாலாம்பிகை சிதம்பரநாதக் குருக்கள்
இரத்தினபுரி.

•

கவிதைப் போட்டிகளில் வரும் வியத்தகு கவிதைகள் யாவும் பிரமாதம். புதுக் கவிதையாளர்களின் கை வண்ணம் வெகு விமர்சையாக கவிதைப் போட்டியில் நடமாட வைக்கும் தினமுரசு வாரமலரின் ஊக்குவிப்பு என்றும் பாராட்டுக்குரியது.

சசிகலா செல்லத்தம்பி-கிண்ணியா-01.

•

அரசியலை அலசுவதில் இராஜதந்திரிக்கு நிகர் இராஜதந்திரியே!

ம-மு. ரஞ்சன் துரைசிங்கம்-நோட்டன் பிரிட்ஜ்.

•

வாரம் ஒரு முறை மலரும் மலர் நீ, அதில் தேன் குடித்திட துடித்திடும் வண்டு நான். பக்கம் ஒவ்வொன்றிலும் தேன் சுவை. அனைத்தும் வெகு ஜோர்.

ஆர்.ரமேஸ்- மட்டக்களப்பு.

•

வண்ணக்கலரில் எண்ணம் கவரும் தினமுரசே! முதலில் உன்னில் எதைப்பாராட்டுவதென்றே புரியவில்லை. சிரிக்கவும்- சிந்திக்கவும்- திகைக்கவும் வைக்கும் புதிய தகவல்கள், புதுமைத் தொடர், சிறுகதைகள், சினிவிசிட், தேன் கிண்ணம் என யாவுமே திகட்டாத அறுசுவை. குறுகிய காலத்திற்குள் எண்ணற்ற இதயங்களில் இடம்பிடித்துவிட்ட நீ மேலும் தரம் ஓங்க வஞ்சியவள் வாழ்த்துகின்றேன். வாழ்க...வளர்க.

செல்வி. சமீனா ஹுசைன்-தர்காநகர்.

# 35 வருடங்களின்பின் குடாநாட்டில் இம்முறை அதிகளவான மழைவீழ்ச்சி!

சமீபத்திய மழையால் யாழ்குடா நாட்டில் பெருமளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஐம்பத்தி ஏழாயிரத்து முன்னூற்று இருபத்தாறு குடும்பங்கள் யாழ் குடாநாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சாவகச்சேரி பகுதியில் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அங்கு பதின்மூவாயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஏழாயிருத்து தொளாயிரத்து ஐம்பத்து ஆறு குடும்பங்கள் பாதிக்கப் பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் ஆறாயிரத்து இருநூறு குடும்பங்கள் வெள்ளப் பாதிப்பால் இடம் பெயர்ந்தன.

கடும் மழை காரணமாக குடிநீர் நிலைகளுக்குள் கழிவு நீர், மலசலக்கூடக் கழிவுகள் என்பன புகுந்துவிட்டன. இதனால் வயிற்றோட்டம், வாந்திபேதி, நெருப்புக் காய்ச்சல், வயிற்றுளைவு போன்ற நோய்கள் பரவிவருகின்றன.

புதுவகையான காய்ச்சல் ஒன்று வடபகுதியில் பரவிவருவதாகக் கூறப் படுகிறது. அக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டு 250 பேர் வரை யாழ் பொது மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த 35 வருடங்களில் இல்லாத மழைவீழ்ச்சி இவ்வாண்டு யாழ்குடா நாட்டில் ஏற்பட்டுள்ளதாகவும் அதன் அளவு 1545.5 மி.மீற்றர் என்றும் யாழ் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

# சமரச முயற்சிகளுக்கு தற்போது இடமில்லை!

# தனிநபர்களது முயற்சிகள் வெற்றியளிக்காது!!

## தமிழ்நாடு முன்னாள் பொலிஸ் அதிபரின் விஜயம் புஸ்வாணம்

**தற்போதைய நிலையில் இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகள் அமைப்புக்குமிடையில் சமரச முயற்சிகள் நடப்ப தற்கான சாதகங்கள் காணப்படவில்லை.**

**இரு தரப்பினருமே யுத்தம் மூலம் ஒரு முடிவைக் காண்பதில் அக்கறை கொண்டிருப்பதையே நிலமைகள் வெளிப்படுத்துகின்றன.**

வடக்கில் நடைபெறும் கூட்டங்களிலும் கருத்தரங்குகளிலும் புலிகள் அமைப்பினர் யுத்தத்திற்கான அறைகூவல்களை விடுவித்து வருகின்றனர்.

இராணுவத்தினரோடு தொடர்பு வைத்திருப்பதாக கூறி ஏழு பேருக்கு கடந்தவாரம் மரண தண்டனை வழங்கிய புலிகள் அமைப்பினர் அதன்பின்னரும் இரண்டு பேருக்கு மரணதண்டனை வழங்கி யுள்ளனர்.

புலிகள் அமைப்பினரின் சோதனை நிலையம் ஒன்று வவுனியா ஓமந்தையில் இருக்கிறது.

அங்கு வைத்து, பொதுமக்கள் முன்னிலையில் மரியதாஸ் தேவதாஸ் என்பவருக்கு புலிகளால் மரணதண்டனை வழங்கப்பட்டது.

தமது செய்திகள் யாழ் குடாநாட்டை விட்டு வெளியே செல்லாமல் தடுப்பதில் புலிகள் தனிக் கவனம் கொண்டுள்ளனர்.

தமது யுத்தத் தயாரிப்புக்கள், மற்றும் முக்கிய முகாம்கள் பற்றிய தகவல்கள் வெளியே தெரியாமல் தடுக்கும் வகையில் சமீபத்திய பகிரங்க மரணதண்டனைகள் வழங்கப்பட்டன என்று கூறப்படுகிறது.

யுத்தத்திற்கான தயார் நிலை புலிகள் அமைப்பினர் மத்தியில் காணப்படுகிறது.

வடக்கு-கிழக்குப் பிரச்சனை ஒரு பயங்கரவாதப் பிரச்சனையே என்று ஜனாதிபதியால் மீண்டும் திட்டவட்டமாக அறிவிக்கப்பட்ட பின்னர் அரச தரப்பிலும் சமரச முயற்சிகள் பற்றிய பேச்சுக்கள் மறைந்துவிட்டன.

இதே சமயம் சில தனிநபர்கள் தாம் சமரச முயற்சியில் ஈடுபடப் போவதாக கூறிக்கொள்வதும், சில காலத்திற்கு அவர்களது பெயர் பத்திரிகைகளில் இடம் பெறுவதும் பின்னர் சம்பந்தப்பட்டவர்கள் பற்றிய பேச்சுக்களே மறைந்துவிடுவதும் வழக்கமாகும்.

வெளிநாடுகளில் இருந்தும் சில தனிநபர்கள் மற்றும் குவேக்கர் சமாதானக் குழு போன்ற அமைப்புக்கள் சமரசம் செய்யப் போவதாக முன்னர் வந்து போயின. அதனால் சம்பந்தப்பட்டவர்களது பெயர்களும் அமைப்புக்களது பெயர்களும் பிரபலமாகினவே தவிர போர் தொடர்வதில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. போரிடும் தரப்புக்களின் மனப் போக்கு களிலும் மாற்றங்கள் ஏற்படவில்லை.

சில பத்திரிகைகள் ஏதோ மாற்றம் ஏற்படப் போகிறது, பெரும் முயற்சி நடக்கிறது என்பது போன்று செய்திகளை வெளியிட்டு மக்களிடம் எதிர்பார்ப்பை உருவாக்கிவிடுகின்றன.

அது மட்டுமல்லாமல் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாத சில தனிநபர் களுக்கும் தகுதி மீறிய முக்கியத்துவம் கொடுத்து விடுகின்றன.



மோகன்தாஸ்

சமீபத்தில் தமிழ் நாடு முன்னாள் பொலிஸ் அதிகாரி திரு. மோகன்தாஸ் கொழும்பு வந்திருந்தார்.

இவர், தமிழ்நாடு முதலமைச்சராக அமரர் எம்.ஜி.ஆர் பதவி வகித்தபோது தமிழ்நாடு பொலிஸ் துறை இயக்குநராக இருந்தவர்-எம்.ஜி.ஆருக்கு நெருக்கமானவர்.

தமிழ்நாட்டில் இருந்த இலங்கைத் தமிழ் அமைப்புக்களது நடவடிக்கைகள் பற்றி இலங்கையின் உளவுப்பிரிவினருக்கு தகவல் கொடுத்தவர் என்று அப்போது தமிழ் அமைப்புக்களால் கருதப்பட்டவர்.

புலிகள் அமைப்பினரும் அவர் மீது சந்தேகம் கொண்டிருந்தனர்.

எம்.ஜி.ஆர் மறைந்தபின்னர் மோகன தாஸ் ஓரம் கட்டப்பட்டார்.

பின்னர் எம்.ஜி.ஆர் பற்றிய ஒரு புத்தகம் எழுது வெளியிட்டார்.

அதில் தன் சுயபுராணங்களை அதிகம் கலந்து தன்னை அசாதாரண திறமை யுள்ளவர் போல் காட்டிக்கொண்டார்.

தமிழ் அமைப்புக்கள் பற்றியும் அவர் களோடு தனது அணுகுமுறைகள் பற்றியும் உண்மைக்கு மாறாக எழுதி, தன்னைப் பற்றிய புகழை வளர்க்க முற்பட்டுள்ளார் என்று தமிழ் கட்சி வட்டாரங்கள் விமர்சித்தன.

தற்போது மோகனதாஸ் இலங்கை வந்து திரும்பியுள்ளார்.

சமரச முயற்சிகள் பற்றிய அவரது பேச்சை யாரும் கவனத்தில் எடுக்கவில்லை.

புலிகள் அமைப்பினரோடும் மோகன தாசால் தொடர்பு கொள்ள முடியவில்லை. வழக்கமாக இவ்வாறானவர்களோடு புலிகள் பேச்சு நடத்துவதில்லை.

இலங்கை அரசுக்கும் திரு.மோகன் தாசின் இன்றைய நிலை தெரிந்தே இருந்தமையால் அவரது முயற்சிகள் பற்றிய பேச்சுக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் படவில்லை.

இந்திய அரசின் ஆதரவும் மோகன் தாசுக்குக் கிடையாது.

ராஜீவ் கொலை விவகாரத்தில் இந்திய உளவு நிறுவனங்களுக்கு பகிரங்கமாகப் புத்தி சொல்லப் போய் அவற்றின் வெறுப் பையும் சம்பாதித்து வைத்திருக்கிறார்.

திரு.மோகன்தாஸ் மலையாள இனத் தைச் சேர்ந்தவர். அதனால்தான் அவரை எம்.ஜி.ஆர் நம்புகிறார். தமிழ் பேசும் மக்களது உரிமைப் போராட்டம் பற்றி அவருக்கு அக்கறை கிடையாது என்றே அன்று இலங்கைத் தமிழ் அமைப்புக்கள் கூறிக்கொண்டன.

சென்னை அடையாறுப் பகுதியில் இருந்த புலிகள் அமைப்பின் அலுவலகத் திற்குள் புகுந்து புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனை கைது செய்து அவமானப்படுத்தியவர் மோகன்தாஸ்.

அச்சமயத்தில் தமிழ்நாட்டில் இருந்த வேறு சில தமிழ் அமைப்புக்களது தலைவர்களையும் கைது செய்து அவர் அவமானப்படுத்தினார்.

அச்சமயம் அவருக்கு எதிரான கண்டனங்களும் எழுந்தன.

எனவே-புலிகள் அமைப்பினரோ ஏனைய தமிழ் அமைப்புக்களோ மோகன் தாஸ் பற்றி நல்ல அபிப்பிராயம் கொண்டி ருக்கவில்லை. அவ்வாறான ஒருவர் சமரச முயற்சியில் இறங்கப்போவதாக வருவதும், அப்படி இருக்குமோ இப்படி இருக்குமோ என்று எதிர்பார்ப்புக்களை உருவாக்குவதும் அர்த்தமற்றவை என்பதே அரசியல் விமர்சகர்களது கருத்தாகும்.

தற்போதைய நிலையில் பேச்சுக்கள், சமரச முயற்சிகள் என்பவை சாத்திய மில்லை என்பதே வெளிப்படையாய் தெரியும் சூழ்நிலையாகும்.

பாரிய மோதல் ஒன்று விரைவில் ஏற்பட்டு அதன்பின்னரே போரின் போக்கு கள் தீர்மானிக்கப்படப் போகின்றன.

போர் வேண்டாம் என்னும் கோரிக்கை கள் நியாயமானவையாக இருக்கலாம். ஆனால் போர் தொடரும் என்பதே உண்மையான நிலவரம். ■

## தினமுரசு செய்திகளுக்கு கைமேல்பலன்!

## அதிகாரிகள் நடவடிக்கை

(தினமுரசு நிந்தவூர் நிருபர்)

நிந்தவூரிலுள்ள முக்கிய வீதிகளுள் ஒன்றான மத்திய வீதியில் (ஆஸ்பத்திரிவீதி) மழைநீர் தேங்கி நிற்கும் அவலத்திற்கு உடனடித்தீர்வு கிடைத்துள்ளது.

'தினமுரசு' கடந்த டிசம்பர் 5-11 இதழில், இந்த வீதியின் அவல நிலையைப் படத்துடன் சுட்டிக்காட்டியிருந்ததன் பலன் இது என்று பலரும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பராமரிப்பின் கீழுள்ள இந்த வீதி அண்மை யில்தான் பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டிருந்தும், இந்த வீதியின் மூங்கிலடி சந்திப்பகுதியில் ஒரு சிறு மழை பெய்தால்கூட நீர் தேங்கி போக்குவரத்துக்குப் பெரும் இடையூறாக இருந்து வந்தது.

"புனரமைக்கப்பட்டது வீதி, தேங்கி நிற்கிறது மழைநீர்! மூன்று லட்சம் செலவிட்டும் முழுமையற்ற பணி"- எனும் தலைப்பில் இந்த அவலம் குறித்த செய்தியை படத்துடன் 'தினமுரசு' வெளியிட்டது.

இந்த செய்தியை அடுத்து மக்களின் இக்குறையைத் தீர்க்க முன்வந்தார் நிந்தவூர் பிரதேச செயலாளரும், பிரதேச சபை விசேட ஆணையாளருமான ஜனாப்.ஐ.எம் ஹனிபா!

பல நாட்கள் தேங்கி நிற்கும் நீரை உடனடியாக வடிந்தோடச் செய்வதற்கான நடவடிக்கையில் அவர் இறங்கினார்.

வடிகான்கள் தோண்டப்பட்டு தற்பொழுது தேங்கி நின்ற நீர் வடிந்தோடச் செய்யப்பட்டுள்ளது.

குறைகள் சுட்டிக்காட்டப்பட்டதும், உடன் களத்தில் இறங்கி மக்கள் குறை தீர்க்கும் பிரதேச செயலாளர் ஜனாப். ஹனீபா போன்றவர்களின் துடிப்பான செயல்பாடுகள் மூலம் அரசின் நிருவாகப்பரவலாக்கம் வெற்றியளிக்குமெனப்பலரும் பாராட்டுத் தெரிவித்தனர்.

குறையைத்தீர்த்த பிரதேச செயலாள ரையும், அதனை ஆணித்தரமாகச் சுட்டிக் காட்டிய தினமுரசையும் நிந்தவூர் மக்கள் வெகுவாகப் பாராட்டுகின்றனர்.

இதே வேளை வீதி அபிவிருத்தி அதிகார சபையினரும் இந்தவீதியின் குண்டு, குழிகளை நிரப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந் ததையும் அவதானிக்க முடிந்தது.

தவிரவும், நிந்தவூருக்கு வரும் வெளியூர் தபால்களின் தாமதம் குறித்து "நத்தை வேக தபால்சேவை! துரித சேவையாக மாறுவது எப்போது?" எனும் தலைப்பில் 'தினமுரசு' அண்மையில் (நவ 28-டிசம்பர் 04) செய்தி வெளியிட்டிருந்தது வாசகர்களறிந்ததே!

இந்தச் செய்தி தபால் திணைக்கள உயரதிகாரிகளின் கவனத்தை ஈர்த் திருக்கின்றது.

தற்சமயம் நிந்தவூர் தபாலகத்தை வெளியூர் தபால் பொதிகள் வந்தடை வதிலுள்ள தாமதங்களுக்கான காரணங்கள் ஆராயப்பட்டுவருகின்றன.

கிழக்கு மாகாண பிரதி தபால் மா அதிபர் இது குறித்து சம்பந்தப்பட்ட சகல பிரிவு அதிகாரிகளிடமிருந்தும் விளக்கங் களைக் கோரியுள்ளாரெனத் தெரிய வருகின்றது.

பெரும்பாலும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் நிந்தவூர் வந்தடைய வேண்டிய தபால் பொதிகளின் தாமதக் குறைபாடு நீங்கிவிடுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. தினமுரசுக்கு ஒரு சபாஷ்! ●

## அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னான்டோ பெப்ரவரியில் மீண்டும் யாழ் விஜயம்!

கொழும்பு அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர், கென்னத் பெர்னான்டோ எதிர்வரும் பெப்ரவரி மாதம் மீண்டும் யாழ் விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக தெரிகிறது.

எற்கனவே 1992 ஜனவரியில் கிளாலிப் பாதை வழியாக அவர் யாழ்ப்பாணம் சென்றார்.

புலிகள் அமைப்பினர் தலைவர் பிரபாகரனுடன் பேச்சு நடத்தியோடு, புலிகளின் வசம் இருந்த இரு பொலி சாரையும் அழைத்து வந்தார்.

பாதிக்கப்பட்ட தேவாலயப் பகுதிகளைப் பார்வையிடவே அவர் முக்கியமாக யாழ் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இயங்காத ஃபாக்ஸ்

(காரைதீவு நிருபர்)

சிவில் நிர்வாகம் மீளக் கொண்டுவரப்பட்டுள்ள அம்பாறை மாவட்டத்திலுள்ள 17 பிரதேச செயலகங்களுக்கு ஃபாக்ஸ் கருவி வழங்கி 6 மாதங்களாகின்றன.

ஆனால் இதுவரை இதனால் எந்தவித பலனும் ஏற்பட்டதாக தெரியவில்லை. குறிப்பாக கரையோரப் பிரதேச அலுவலகங்களிலுள்ள ஃபாக்ஸ் கருவி இயங்காமல் இருக்கிறது. இதுபற்றி பிரதேச செயலாளர் ஒருவரிடம் வினாவியபோது நீங்கள் ஏன் ஃபாக்ஸ் கேட்கிறீர்கள், ரெலிபோனே வேலைசெய்யுதில்லை என அலுத்தவாறு பதில் சொன்னார்.

இயங்காத ஃபாக்ஸ் கருவி குறித்து அம்பாறை மாவட்ட மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

## அமைச்சர் தொண்டாவுக்கு எதிரான செய்திகள்! யாழ்குடாநாட்டு பத்திரிகைகளில் முக்கியத்துவம்!!

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் பகிரங்கத்துக்கு வந்துள்ளதால் தினசரிகளிலும் அதுபற்றிய செய்திகள் தினமும் வருகின்றன.

இதே வேளை விடுதலைப்புலிகள் அமைப்பினரின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ் குடாநாட்டில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளில் அமைச்சர் தொண்டமானுக்கு எதிராக தெரிவிக்கப்படும் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

ஈழநாதம் பத்திரிகை, அமைச்சர் செல்லச்சாமி ஐக்கிய தேசியக் கட்சியோடு இணைவாரா, என்று சந்தேகம் எழுப்பியுள்ளது.

புலிகள் அமைப்பின் முக்கியஸ்தர் திரு.வே.பாலகுமாரன் முன்னர் ஈழநாதம் பத்திரிகையில் எழுதிய கட்டுரை ஒன்றில் திரு. தொண்டமான் தனது குடும்பத்தின் ஆதிக்கத்திற்கு கட்சிக்குள் இடமளிப்பதாக தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இ.தொ.காவுக்குள் ஏற்பட்டுவரும் கருத்து முரண்பாடுகள் பகிரங்கமாகியிருப்பதால் அக் கட்சியின் தீவிர உறுப்பினர்கள் கவலை கொண்டுள்ளனர்.

## யாழ்குடாநாட்டில் அமரர் எம்.ஜி.ஆருக்கு நினைவஞ்சலிக் கூட்டங்கள்!



நேசித்த மக்களோடு மக்கள் திலகம்

மறைந்த தமிழக முதல்வர் அமரர் எம்.ஜி.ஆரின் 6வது நினைவுதினக் கூட்டங்கள் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டன.

கடந்த டிசம்பர் 24ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற எம்.ஜி.ஆர் நினைவஞ்சலிக் கூட்டத்தில் புலிகள் அமைப்பின் பேச்சாளர்களும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் பாசையூர், குருநகர் பகுதிகளில் உள்ள அமரர் எம்.ஜி.ஆர் உருவச் சிலைகளுக்கும் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

புலிகள் அமைப்பின் வளர்ச்சியில் எம்.ஜி.ஆர் முக்கிய பங்கினை வகித்தார் என்று புலிகள் தமது செய்திக் குறிப்பொன்றில் தெரிவித்துள்ளனர். ■

## மூளைக் காய்ச்சல்

சமீபத்தில் பெய்த மழை காரணமாக கிளிநொச்சியில் மூளைக்காய்ச்சல் பரவி வருகிறது.

மூளைக்காய்ச்சலால் ஒரு பெண் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருமலையில் தீவிர சோதனை

திருமலை நகரில் பாதுகாப்புப் படையினர் தீவிர சோதனை நடவடிக்கை களை மேற்கொண்டு வருகின்றனர்.

சோதனை நிலைகளிலும் தீவிர கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப் படுகின்றன.

இதனால் இரவு நேர மக்கள் நடமாட்டங்கள் நகரில் குறைந்து காணப்படுகின்றன. ●

விளம்பரப் பகுதி

## மலையாள மாந்திரீகம்



உலகளாவிய ரீதியில் 27 வருடங்களாகத் தொடர்ந்து உண்மைச் சேவையாற்றி வரும் உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி P.K.சாமி, எஸ்ஸோஸியேட் பிரைவேட் லிமிட்டெட் டாரின் சேவையில் கைரேகைகள், ஜாதகங்கள், மாந்திரீக ரீதியில் உங்கள் பிரச்சனைகளுக்கு நிவாரணம் பெற இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். தொழில் பிணக்குகளா? காதல் கிலேசங்களா? வசியங்களா? கணவர், மனைவி, குடும்பப் பிரச்சனைகளா? ஆஸ்த்துமா போன்ற தீராத நோய்களா? இரகசிய ஆண், பெண் நோய்களா? வெளியூர் வாய்ப்புப்பெற வேண்டுமா? என்ன குறை?

P.K. SAAMY
ASSOCIATE PVT. LTD.,
**33, Daily fair Complex,**
**NUWARA ELIYA.**

**Dial: 052-2508 & 3093**
**AND**
**072-26088, 078-61933**

FAX: 0094-523093

ஆரம்ப மனுச் செய்பவர்களுக்கு, தற்கால பலாபலனைத் தங்கள் பிறந்த திகதி, மாதம் மாத்திரம் எழுதியனுப்பினால் தற்போதைய அல்லது கடந்த ஆண்டுகளின் பலனை இலவசமாக அனுப்புவோம். விஷேடமாக வெளிநாட்டு ஆடர்கள் உடன் கவனிக்கப்படும். வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும்; துர்க்கையின் அக்கினிக் குண்டல பூஜையில் கலந்து உண்மை அறியலாமே.


இம்மாதம் 20 தொடக்கம் 31 திகதிவரை கொழும்பு மாநகரில் சந்திக்கலாம்.

| | |
|---|---|
| Room No. 33 | அறை இல. 33 |
| Charliman Beach Inn | சார்ளிமன் பீச் இன் |
| No. 26, Charliman Road, | இல. 26, சார்லிமன்ட் றோட், |
| Colombo-6. | வெள்ளவத்தை. |

*Phone: 052-2508, 052-3093, 072-26088, 078-61933, 078-71243.*

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்


## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து
(30.12.1993)



NAZRIN BANU

*இல.180/11, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு 14ஐச் சேர்ந்த நவாஸ்-சாஜிதா தம்பதிகளின் செல்வப் புதல்வி நஸ்ரின் பானு தனது முதலாவது பிறந்தநாளை 30.12.1993 அன்று தனது இல்லத்தில் வெகு குதூகலமாய் கொண்டாடினார். இவரை அன்பு வாப்பா, உம்மா, வாப்பம்மா, உம்மம்மா, அப்பாமார், உவைஸ், பூச்சாச்சா, இம்தியாஸ் சாச்சா, நிலாம் சாச்சா, ரமிசா மாமி, நவாஸ் மாமா, நஜீமா மாமி, அருமை மச்சான், ரிமாஸ், கதீஜா பெரியம்மா, சாப்தீன் பெரியப்பா, நவாஸ் அலி மாமா, இர்ஷாத் நானா, இம்ரான் நானா மற்றும் உற்றார் உறவினர் நண்பிகள் ஆகியோர் அல்லாஹ்வின் அருளால் பாத்திமா நாயகி வழி நடந்து சீரும் சிறப்புடன் நீடுழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.*

## வங்கியின் பெயரில் தமிழுக்குப் பங்கம்

அரச கரும மொழியாகிய தமிழில் செய்யப்படும் எழுத்துக் கொலைகள்...ஓ....மன்னிக்கவும், எழுத்துப் பிழைகள் எங்கும் தொடர்கதையாகவே உள்ளன.

ANASAVI STAMP SAVINGS CREDIT SLIP
...தி முத்திரை சேமிப்பு வரவுத் கன்டு
..................199...
AMPARA REGIONAL RURAL
DEVELOPMENT BANK
அம்பாரை பிராந்திய கிராமிய அபிவிருத்தி
வங்கி



# வளர்ந்துவரும் வை.கோவின் செல்வாக்கு! ஆளும் கட்சிமீது பாயும் கலைஞர்!!



கருவின் குற்றம் என்று கவிதை எழுதியதற்காக தி.மு.கவில் இருந்து வெளியேற்றப்பட்டவர் நாஞ்சில் மனோகரன்.

கட்சிக்குள் குடும்ப ஆதிக்கம். வை.கோபால்சாமிக்குத்தான் செல்வாக்கு இருக்கிறது. என்றெல்லாம் வெளியே இருந்து பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தார்.

தி.மு.கவின் துணைப்பொதுச் செயலாளர் என்ற பதவியில் இருந்த தன்னோடு கலந்து பேசாமல் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டதாகவும், கட்சியின் சொத்து விபரங்கள் மறைக்கப்படுவதாகவும் மனோகரன் கூறிவந்தார்.

நாஞ்சில் மனோகரனை கட்சியில் இருந்து நீக்கியது நியாயமல்ல என்று வை.கோபால்சாமி வாதாடினார்.

இப்போது வை.கோ.தி.மு.கவில் இருந்து வெளியேற்றப்பட்டுவிட்டார்.

ஆனால் நாஞ்சில் மனோகரன் மீண்டும் தி.மு.கவில் சேர்ந்துவிட்டார்.

இதனால் வை.கோபால்சாமி ஆதரவாளர்கள் நாஞ்சில் மனோகரன் மீது கோபம் அடைந்துள்ளார்கள்.

"திரைமறைவில் நடந்தது என்ன? வாங்கிய தொகை எவ்வளவு?" என்று அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

வை.கோபால்சாமியின் பக்கத்தை பலவீனப்படுத்தவே நாஞ்சில் மனோகரனை கலைஞர் மீண்டும் கட்சியில் இணைத்துள்ளார்.

கருவின் குற்றம் என்று கவிதை எழுதி தன் குடும்பத்தையே இழிவு செய்தவர் நாஞ்சில் மனோகரன் என்று கூறிய கலைஞர் மீண்டும் அவரை கட்சியில் சேர்த்திருக்கிறார்.

அரசியலில் எதுவும் நடக்கலாம் என்பது இதுதான்.

அதே சமயம் வை.கோபால்சாமிக்கு தமிழகமெங்கும் ஆதரவு பெருகிவருகிறது.

அவரது கூட்டங்களில் பெரும்திரளான மக்கள் கலந்து கொள்கின்றனர்.

இது தர்மயுத்தம் நிச்சயம் நாங்கள் வெற்றி பெறுவோம் என்கிறார் வை.கோபால்சாமி.

அண்ணாவின் கொள்கைகளையும், இலட்சியங்களையும் நிறைவேற்றும் உறுதியோடு இந்தப் பயணத்தைத் தொடங்கியிருக்கிறோம்.

இதில் எத்தனை இடர்கள் துயரங்கள் வந்தாலும் உதறித்தள்ளிவிட்டு பயணம் தொடர்வோம் என்று வை.கோபால்சாமி உற்சாகமாகப் பேசுகிறார்.

இதே வேளை கலைஞர் மு.கருணாநிதி தமிழக ஆளும் கட்சிமீது குற்றம் சாட்டியுள்ளார். தி.மு.க உள்விவகாரத்தில் தமிழக அரசு பாரபட்சமாக நடந்து கொள்வதாக அவர் கூறியுள்ளார்.

மக்களின் சிந்தனையை திருப்புவதற்கு தி.மு.க உள்விவகாரங்களை அ.தி.மு.க பயன்படுத்துகிறது. விலைவாசி உயர்வுக்கு எதிராக மாபெரும் போராட்டம் வெடிக்கும் என்று கலைஞர் எச்சரித்துள்ளார்.

தமிழ்நாட்டில் மயிலை-பெருந்துறை சட்டமன்ற தேர்தல் வரப்போகிறது.

அன்று எம்.ஜி.ஆர். தனக்கிருந்த மக்கள் செல்வாக்கை நிரூபித்தது போல வை.கோவும் தேர்தலில் குதிப்பாரா என்று அரசியல் வட்டாரங்கள் கேள்வி எழுப்புகின்றன.

முன்னர் தி.மு.கவில் இருந்து பிரிந்த ஈ.வெ.கி சம்பத் போன்றவர்கள் தனிக்கட்சி தொடங்கி காணாமல் போனார்கள்.

எம்.ஜி.ஆர் மட்டுமே எழுந்து நின்றார்.

வை.கோ எவ்வாறான ஒரு அமைப்பை உருவாக்கப் போகிறார் என்பதே தமிழக அரசியலில் இன்றுள்ள எதிர்பார்ப்பாகும்.


## கிறிஸ்மஸ் புதுவருட வாழ்த்துக்கள்

*"அவர் ..... என்றென்றைக்கும் அரசாளுவார். அவருடைய இராஜ்ஜியத்துக்கு முடிவிராது"*
(லூக்கா 1:33)

*"அவள் ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி, அவர்களை இரட்சிப்பார்."*
(மத்தேயு 1:21)

*என்றென்றைக்கும் முடிவற்ற, கிறிஸ்துவின் இராஜியத்துக்குள் நுழைந்திருக்கும் தபால் மூல வேதபாட மாணவர்களுக்கும், நண்பர்களுக்கும் மாட்சிமைமிக்க கிறிஸ்மஸ் வாழ்த்துக்களும், மங்களகரமான புதுவருட வாழ்த்துக்களும் உரித்தாகுக.*

ரி.ஜ.இன்பநாதன்
ஆசிரியர்:- P.0.BOX- 68, NUGEGODA.
(ADVT)


## புகார் பெட்டி

இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது ஒரு வங்கியின் சனசக்தி முத்திரைக்கான சேமிப்பு வரவுத்துண்டாகும். ஆனால் இவ்வரவுத் துண்டில் உள்ள எழுத்துப் பிழைகளை எங்கே சென்று யாரிடம் சொல்வது என்று திண்டாட வேண்டியுள்ளது.

இதில் ஒரு வேடிக்கையென்னவென்றால் குறிப்பிட்ட வங்கியின் பெயர்கூட சரியான தமிழ் எழுத்துக்களிலில்லை. இன்னுமொரு முக்கிய விடயம் என்னவென்றால் தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழ், முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் கல்முனைப் பகுதியில்தான் இச் சேமிப்பு வரவுத்துண்டு புழக்கத்திலுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் இதனை உடன் கவனிக்கவேண்டும்.

எஸ்.ரி.எம். பஸ்வாக்-கல்முனை-05.

JANASAVI STAMP SAVINGS CREDIT SLIP
சனசக்தி முத்திரை சேமிப்பு வரவுத் கன்டு
AMPARA REGIONAL RURAL DEVELOPMENT
அம்பாரை பிராந்திய கிராமிய அபிவித்தி வங்கி
Br

## அகதிகளுக்கான உலர் உணவு நிறுத்தப்படுமா? மன்னார் அகதிகள் மத்தியில் அச்சம்!!
(எமது மன்னார் நிருபர்)

தற்போது அரசினால் வழங்கப்பட்டு வரும் உலர் உணவுப் பொருட்கள், எதிர்வரும் ஜனவரி மாதமளவில், படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள மன்னார் தீவுப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வாழும் முஸ்லிம் அகதிகளுக்கு நிறுத்தப்படவுள்ளதாக சில தகவல்கள் கூறுகின்றன.

மன்னார்தீவிலுள்ள மன்னார் நகரம், தாராபுரம், எருக்கலம்பிட்டி, புதுக்குடியிருப்பு, கரிசல் போன்ற பகுதிகளில் தற்போது சில அகதிகள் மீளக் குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

இப்பகுதிகளில் பொலிஸ், மற்றும் இராணுவ வீரர்கள் இரவு பகலாக காவல் இருந்து வருகின்றனர். எனினும் மிகவும் குறைந்த அளவான மக்களே மீளக் குடியேறியுள்ளனர்.

பல ஆயிரக்கணக்கான மக்கள், அச்சம், தொழில் பிரச்சினை, கல்வி வசதி, சுகாதார வசதி குறைவு உட்பட பல்வேறு பிரச்சனைகளின் காரணமாக வெளி மாவட்டங்களில் தங்கியுள்ளனர்.

வெளி மாவட்டங்களில் தங்கியுள்ள மன்னார்தீவுப் பகுதி மக்களுக்கே எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் உலர் உணவுப் பொருட்கள் இடைநிறுத்தம் செய்யப்படலாம் எனத் தெரிகிறது. இதையொட்டி பல அகதிகள் அச்சமும் கவலையும் கொண்டுள்ளனர்.

இதனிடையே ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் உலர்உணவுப் பொருட்கள் வழங்ககடும் தாமதம் ஏற்பட்டுவருகிறது. இதனால் பல ஏழைகளின் வயிறு உலர்ந்து வருகிறது. அகதிகள் மீது இவ்வளவு "கரிசனையுடன்" செயற்பட்டு வரும் அதிகாரிகளுக்கு தங்களது மனவருத்தத்தினை தெரிவித்துக் கொள்கின்றனர் வடபகுதி அகதிகள்!

## அனுராதபுரியில் ஒரு வித்தியாலயம்!

அழகு நகராம் அனுரதபுரியின் ஒரு நாயகமாகக் கொலுவீற்றிருப்பது விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயம். வரும் வருடத்தில் பொன்முடி தரிக்கத் தயாராகிக் கொண்டிருக்கின்ற இவ்வறிவாலயமும்..... அதன் முன்னே காடு மண்டிக்கிடக்கின்ற கதிரேசன் ஆலயத்தின் கோபுரக் கலசங்களும் அனுராதபுரியில் பண்டைய தமிழரின் செல்வாக்கினை கட்டியம் கூறி நிற்கின்றன.

50 வருடச் சிறப்பினை பூர்த்தி செய்யக் காத்திருக்கின்ற ஒரு தமிழ் பாடசாலையாக அனுரதபுரியில் திகழ்வது விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயமே!

நூற்றுக்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் கல்வி பயிலும் இப்பாட சாலையின் பெருங்குறையாக விளங்குவது தளபாடமின்மை ஆகும். வருங்காலச் சமுதாயத்தின் சிற்பிகள் நிலத்தில் அமர்ந்து கல்வி கற்கும் நிலையைக் காணுகையில் இதயம் வேதனையை நெஞ்சில் விதைக்கின்றது.

இனியாவது உரியவர்கள் இதைக் கவனத்திற்கொள்வார்களா? மலரும் புத்தாண்டிலாவது இக்குறை தீருமா? தளபாடம் வந்து சேருமா?

எஸ்-பாத்திமா ஸப்ரீனா
அனுராதபுதம்.

**கொ**ழும்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாடு நடந்துமுடிந்துள்ளது.

இம்முறை சகோதர கட்சிப் பிரதிநிதிகள் பார்வையாளர்களாக அழைக்கப்படவில்லை.

கடந்த மூன்று வருடங்களாக ஐ.தே.க வருடாந்த மாநாடுகளில் சக அரசியல் கட்சிப் பிரதிநிதிகளையும் அழைத்து மாநாட்டில் உரையாற்றவும் சந்தர்ப்பம் கொடுத்து வந்தார்கள்.

இம்முறை ஐ.தே.கட்சியின் நீண்டகால அரசியல் கூட்டாளியான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை.

ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக

அதனால் பத்திரிகைகளை மட்டும் குறை சொல்ல முடியாது. அமைச்சர் தொண்டமான் வெளியிட்ட கருத்துக்களும் பிரச்சனைகள் சிக்கலாகின்றனவோ என்ற எண்ணத்தையே உருவாக்கியிருந்தன.

எதிர்க்கட்சித் தலைவர்களையும் அமைச்சர்

ஏழுபேரும் அதிரடியாக அடுத்த பக்கம் சென்றதற்கு பல்வேறு சமாச்சாரங்கள் பேசப்படுகின்றன.

எப்படியிருந்த போதும் இ.தொ.காவின் பலம் காட்டி பணிய வைக்கும் அரசியல் தந்திரத்தை அந்த ஏழுபேரும்

இரண்டு, திரு. தொண்டமானுக்கு மலையகத்தை விட்டுக்கொடுத்திருக்கிறார் என்பது.

இந்த இரு கண்டனங்களுமே தவறானவை. உண்மையில்லாதவை.

ஆயினும், முன்னாள் ஜனாதிபதியின்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

அரசியல்வாதிகள் மீதும் மக்களுக்குள்ள குறைந்தளவு மரியாதையையும் இல்லாமல் செய்துவிடும்.

மிக முக்கியமான கட்டத்தில்,

# ஒரே திசையில் அரசும்-புலிகளும்!

# போர் தொடரும் என்பதே முடிந்த முடிவு!

— நாரதர் —

ஜனாதிபதி விஜேதுங்காவை மாநாடு அங்கீகரித்துள்ளது.

அடுத்த தேர்தலுக்கு கட்சியை தயார் செய்வதற்கான மாநாடாகவும் அது அமைந்தது.

மாநாட்டில் ஜனாதிபதி ஆற்றிய உரையின் மூலம் புலிகள் அமைப்புடன் தற்போதைக்கு பேச்சு நடத்தும் எண்ணம் அரசுக்கு கிடையாது என்பது தெளிவாகியிருக்கிறது.

மறுபுறம் புலிகளும் பேச்சுக்கு தயாராக இல்லை என்பதும் அவர்களது யுத்தத் துக்கான தயாரிப்பு நடவடிக்கைகள் மூலம் தெளிவாகியிருக்கிறது.

ஆனால் புலிகள் அமைப்பினருக்கு இப்போது ஒரு சாதகம். அரசு பேச்சுக்கு தயாரில்லை. அதனால் போர் தவிர வேறு வழியில்லை என்று அவர்கள் சொல்லக்கூடிய ஒரு சூழல் ஏற்பட்டுள்ளது.

■

தொண்டா சந்தித்துப் பேசி வந்தார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தலைவர் திரு. காமினி திசாநாயக்காவுடன், அவரை பகிரங்கமாக பாராட்டும் அளவுக்கு ஒரு புரிந்துணர்வையும் எற்படுத்தியிருக்கிறார்.

அரசியல் ரீதியில் அரசாங்கத்திற்கு நிர்ப்பந்தம் கொடுக்கும் ஒரு தந்திரோபாயத்தை திரு.தொண்டமான் கடைப்பிடித்தார் என்று சில விமர்சகர்கள் கூறுகின்றனர்.

"எங்கள் கோரிக்கைகளை அரசாங்கம் கவனிக்க வேண்டும். இல்லாவிட்டால் எதிர்த்தரப்புக்கு நாங்கள் செல்ல வேண்டியிருக்கும்." என்பது போன்ற சமிக்கையே அமைச்சர் தொண்டாவின் போக்கில் வெளிப்பட்டதாக அவர்கள்

பலவீனப்படுத்திவிட்டனர்.

அதே சமயம் அந்த ஏழு பேரின் அரசியல் எதிர்காலமும் கேள்விக்குள்ளாகி விட்டது.

இ.தொ.காவுக்கும், ஆளும்கட்சிக்கும் இடையே தொடர்ந்து நட்புறவு நீடிப்பதால் ஏழு பேருக்கும் தர்மசங்கடம்.

இதே வேளை திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும் ஒரு தர்மசங்கடமான நிலமை.

திரு.தொண்டமான் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை சந்தித்துப் பேசினார்.


திரு.தொண்டமானின் ஆதரவை ஆளும் கட்சிக்கு இல்லாமல் செய்துவிட்டால் அடுத்த

அணுகுமுறைகளும், பேச்சுக்களும் அவர் தமிழ் பேசும் மக்களுக்கு அதிகம் விட்டுக்கொடுக்கிறார் என்று இனவாதிகள் சிலர் பிரச்சாரம் செய்ய ஓரளவு சாதகமாக இருந்தன.

பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்த போதும் இ.தொ.காவுக்கும் ஐ.தே.கட்சிக்கும் இடையே பிரச்சனைகள் இருந்தன. திரு. தொண்டமான் முன்வைத்த கோரிக்கைகள் அனைத்தையும் பிரேமதாசா உடனே நிறைவேற்றி முடித்தார் என்று சொல்ல முடியாது.

ஆயினும், இரு கட்சிகளுக்கும் இடையில் இருந்த பிரச்சனைகள் வெளியே வராதவாறு ஒரு அணுகுமுறையை அவர் கையாண்டார்.

அவசியமான நேரத்தில் கொண்டுவரப்பட வேண்டிய நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் எடுத்ததற்கெல்லாம் கொண்டுவரப்பட்டால் சலிப்பையே ஏற்படுத்தும்.



## தொண்டாவின் சாணக்கியத்தில் ஒரு தொய்வு



கூறுகின்றனர்.

அமைச்சர் தொண்டமான் ஆளும் கட்சியோடு உறவை முறித்துக்கொள்வதில் மனப்பூர்வமான விருப்பம் கொண்டிருக்க வில்லை.

தமது கோரிக்கைகள் குறித்து அலட்சியமான மனப்போக்கு அரச தரப்பில் ஏற்பட்டுவிடாமல் பார்த்துக்கொள்ளும் நினைப்பில் தமது அரசியல் பலத்தை வெளிப்படுத்தவே முயன்றார்.

ஆனால் இம்முறை தனது சாணக்கியத்தில் அமைச்சர் தொண்டா பெரிய வெற்றியைப் பெறமுடியவில்லை.

மத்திய மாகாண சபை முதல்வருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மான விடயத்தில் தமது அரசியல் பலத்தை இ.தொ.காவால் பிரயோகிக்க முடியவில்லை.

அமைச்சர் தொண்டா எதிர்பாராத இடத்தில் இருந்து அவரது சாணக்கியத்திற்கு அடி விழுந்திருக்கிறது.

அவரது கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் ஏழுபேர் ஆளும்கட்சிக்கு ஆதரவு தெரிவித்துவிட நிலமையே மாறிவிட்டது.

மோதலில் வெற்றி ஆளும் கட்சிக்கே என்ற நிலமை உருவானது.

ஏழுபேரும் கடத்தப்பட்டதாக முதலில்

தேர்தலில் நம்பிக்கையோடு களத்தில் இறங்கலாம் என்ற நம்பிக்கையில் அம்மையாரும் தொண்டமானைச் சந்தித்துப் பேசினார்.

பேச்சில் ஏதோ உடன்பாடு ஏற்பட்டு விட்டது போல வெளியே செய்திகள் பரவிவிட்டன.

அதே சமயம் அமைச்சர் தொண்டாவும் ஆளும்கட்சியோடு உறவு முறியாது என்று கூறிவிட்டார்.

அம்மையார் பாடு சங்கடமாகிவிட்டது. திரு.காமினி திசாநாயக்காவை மத்திய மாகாண சபை முதல்வராக்குவதற்காகவே அமைச்சர் தொண்டாவுடன் பேசினேன் என்று அறிக்கையும், கட்சிக்குள் விளக்கமும் கொடுக்க வேண்டியதாகிவிட்டது.

சமீபத்திய அரசியல் சாணக்கியத்தில்

அமைச்சர் தொண்டா வெற்றி பெற முடியவில்லை. ஆனாலும் இனிமேல், அமைச்சர் தொண்டமானுக்கு ஆளும்கட்சி மலையகத்தை கொடுத்துவிட்டது, தொண்டா புலிகளின் ஆள் என்றெல்லாம் பிரதான எதிர்க்கட்சிகள் பெரிதாகப் பேசமுடியாது.

ஏனெனில் அக்கட்சிகளும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் ஆதரவை நாடியிருக்கின்றன. பேச்சு நடத்தியிருக்

அதுவே அவரது பலமாகவும் இருந்தது. மறுபுறம் எதிர்த்தரப்பினரின் பிரச்சாரத்திற்கும் அது சாதகமாக அமைந்தது.

ஆனால் இப்போது எதிர்த்தரப்பினர் தமது பிரதான கண்டனங்களை ஒரு மூட்டையில் கட்டி மூலையில் போட வேண்டியதாகிவிட்டது.

புலிகளை ஒழித்தே தீருவது என்று ஜனாதிபதி பேசுகிறார். அமைச்சர் தொண்டமான் விடயத்திலும் ஒரு இறுக்கமான போக்கையே ஜனாதிபதி கையாண்டார்.

இப்போது புதிய கண்டனங்களையும், குற்றச்சாட்டுக்களையும் தயாரிக்க வேண்டிய நிலையில் எதிர்க்கட்சிகள் இருக்கின்றன.

■

**இ**ப்போது நம்பிக்கையில்லாத் தீர்மானங்களின் சீசன் உருவாகியிருக்கிறது.

நாட்டின் அரசியல் சூழ்நிலை மக்களுக்கு நம்பிக்கையளிக்கிறதோ இல்லையோ அரசியல்வாதிகள் தமக்குள் நம்பிக்கையில்லாத் தீர்மானங்களை உயர்த்திப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பத்திரிகைகளுக்கு நல்ல தீனி. பரபரப்பான செய்திகளுக்கு குறைவில்லை. என்றாலும் முடிவுகள் மட்டும் சப்பென்று ஆகிவிடுகின்றன.

மாகாண சபைகள் செய்ய வேண்டிய

பின்னர் நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் மீதே மக்களுக்கு நம்பிக்கையில்லாத நிலைதான்.

■

**வ**டக்கே பாரிய தாக்குதலுக்கான தயாரிப்புக்கள் நடைபெற்று வருவதாகவே செய்திகள் சொல்லுகின்றன.

வடக்கே இராணுவ நடவடிக்கைகளுக்கு ஜெரிசில்வா தலைமை ஏற்பார் என்றே முதலில் நம்பப்பட்டது.

தற்போது அவர் இராணுவத் தளபதியாகிவிட்டதால் களத்தில் நின்று நேரடியாக தலைமை ஏற்பது இயலாது.

இராணுவ நடவடிக்கைகளின் போது ஆயுதங்களைவிட மனநிலையே ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது.

போரிடும் தரப்புக்களின் வெற்றி தோல்விக்கு மனநிலையும் ஒரு பிரதான காரணம் என்பது யுத்த வரலாறுகள் கூறும் பாடமாகும்.

டென்சில் கொப்பேகடுவ இருக்கும் போது இராணுவத்தினரின் மத்தியில் போர்முனைகளில் உற்சாகம் காணப்பட்டது.

டென்சில் கொப்பேகடுவ மறைந்த பின்னர் மீண்டும் அவ்வாறான ஒரு தலைமைத்துவத்தை உருவாக்குவதில் நீண்ட வெற்றிடம் காணப்படுகிறது.

இராணுவ தலைமைத்துவம் என்பது உடனடியாக உருவாக முடியாது. போர்முனைகளில் ஏற்படும் வெற்றி தோல்விகள், சூழலுக்கு ஏற்ற முடிவுகள், அனுபவங்கள் மூலமே அது உருவாக முடியும்.

தொடரும் யுத்தத்தில் ஏற்படப் போகும் நிலவரங்களைப் பொறுத்தே டென்சில் கொப்பேகடுவ விட்டுச் சென்ற இடம் நிரப்பப்படுமா என்பது தெரியும்.

புலிகள் மத்தியில் போர் முனையில் முக்கிய தளபதிகள் மடிந்த போதும் அது ஒரு பெரிய வெற்றிடமாக தெரிவதில்லை.

பிரபாகரனே சகலவற்றையும் தீர்மானிப்பவராக, தந்திரங்களை வகுப்பவராக கூறப்படுவதால் தமது தளபதிகளின் இழப்பு புலிகள் அமைப்பின் உறுப்பினர்களை பெரியளவில் பாதிப்பதில்லை.

யுத்தம் தொடர்வது உறுதியாகி விட்ட நிலையில் யுத்தத்தின் போக்கு எப்படியிருக்கும் என்பதே இப்போதுள்ள பேச்சாகிவிட்டது.

■

## கொப்பேகடுவ விட்டுச் சென்ற இடம் தொடரும் போரில் நிரப்பப்படுமா?

**இ**லங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கும் அரசுக்கும் இடையில் நிலவிய அரசியல் ஊடல் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது.

பத்திரிகைகள் பிரச்சனைகளை பெரிது படுத்தியதாக அமைச்சர் தொண்டமான் கூறியதாகவும் செய்திகள் வந்தன.

ஆயினும், தமிழ்நாட்டிற்கு அமைச்சர் தொண்டா சென்றபோது அங்கிருந்து வெளிவரும் ஆங்கில நாளேடான "இந்து"வுக்கு பேட்டியளித்திருந்தார்.

அப்பேட்டியில் தற்போதைய அரசாங்கத்தின் அணுகுமுறைகள் குறித்து தனது அதிருப்தியை அவர் வெளியிட்டிருந்தார்.

செய்தி பரவியது. சிறு சலசலப்புக்களும் ஏற்பட்டன.

பின்னர் அவர்கள் கடத்தப்படவில்லை. விருப்பத்தோடு மறு பக்கம் சென்றுள்ளார்கள் என்பது தெரியவந்தது.

இ.தொ.காவின் பொதுச் செயலாளர் திரு. செல்லச்சாமி ஏழுபேரும் கடத்தப்பட வில்லை என்று கூறியிருந்தார்.

ஆளும்கட்சியோடு உள்ள உறவுகள் பற்றி அமைச்சர் தொண்டா சில காரசாரமான கருத்துக்களை தெரிவித்த போதும் அமைச்சர் செல்லச்சாமி சற்று அடக்கி வாசிக்கும் ஒரு போக்கையே கடைப்பிடித்து வந்ததையும் கவனிக்க முடிந்தது.

கின்றன.

அதே சமயம், இருப்பது ஒரு கோப்பை உணவுதான். இரு கோப்பை கேட்டால் எப்படிக் கொடுப்பது என்று கேட்டதன் மூலமாக ஜனாதிபதி விஜயதுங்காவும் தான் ஒரு விட்டுக்கொடுக்காத போக்காளர் என்று வெளிப்படுத்தியிருக்கிறார்.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா பதவியில் இருந்த போது இரண்டு பிரதான கண்டனங்கள் சில எதிர்க் கட்சிகளாலும், இனவாதிகளாலும் முன்வைக்கப்பட்டன.

ஒன்று, புலிகளோடு அவர் இரகசியமான உறவு வைத்திருக்கிறார் என்பது.

பணிகள் நிறைய உள்ளன.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் இருந்து தப்பிக்கொள்வது பற்றி மாகாண ஆளும் கட்சியும், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றி முடிப்பது பற்றிய எதிர்க்கட்சிகளும் நேரத்தைப் போக்கிக் கொண்டிருக்கின்றன.

அது மட்டுமல்லாமல் வாங்குவது, விற்பது கடத்துவது, மறைப்பது போன்ற சொற்களும் பாவனைக்கு வரத் தொடங்கிவிட்டன.

அரசியலின் தரம் உயர்த்தப்பட வேண்டிய காலகட்டத்தில் பாவனைக்கு உதவாத சொற்கள் பாவனைக்கு வருவது அரசியல்மீதும்,

---

**க**ரும் இரெண்டெழுத்தார் தலைநகரிலை தலைகாட்டுறது மாதிரி ஒரு செய்திவர சீருடையினர் உஷாரர். அந்த நேரத்திலை நீர்கொழும்பிலை ஒரு சம்பவம். தம்பிக்கு வயது பதினாலு. கறுப்பு கதர் வேஸ்டி. கதர் சட்டை. கறுப்பு மாலை. பிறகென்ன? சந்தேகம் வர ஒரே அமுக்கு. தம்பி கம்பிக்கு பின்னாலை வைக்கப்பட்டார். தான் ஒரு ஐயப்பபக்தர். அதுதான் கறுப்பு சட்டை, வேஷ்டி, மாலை என்று அவர் விளக்கம் சொல்ல, அதை உறுதிப்படுத்தி குருசாமி தலைமையில் 30 சாமிகள் வந்து தம்பியை மீட்டுக்கொண்டு போச்சினமாம். பக்தி இருக்கலாம். கால நேரத்தையும் அவதானிச்சு நடக்கிறதுதான் புத்தி. என்ன சொல்லுறியள்?

**அ**ருகில் உள்ள தேசத்திற்கு போக விசா கேட்டா, யாழ்ப்பாணம் எண்டா போட்டு வாங்கோ. மூண்டு மாசத்துக்கு பிறகு யோசிக்கலாம் எண்டு பதில் வருகுதாம். பொதுவா வடக்கு-கிழக்கு எண்டாலே விசா கிடைக்கிறது முயல் கொம்புக்கதைதானாம். நடந்து, கியூவில் நிண்டு களைச்சுப் போன சிலர் பிடிக்க வேண்டிய ஆட்களை பிடிச்சு கொடுக்க வேண்டியதை குடுத்து விசா எடுக்கினம். குறைந்த பட்ச றேட் ஐயாயிரம் ரூபாய். ரிக்கட்டை விட விசா விலை அதிகம் பாருங்கோ. இன்னுமொரு தகவல், தமிழ் அமைப்புக்கள் சிலவும் விசா வியாபாரத்திலை நல்ல காசு பார்க்கினமாம். பிக்கப் வாகனத்திலை வந்து பக்குவமாய் விசாவைக் கொடுத்துப் போட்டு ஜாலியாய் போன காட்சி ஒன்றும் கண்ணிலை பட்டது பாருங்கோ.



## அதிரடி அய்யாத்துரை

**ஒ**ரு இயக்க முக்கியஸ்தரோடை பேசிக்கொண்டிருந்தனான். திடீரென்று அவர் சொன்னார் "வான் ஒண்டு விற்கப் போறம் யாரும் கேட்டா சொல்லுங்கோ." எத்தனை வாகனம் இருந்தாலும் இயக்கக்காரருக்கு சந்தோசம் தானே. போதாது எண்டு அங்க இங்கை எடுப்பியளே தவிர விற்க மனம் வருமோ எண்டு கேட்டனான். அவர் சொன்னார் "இது ஒரு வெள்ளைவான். ஒண்டில் விற்க வேணும். அல்லது பெயிண்ட் மாத்த வேணும்." ஏன் எண்டு கேட்டனான். அவர் என்ன சொன்னவர் தெரியுமோ "வெள்ளை வான் பற்றி அபிப்பிராயம் சரியில்லை. உதிலை போனாலே சனம் ஒரு மாதிரிப் பார்க்குது."

**யா**ழ்ப்பாணத்திலை இரெண்டு எழுத்துக்காரர் கரண்ட் கொடுக்க ஒரு திட்டம் போடுகினம். ஒரு ரியூப்லைட்டுக்கு 150 ரூபாய்படி கட்டணம் அறவிடவும் யோசிக்கினமாம். கரண்டுமாச்சு, அவைக்கு காசுமாச்சு.

**இ**ந்திய அரசியல் மாதிரி இங்கையும் நிலவரம் மாறுமோ எண்டு நினைக்க வேண்டிக் கிடக்கு. நம்பிக்கையில்லா தீர்மானம் வந்தா நல்லது. லாபம்தான் எண்டு சிலர் நினைக்கிறமாதிரியும் ஒரு கதை.

**அ**ய்யாத்துரையாருக்கு பழைய பாடல்கள் மட்டும்தான் தெரியுமாக்கும். எண்டு சிலர் கடிதம் எழுதினவையாம். இப்பபாடுங்கோ எடுத்து விடுறன் புதுப்பாட்டு. மிஸ்டர் வைரமுத்து எழுதினது.

"உனக்குள் ஒன்று நெளியும் போது
எனக்குள் ஏனடி சிலிர்க்கிறது-உன்
கண்கள் என்னும் ஜன்னல் வழி(யே)
கர்ப்பக்கிரகம் தெரிகிறது!"

எப்படி? அய்யாத்துரையாருக்கும் புது மொட்ஸ் மற்றும் மெட்டுகள் தெரியுமாக்கும்.

உலக ரவுண்டப்

# பிடிக்கவில்லையா? பிஸ்டலை எடு! சுடு!!

## அமெரிக்காவையும் ஆட்டிப்படைக்கும் ஆயுதக் கலாசாரம்



கருத்துக்கு இசைய வில்லையானால் உடன் தீர்ப்பு வழங்க சட்டைப் பையிலேயே ஆயுதம் இருக்கிறது.

அமெரிக்கா தடுமாறுகிறது. கொலைக் கருவிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை களிலிருந்து புதிது புதிதாக சந்தைக்கு வந்து குவியும் ஆயுதங்களினால் அமெரிக்கா தடுமாறுகிறது.

அமெரிக்கா மட்டுமல்ல, இன்று உலகின் பல்வேறு நாடுகளும் பெருகிவரும் கொலைக் கருவிகளால் பயந்து நடுங்க ஆரம்பித்துள்ளன.

தற்காப்புக்காகத் தான் ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்று ஆயுத உற்பத்தி செய்யத்துவங்கிய பல ஐரோப்பிய நாடுகள் உற்பத்தியைப் பெருக்கி வெவ்வேறு நாடுகளுக்கும் அனுப்பி வருகின்றன. அரசாங் கங்கள் மட்டுமல்ல, அந்தந்த நாடுகளில் தலையெடுக்கும் வன்முறைக் கும்பல்களிடமும் ஆயுதங்கள் போய்ச்சேருகின்றன.

வகை வகையான துப்பாக்கிகளை உற்பத்தி செய்து பிறநாட்டு சந்தைகளை நிரப்பி வந்த அமெரிக்கா, இதே துப்பாக்கிகள் உள்நாட்டில் புரியும் பயங்கரவிளையாட்டுகளில் சிக்கித் திசையறியாது திணறுகிறது.

அமெரிக்காவிலும் வேறு பல மேற்கத்தைய நாடுகளிலும் சாதாரணமாகக் கடைகளில் துப்பாக்கிகளை விரும்பியபடி வாங்க முடியும். அமெரிக்க மாநிலங்கள் சிலவற்றில் துப்பாக்கி விற்பனைக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டிருந்த போதும் வேண்டிய ரகத் துப்பாக்கியை வீட்டு வாசலிலேயே எவரும் வாங்கி விடமுடியும். குறிப்பிட்ட தொலைபேசி எண்களைச் சுழற்றினால் போதும். துப்பாக்கி வாகனம், சில நிமிடங்களில் நமது வீட்டு வாசலை நாடி வந்துவிடும்.

பயன்படுத்துவதற்கு மிகச் சுலபமான கைத்துப்பாக்கிகளே இப்பொழுது அமெரிக்கா வில் மலிந்து காணப்படுகின்றன. இவற்றை மிக நேர்த்தியாக சட்டைப் பையிலே எடுத்துச் செல்லலாம். இத்தகைய கைத்துப்பாக்கிகள் இன்று சாதாரண பள்ளிமாணவ மாணவியரிடம் தாராளமாகக் காணப்படுகின்றன.

துப்பாக்கிக் கலாசாரமே அரசோச்சு வதால் எதற்கெடுத்தாலும் அக்கருவியினை எடுத்துக் குறிபார்க்கும் ஆட்களும் அதிகமாகிவிட்டார்கள்.

விவாதிப்பது, விளக்கமளிப்பதெல்லாம் இன்று விடைபெற்று அகன்றுவிட்டன.

பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்பும் போது பெற்றாரே-பாதுகாப்புக்கென பிள்ளைகளின் கையில் பிஸ்டலைக் கொடுத்தனுப்பும் நிலை இன்று அமெரிக்காவில் சர்வசாதாரணமாகிவிட்டது. 'கையிலே கத்தி இருந்தால் கழுத்தையும் அறுக்கச் சொல்லும்' என்றொரு முதுமொழி உண்டல்லவா? அதற்கேற்ப கையிலே துப்பாக்கியைச் சதா கொண்டு திரியும் இளவயதுப் பிள்ளை அதனைப் பயன்படுத்தி பார்க்கவே நாட்டம் கொள்வதுஇயல்புதானே.

கறுப்பு இனத்தவரின் உரிமைகளுக்காகப் பாடுபட்ட மாட்டின் லூதர் கிங் மற்றும் ரொபேட் கென்னடி ஆகியோர் துப்பாக்கி ரவைகளால் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அமெரிக்காவிலுள்ள மனித உரிமைச் சங்கங்களும் அமைதி விரும்பிகளும் நடத்திய கிளர்ச்சிகளின் பயனாக துப்பாக்கிக் கட்டுப்பாட்டுச் சட்டம் 1968ல் அமெரிக்க காங்கிரசின் ஒப்புதலைப் பெற்றது. ஆனால் இந்தச் சட்டத்தினால் துப்பாக்கிகள் விற்பனையாவதையோ துஷ்பிரயோகம் செய்வதையோ ஒழித்துக்கட்ட முடியவில்லை.

துப்பாக்கி சுடுவதற்கான பயிற்சி அளிக்கும் நிலையங்கள் சர்வ சாதாரணமாக எங்கும் காணப்படுகின்றன.

சில வருடங்களுக்கு முன்னர் றொட்னி கிங் என்ற கறுப்பு இன-மனித உரிமை வாதியை பொலிசாரே நடுத்தெருவில் நையப்புடைத்தனர். இதன் பின்னர் 'பொலிசார் பொதுமக்களைப் பாதுகாக்க வரமாட்டார்கள். கொலையோ, கொள்ளையோ அல்லது வன்முறையோ தலையெடுக்க நேர்ந்தால் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ள ஒவ்வொருவரும் தற்காப்புக்கான ஆயுதங்களை தாங்களே வைத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்து அதிகரிக்கத் துவங்கி விட்டது' என்று கூறப்படுகிறது.

கடந்த 16 மாதங்களாக, துப்பாக்கி பயன்படுத்துவதற்கான கட்டுப்பாட்டுச் சட்டம் காங்கிரசால் அமுலுக்குக் கொண்டுவரப் படப்போவதாக வதந்திகள் வந்து கொண்டிருக் கின்றன. இதன்பின் தங்களுடைய உறுப்பினர் தொகை தினசரி 1500 வீதம் அதிகரித்து வருவதாக தேசிய றைபிள் சங்கம் கூறுகிறது.

1990ல் 25 இலட்சமாக இருந்த உறுப்பினர்கள் தொகை இன்று 33 இலட்சமாக அதிகரித்திருப்பதாக அந்தச் சங்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கி பாவிப்பதற்குத் தடை வரப்போகிறது என்ற தகவல் வெளியானதைத் தொடர்ந்து இலட்சக்கணக்கான நவீன துப்பாக்கிகள் இருட்டுச் சந்தைக்கு இடம் மாறத் துவங்கிவிட்டனவாம். அதுமட்டு மல்லாமல் கருவிகளின் விலையும் கிடுகிடுஎன உயர்ந்து கொண்டு போவதாகவும் விற்பனையும் பலமடங்காக அதிகரித்து வருவதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

கடந்த மாத நடுப்பகுதியில் நியூயோர்க்கில் ஒரு இரயிலில் சாதாரண பயணி மாதிரிச் சென்ற ஒருவன் தனது கைத்துப்பாக்கியை எடுத்து ஏனைய பயணிகளை நோக்கிச் சரமாரியாகச் சுட ஆரம்பித்திருக்கிறான்.

அவனுடைய வெறிக்கு 5 பேர் பலியானார்கள். பலர் காயமுற்றார்கள். கொலின் ஃபேர்கசன் என்ற அந்தக் கறுப்பு இன இளைஞன் எதற்காகத் துப்பாக்கி ஏந்தினான் என்பதனை இதுவரை எவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இவன் சுடத்துவங்கியதும் நெருக்கமாகப் பயணம் செய்த பயணிகள் தடுமாறித் தறிகெட்டனர். இரயில் வேகமாக ஓடிக் கொண்டிருந்தமையினாலும் கதவுகள் பூட்டப் பட்டிருந்தமையினாலும் வெளியே ஓடித்தப்ப முடியாது தவித்தவர்கள், படுமோசமான மனோநிலைக்குள்ளானார்கள்.

ரவைகள் முடிந்து இரண்டாவது முறை தன் துப்பாக்கியை நிரப்புவதற்காக ஃபேர்கசன் முயன்ற போது ரயிலுக்குள்ளிருந்த சில தைரியசாலிகள் அவனைப் பிடித்து அமுக்கித் துப்பாக்கியைப் பறித்தெடுத்துக் கொண்டுள்ளனர். "நான் மோசமான காரியம் ஒன்றைச் செய்துவிட்டேன்." என்று ஃபேகர்சன் பின்னர் கூறியிருக்கிறான். கையிலே துப்பாக்கி இருந்தமையினால் செய்வதறியாது அதனைப் பாவித்திருக்கிறான்.

அமெரிக்காவில் துப்பாக்கி வைத்திருப் பது சட்டவிரோதம் என்று சட்டம் கொண்டு வரப்பட்டாலும் அதனால் எத்தகைய பலனும் கிடைக்கப் போவதில்லை. ஏனெனில் இன்று 20 கோடிக்கும் அதிகமான- பல ரகத் துப்பாக்கிகள் தனியாரிடத்தரில் உள்ளன.

இவற்றில் 6 கோடி 70 இலட்சம் துப்பாக்கிகள் கைத்துப்பாக்கிகள்.

இவற்றை வைத்திருப்போர் யார் என்பதைக் கண்டுபிடிக்க முடியாது. ஒரு முகவரியும் மோட்டார் ஓட்டுவதற்கான உத்தரவுப் பத்திரமும் மட்டு மிருந்தாலே துப்பாக்கியினை வைத்திருப்பதற்கான தகுதியினை ஒருவர் பெற்றுவிடுகிறார்.

இதனால்தான் பெருகிவரும் துப்பாக்கிக் கலாசாரக் கொடுமைகளைக் களைய என்ன செய்யலாம் என்று அறியாமல் அமெரிக்கா தடுமாறுகிறது. ■



### றேவன் எம்பி-25

சில்லறை விலை: ரூ. 4000
வகை: ரவை 6
0.25-கலீப்பர்,
அரைத்தானியங்கி.
உற்பத்தியாளர்: பயனிக்ஸ் ஆம்ஸ், சிற்றி ஒவ் இண்டஸ்ட்ரி, கலிபோர்னியா.
ஏனைய விபரம்: நிறைகுறைந்த பிஸ்டல் என்பதால் நகர்ப்புற வாலிபர்களிடம் செல்வாக்குப் பெற்றது; இலட்சக்கணக்கில் விற்கப்பட்டுள்ளது.



### ஜென்னிங்ஸ் 22

சி.வி: ரூ.3,500
வகை: ரவை 6,
0.22 கலீப்பர்.
அரைத்தானியங்கி.
உற்பத்தியாளர்: ஜென்னிங்ஸ் ⁛பயர் ஆம்ஸ், சினோ, கலிபோர்னியா.
ஏனைய விபரம்: அண்மித்த தூரத்தில் சுடுதாக்கம் மிக அதிகம். விலை மலிவான சிறியவகைப் பிஸ்டல்.



### பி-32

சி.வி: ரூ.5,000
வகை: ரவை 6
0.32 கலீப்பர்.
அரைத்தானியங்கி.
உற்பத்தியாளர்: டேவிஸ் இண்டஸ்ரீஸ். சினோ, கலிபோர்னியா.
ஏ.வி: கடுஞ்சூழலைச் சமாளிக்கவல்லது. சந்தையில் முன்னணியில் உள்ள இவ்வகை நாக-அலோகச் சேர்வையால் உருவாக்கப்பட்டது. விலையும் மலிவு.



### பி-380

சி.வி:ரூ.5,000
வகை:ரவை 6
0.380 கலீப்பர்,
அரைத் தானியங்கி.
உ...ர்: டோவிஸ் இன்டஸ்ரீஸ், சினோ, கலிபோர்னியா.
எ.வி: 9எம் எம் பிஸ்டல் போல் வடிவமைக்கப் பட்டிருந்தாலும் அதனிலும் விலை மலிவானது. "பேபி னைன்" என்ற செல்லப் பெயருமுண்டு.



### எல்-380

சி.வி: ரூ. 6,000
வகை: 0.380 கலீப்பர்,
அரைத்தானியங்கி.
உ...ர்: லோர்சின் என்ஜினியரிங், மிராலோமா, கலிபோர்னியா.
ஏ.வி: விசேட வடிவமைப்புக் கைப்பிடி பிடித்துச்சுட லாவகமான கமபிளாஜ்வகை.



### கோப்ரேயிஎம்-11

சி.வி: ரூ. 15,000
வகை: ரவை-32,
9-எம்.எம்
அரைத்தானியங்கி.
உ...ர்: எஸ்.டபிள்யூ.டீ. இன்டஸ்ரீஸ், அட்லான்டா.
ஏ.வி: பெரிய ரவைக்கூடு வகை.



### ரெக்-9

சி.வி: ரூ. 17,500
வகை: ரவைகள் 20
9-எம்.எம்.
அரைத்தானியங்கி.
உ...ர்: இன்ட்ராரெக் யூஎஸ்ஏ, மியாமி
ஏ.வி: ஓசைக் குறைப்புக் குழாய் பொருத்தக்கூடிய முன் அமைப்பு. கையாள இலகுவானது.




### ரவுஸஸ் பிரி 92 ஏஎஃப்

சி.வி: ரூ. 20,000
வகை: ரவைகள் 15,
9-எம்.எம்,
அரைத்தானியங்கி
உ..ர்: ரவுறஸ் இன்டர்னாசனல் ⁛பயர் ஆம்ஸ், போர்ட் அலெக்ரி, பிரேசில்
ஏ.வி: 9எம்எம் வகையைவிட மிக எளிதில் வாய்க்கக்கூடியதும், மலிவானதும்.



### ஹைற-பவர்

சி.வி: ரூ. 25,000
வகை: ரவைகள்-13,
9-எம்.எம், அரைத்தானியங்கி.
உ..ர்: பிரவுணிங் ஆம்ஸ், மோர்கன், உட்டா.
ஏ.வி: மிகவிரைவானதும் உயர் சக்திவாய்ந்ததும்.



### மக்-10

சி.வி: ரூ.23,750
வகை: ரவைகள் 20,
9 எம்எம்,
அரைத் தானியங்கி.
உ....ர்: எஸ்.டபிள்யூ.டீ. இண்டஸ்ரீஸ், அட்லான்டா
ஏ.வி: மிகச்சுலபமாக இயந்திரத் துப்பாக்கியாக மாற்றக்கூடிய அதிரடித் தாக்குதலுக்குரிய பிஸ்டல் வகை.



### க்குளொக் 17

சி.வி: ரூ. 27,500
வகை: ரவைகள்-17, 9 எம்.எம்
அரைத்தானியங்கி
உ..ர்: க்குளொக் க்கெஸ்ம்த், டச்-வாக்ரம், அஸ்ட்ரியா.
ஏ.வி: அனுபவமிக்க குற்றவாளிகள் பெரிதும் விரும்புவதும் பொலிஸாரால் உபயோகிக்கப்படுவதுமான இவ்வகை பிஸ்டல்கள் பெரிய ரவைக்கூடைக் கொண்டதாயினும் எடையில் இலேசானவை.

**அரைத்தானியங்கி என்றால் என்ன?**
ஒருமுறை விசையை அமுக்கினால் போதும். ரவைகள் தீரும்வரை பின்னர் விசையை அமுக்க வேண்டியதில்லை. அதே துப்பாக்கியில் ஒவ்வொருமுறை விசையை அமுக்கி ஒவ்வொரு ரவையாக சுடவும் முடியும்.

*நன்றி-டைம்ஸ்*

# உள்ளே ஒரு 'ஒப்பரேஷன்' இரவோடு இரவாக நடந்த கைதுகள்!



புலிகள் அமைப்பின் உள் முரண்பாடுகள் பற்றி கனடா செந்தாமரை வெளியிட்ட தகவல்களின் தொடர்ச்சி இது. இதில் முரசின் கருத்து எதுவுமில்லை. செந்தாமரை ஆசிரியர் டி.பி. ஜெயராஜ் புலிகளது ஆதரவாளராகவும் மாத்தையாவின் நெருக்கமான நண்பராகவும் கருதப்படுகிறவர்.

பிரபாகரன் பிறந்தது 1954. மாத்தையா பிறந்தது 1956. இருவரும் வல்வெட்டித் துறையைச் சேர்ந்தவர்கள். பொருளாதார ரீதியாக ஒருவர் உயர்ந்த குடும்பத்திலும் மற்றவர் தாழ்ந்த குடும்பத்திலும் பிறந்தவர். ஆனால் ஒரே பிராயத்தார். நீண்ட காலமாக ஒரே இயக்கத்தில் ஒரே கொள்கையுடன் செயல்பட்டனர். நல்ல நண்பர்கள். சக போராளிகள். இயக்கத்தைப் பொறுத்தவரை பேபி சுப்பிரமணியம், அப்பையா, தேவ ரண்ணை போன்றவர்களை நீக்கி விட்டுப் பார்த்தால் பிரபாகரனுக்கு கிட்டத்தட்ட சமமான சிரேஷ்டத் தன்மை பெற்றவர் மாத்தையா. அத்துடன் தலைவர், போராளிகள், தொண்டர் ஆதரவாளர்களால் இரண்டாமவர் அல்லது உபதலைவர் என்ற பதவியைப் பெற்றவர். இந்த முதலாம் இரண்டாம் இடத்தைப் பெற்றவர்களிடையே ஓர் ஊடல், பனிப்போர் அல்லது மௌன மோதல் ஆகவே இது விளங்கியது.

## 21 மணி நேரம்

ஒகஸ்ட் மாதம் 2ம் திகதி மாலை. ஒகஸ்ட் மாதம் 3ம் திகதி காலை, இடையில் ஓரிரவு - மாலை இரவு. மறுநாள் காலை என முப்பொழுதுகளையும் உள்ளடக்கும் 21 மணி நேரம். அந்த நீண்ட இரவில் யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் புலிகள் ஒரு மாபெரும் ஒப்பரேஷன் ஒன்றை நடத்தினர். ஏறக்குறைய சம காலத்தில் அல்லது சொற்ப கால அவகாசத்தில் அடுத்தடுத்துப் பல இடங்களில் புலிப் போராளிகள் பாய்ந்தனர். ஏறக்குறைய ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கங்களைத் தடை செய்த போது புலிகள் செயல்பட்டது போன்ற கட்டுக்கோப்பு. சீரான அணி வகுப்பு. செயற்பாடு. ஆனால் அப்போது நடந்தது போல்இரத்தம் சிந்தப்படவில்லை. ஒரு இரத்தம் சிந்தா ஒப்பரேசனாகவே இது அமைந்து விட்டது. புலிகளின் குறி இம்முறை மாற்றான் அல்லது எதிரி அல்ல. களை எடுப்புத்தான். இயக்கத்துக்குள்ளும் இயக்கத்தை அண்டியும் இருந்த சிலரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்தமையே நடந்தது. இயக்கத்தில் இருந்த சிலர், இயக்கத்தை விட்டு விலகிய சிலர், மக்கள் முன்னணிக் கிளைகளின் முன்னாள் உறுப்பினர்கள் சிலர், விடுதலைப் புலிகளின் நெருங்கிய ஆதரவாளர்கள் சிலர், அரசியல் செயற்பாடு மிகுந்தோர் சிலர் என்று பல தரப்பட்டவர்கள் அன்று கைது செய்யப் பட்டனர்.

ஆனால் இதுவரை கிடைக்கப் பெற்ற தகவல்கள் படி முல்லைத்தீவுப் பகுதியில் மாத்திரம் ஒரு விடுதலைப் புலி உறுப்பினர் கைது செய்யப்படும் போது கழுத்தில்அணிந்த சயனைட் குப்பியைக் கடித்து விழுங்கி மரணமானார்: இவரது பழைய இயக்கப் பெயர் அஜித் என்றும் உளவுப் பிரிவில் செயல்பட்டவர் என்றும் உறுதிப்படுத்தப் படாத தகவல் ஒன்று தெரிவிக்கிறது. யாழ்ப்பாணத்தில் மாத்திரம் இப்படியான வகையில் 75 பேருக்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். வன்னிப் பகுதியில் எத்தனை பேர் என்பது தெரியவில்லை. ஆனால் வன்னியைச் சேர்ந்த சில புலிப் போராளிகள் 6 பேர் வவுனியாவுக்கு வந்து இராணுவத்திடம் சரணடைந்தனர். கைது செய்யப்பட்ட எல்லோருக்கும் இடையில் ஒரு பொது இழை. இவர்கள் எல்லோருமே ஏதோவொரு வகையில் பிரதித் தலைவர் மாத்தையாவுடன் சம்பந்தப்பட்டவர்கள். பல விதங்களிலும் அவருக்கு நெருக்கமானவர்கள் என்று கருதப்பட்டவர்கள்.

மாத்தையாவின் ஆதரவாளர்கள் அல்லது நெருக்கமானவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்ட போது மாத்தையாவும் கைது செய்யப்பட்டார். 2ம் திகதி முன்னிரவு நேரம் விடுதலைப்புலிகளின் முப்பெரும் பிரிவுகளைச் சேர்ந்த தெரிந்தெடுக்கப்பட்ட மூன்று குழுக்கள் மாத்தையாவின் இல்லத்தை முற்றுகை இட்டனர். இயக்கத்தின் பிரதி-தளபதியும் சார்ள்ஸ் அந்தனி காலாட்படைப் பிரிவுத் தளபதியுமான பால்ராஜ், விசேட அதிரடிப் படை பிரிவான சிறுத்தைகளின் தளபதி சொர்ணம். கடற்புலிகளின் விசேட தளபதி குவை ஆகிய மூவரின் தலைமையில் புலிகள் மாத்தையாவின் இல்லத்தைச் சூழ்ந்தனர். மாத்தையாவின் 70 மெய்க்காவல் அணியினரில் எத்தனை பேர் அந்த இடத்தில் இருந்தனர் என்பது சரியாகத் தெரியவில்லை. ஆனால் குறைந்தது 35 பேராவது அங்கு நின்றனர்.

(மிகுதி அடுத்த முரசில்)

## அலசுவது – இராஜதந்திரி

# தேர்தல் ஆண்டு 1994

புதிய ஆண்டு (1994) ஒரு தேர்தல் ஆண்டாக அமையப் போகின்றதென ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜேதுங்க ஐக்கிய தேசிய கட்சியின் வருடாந்த மகாநாட்டின் போது அறிவித்திருந்தார்.

இம்மகாநாட்டிலேயே ஜனாதிபதி விஜேதுங்க ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக நிறுத்தப் படுவதற்கான அங்கீகாரமும் ஐ.தே.க உறுப்பினர்களால் ஏகமனதாக வழங்கப் பட்டிருந்தது.

திரு.டி.பி. விஜேதுங்க ஆளுங்கட்சியின் மூன்றாவது ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஜனாதிபதி ஆட்சிமுறை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டதையடுத்து திரு. ஜே.ஆர். ஜயவர்த்தன இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

அவரைத் தொடர்ந்து அமரர் ரணசிங்க பிரேமதாசா இரண்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவாகியிருந்தார்.

பின்னர் திரு.ஆர்.பிரேமதாசா கடந்த ஆண்டு (மே 1993) கொல்லப்பட்டதையடுத்து, பிரதம மந்திரியாக இருந்த திரு.விஜேதுங்க இலங்கையின் மூன்றாவது ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார்.

இதனையடுத்து இந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் இடம் பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளராகவும் ஐக்கியதேசியக் கட்சியின் சார்பில் திரு.விஜேதுங்க நிறுத்தப்படவுள்ளார்.

ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவின் மறைவையடுத்து தற்போது அமுலில் உள்ள அரசியலமைப்பின் அடிப்படையில் பிரதம மந்திரியாகவிருந்த திரு.விஜேதுங்க பாராளுமன்றத்தினால் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

ஆனால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் திரு.விஜேதுங்க தமது பதவியைத் தப்பவைத்துக் கொள்வதற்கு முழு நாட்டினதும் ஆதரவை நாட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

1994ம் ஆண்டு, ஒரு தேர்தல் ஆண்டாக இருக்கும் என்று ஜனாதிபதி அறிவித்துள்ளமை, ஜனநாயக ரீதியாக அரசியல் மாற்றங்களை விரும்புவோருக்கு ஒரு நல்ல செய்தியாக இருக்கின்றது.

ஆயினும் இந்த ஆண்டில் இடம் பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல், மற்றும் பாராளுமன்றத் தேர்தல் என்பன எவ்வளவு தூரம் நாடுதழுவியவையாக இருக்குமென்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

கடந்த ஆண்டில் இடம் பெற்ற மாகாண சபைத் தேர்தல் இலங்கையின் சர்ச்சைக்குரிய



## உலகின் சிக்கலான அரசியல் பிரச்னைகள் சமரச முயற்சிகளால் அணுகப்படும் நிலை

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தவிர ஏனைய அனைத்து மாகாணங்களிலும் இடம் பெற்றிருந்தன.

ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவின் மறைவையடுத்து இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தல்கள், ஆளுங்கட்சி, மற்றும் எதிர்க்கட்சிகளின் அரசியல் பலத்தை எடை போடுவதற்கும் களம் அமைத்திருந்தன.

1988ம் ஆண்டு முதல் தடவையாக இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் மாகாணசபைத் தேர்தல்கள் இடம் பெற்றன. அப்போது ஒரே மாகாணமாக இருந்த வடக்கு-கிழக்கு மாகாணத்தைத் தவிர ஏனைய ஏழு மாகாணங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைத்திருந்தது.

ஆனால் கடந்த ஆண்டு இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தலில் வடக்கு-கிழக்கில் தேர்தல்கள் இடம்பெறாத நிலையில் ஏனைய ஏழு மாகாணங்களில் ஐந்து மாகாணங்களில் மட்டுமே ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைத்திருந்தது.

இந்த ஐந்து மாகாணங்களில் ஒன்றான மத்திய மாகாணத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் பக்க பலத்துடனேயே ஐ.தே.க பதவிக்கு வந்திருந்தது.

ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆகியன ஏனைய இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்து ஒரு கூட்டணியாகப் போட்டியிட்டிருந்தது. இக்கூட்டணி மேல் மாகாணம், தென்மாகாணம், வடமேல் மாகாணம் ஆகிய மூன்று பிரதேசங்களிலும் ஆட்சியைக் கைப்பற்றியிருந்தது.

எதிர்க்கட்சியினரின் இக்கூட்டு முன்னணி ஒரு பலம் மிக்க அமைப்பாக மாறிவருவதையே கடந்த ஆண்டின் மாகாண சபைத் தேர்தல்கள் புலப்படுத்தியிருந்தன.

அத்துடன் இந்த எதிர்கட்சிக் கூட்டணியினால் கொழும்பு நுகேகொடையில் அண்மையில் நடத்தப்பட்ட பொதுக் கூட்டமும், அதில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டமையும், அம் முன்னணியின் பலம் மேலும் அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் நிலவுவதையே புலப்படுத்தியிருந்தன.

இது தவிர இந்த நுகேகொடை கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவியும், அக்கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராகவும் நிறுத்தப்படவுள்ள திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்கா நிகழ்த்திய உரை எதிரணியினர் கொண்டுள்ள அரசியல் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவதாக இருந்தது.

நாட்டில் இன்று பல்வேறு பிரச்னைகள் காணப்படுகின்றன. நாட்டின் பொருளாதாரப் பிரச்னைக்கு விடிவுகாணும் வகையில் 1977ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றி, திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு வழியமைத்திருந்தது.

இத்திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக நாட்டில் பல்வேறுவகையான வெளிநாட்டு முதலீடுகள் தோன்றியிருந்தன. அத்துடன் ஏற்றுமதி, இறக்குமதித் துறையில் நிலவிய கட்டுப்பாடுகள் பெருமளவில் தளர்த்தப்பட்டிருந்தன.

வெளிநாட்டு முதலீட்டாளர்களின் முதலீடுகளையடுத்து நாட்டில் ஆயிரக் கணக்கானவர்கள் வேலைவாய்ப்புகளையும் பெற்றிருந்தனர்.

திறந்த பொருளாதாரக் கொள்கையினால் நாடு பல்வேறு வகையிலும் வளர்ச்சி காணும் அறிகுறிகள் தென்பட ஆரம்பித்தன. ஆயினும் நாட்டின் வடக்கு-கிழக்கு பிரச்னை ஒரு பூதாகாரமான வடிவமெடுத்ததையடுத்து, திறந்த பொருளாதாரத் திட்டத்தின் பலாபலன்களை நாடு பூரணமாக அனுபவிக்க முடியாத நிலை தோன்றியிருந்தது.

நாட்டினுள் கோடிக்கணக்கான முதலீடுகள் தோன்றின. அத்துடன் வெளிநாட்டு உதவிகளாகவும் மேலும் பலகோடி ரூபாய்கள் கிடைத்தன. அந்நியச் செலாவணியைச் சம்பாதிப்பதிலும் சாதகமான நிலை தோன்றியிருந்தது. ஆயினும் வடக்கு-கிழக்கு யுத்தம், வருடந்தோறும் பலகோடி ரூபாய்களை ஏப்பம் விடும் ஒரு கொடிய வியாதியாகவே நாட்டைப் பீடித்துள்ளது.

கடந்த பத்து வருடகாலமாக வடக்கு-கிழக்கு பிரச்னை நாட்டைப் பெரிதும் உலுப்பி வருகின்றது. பொருளாதார ரீதியாக மட்டுமல்லாது, அரசியல், சமூக ரீதியாகவும் வடக்கு-கிழக்கு நிலவரம் நாட்டில் பல்வேறு மாற்றங்களுக்கு வழியமைத்ததாகவே காணப்படுகின்றது.

இந்நிலையில் ஆளுங்கட்சியினராலும், எதிர்க்கட்சியினராலும் எதிர்கொள்ளப்பட வேண்டிய முக்கிய பிரச்னையாகவே வடக்கு-கிழக்கு பிரச்னை விளங்குகின்றது.

எதிரணியினர் நடத்திய நுகேகொடைப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித்தலைவி திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்கா வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு முதன்மையளித்துப் பேசியுள்ளார். அப்பிரச்னை அரசியல் ரீதியாகவே அணுகப்பட வேண்டுமென திருமதி பண்டாரநாயக்கா உறுதிபடக் கூறியுள்ளார்.

இதே வேளை கொழும்பு சுகததாஸா உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற ஐக்கியதேசியக் கட்சியின் வருடாந்த கூட்டத்திலும் ஜனாதிபதி விஜேதுங்க, பிரதமமந்திரி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர், நாடு இக்கட்டான நிலையில் இருப்பதனைச் சுட்டிக்காட்டியிருப்பதுடன், வடக்கு-கிழக்குப் பிரச்னை குறித்த தமது கண்ணோட்டங்களையும் வெளியிட்டுள்ளனர்.

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க நாட்டில் இனப்பிரச்னை என்ற போர்வையின் கீழ் பயங்கரவாதம் நிலவுகின்றது எனக் கூறியுள்ளார்.

அத்துடன் மேலும் தமது உரையில் ஆபிரிக்கா, மற்றும் பிரிட்டனிலும் இதே பாணியில் பிரச்னைகள் நிலவுவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

ஆபிரிக்கா கண்டத்தை இருண்ட கண்டமென்றே வர்ணிப்பதுண்டு.

அடர்ந்த காடுகளினாலும், அங்கு வாழும் கறுப்பின மக்கள் காரணமாகவும் ஆபிரிக்கா ஓர் இருண்ட கண்டமாக வர்ணிக்கப்பட்டிருந்தது.

ஆனால் ஆபிரிக்க கண்டத்தில் உள்ள பல்வேறு நாடுகளிலும், வறுமை, வரட்சி, அரசியல் கிளர்ச்சி என்பவற்றினாலும் ஆபிரிக்கா இருண்டிருக்கவே காணப்படுகின்றது.

தென்னாபிரிக்காவில் சில வருடங்களுக்கு முன்னர் நிறவெறி, இனவெறி என்பன படுமோசமான முறையில் காணப்பட்டன. அப்போது வெள்ளை இன ஆட்சியாளர்களுக்கெதிராக கிளர்ச்சி புரிந்த கறுப்பினத் தலைவர்களையும் பயங்கரவாதிகள் என்றே வெள்ளையர்கள் ஒதுங்கியிருந்தனர்.

தென்னாபிரிக்காவின் கறுப்பினத் தலைவர் டாக்டர் நெல்சன் மண்டெலா இன்று தென்னாபிரிக்க வெள்ளை இனத்தலைவர்களுடன் கைகுலுக்குகின்றார். ஆனால் தென்னாபிரிக்காவின் நிற வெறி அரசு அவரை ஒரு குற்றவாளியாகவே இருபது வருடங்களுக்கும் மேலாக சிறையிலிட்டிருந்தது.

இதே வேளை மற்றொரு ஆபிரிக்க நாடான சோமாலியாவில் பசி-பட்டினி தாண்டவமாடியதையடுத்து, நாட்டு நிலைமையைச் சீர்செய்ய ஐக்கிய நாடுகள் ஸ்தாபன படைகள் சோமாலியாவுக்குள் புகுந்தன.

அங்கு ஐ.நா. படையினருக்குப் பெரும் சவாலாக இருந்த கிளர்ச்சித் தலைவர் மொஹமட் ஐடீட்டை சுற்றிவளைப்பதில் ஐ.நா.படையினர் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். ஆனால் தற்போது அப்பிரயத்தனம் கைவிடப்பட்ட நிலையில் கிளர்ச்சித் தலைவர் ஐடீட்டுடன் சமரசப் பேச்சுக்கள் இடம் பெற்றவண்ணமிருக்கின்றன.

இதே வேளை மத்திய கிழக்கில் இஸ்ரேலியர்களும், பாலஸ்தீனர்களும் கடந்த பல தசாப்தங்களாக ஒருவரை யொருவர் பயங்கரவாதிகளாகவே நோக்கி யிருந்தனர். ஆனால் கடந்த ஆண்டில் இஸ்ரேலியர்களும், பாலஸ்தீனர்களும் தமது பகைமையை முடிவுக்குக் கொண்டு வரும்வகையில் கூட்டாக முன்வந்திருந்தனர்.

வட அயர்லாந்தில், அயர்லாந்து கிளர்ச்சியாளர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு சவாலாக இருந்து வருகின்றனர். ஆனால் தற்போது அயர்லாந்து கிளர்ச்சியாளர்களுடனும் சமரசப் பேச்சுக்களை நடத்துவதில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் ஆர்வங்காட்டுகின்றனர்.

நமது அயல் நாடான இந்தியாவிலும் கிளர்ச்சியாளர்களை கையாளும் விதத்தில் மாற்றம் ஏற்பட்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி. இந்திரா காந்தியின் ஆட்சிக்காலத்தில் சீக்கிய தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் பஞ்சாப் மாநிலத்தில் விரிவடைந்திருந்தன.

பஞ்சாப் அமிர்தஸரஸ் பொற் கோயிலையே தமது உறைவிடமாக்குமளவுக்கு சீக்கிய தீவிரவாதிகள் முனைப்படைந்திருந்தனர். அப்போது மறைந்த பிரதமர் திருமதி.இந்திரா காந்தியின் உத்தரவின் பேரில் பொற்கோவிலுக்குள் இந்திய இராணுவம் பிரவேசித்து, சீக்கிய தீவிரவாதிகள் பலரைச் சுட்டுக் கொன்றிருந்தது.

இதனால் தீவிரவாதிகளின் மூர்க்கத்தனம் மேலும் அதிகரித்து நாளடைவில் பிரதமர் இந்திரா காந்தியே சீக்கியரான தனது சொந்த மெய்க் காப்பாளரால் கொடூரமான முறையில் கொல்லப்பட்டிருந்தார்.

ஆனால் 'பொற்கோயில்' இராணுவ முற்றுகை இடம் பெற்று, சுமார் ஒன்பது வருடங்களின் பின்னர் கடந்த மாதம் காஷ்மீர் ஹஸ்ரத்பால் பள்ளிவாசல் விவகாரம் இந்திய அரசுக்கு ஒரு சவாலாக இருந்தது.

காஷ்மீரின் முஸ்லிம் தீவிரவாதிகள் ஹஸ்ரத்பால் பள்ளிவாசலுக்குள் நுழைந்து அரசுக்கு தமது கோரிக்கைகள் தொடர்பாக சவால் விட்டிருந்தனர்.

இதனையடுத்து இந்திய இராணுவம் காஷ்மீர் ஹஸ்ரத்பால் பள்ளிவாசலை சூழ்ந்து கொண்டது. ஆனால் பொற்கோயிலுக்குள் இடம் பெற்றதைப் போல இங்கு விபரீதம் எதுவும் நடந்து விடாதவகையில் இந்திய அரசு நடந்து கொண்டிருந்தது.

இந்திய அரசின் பிரதிநிதிகள் பள்ளிவாசலுக்குள் இருந்த காஷ்மீர் தீவிரவாதிகளுடன் சமரசப்பேச்சுக்களை நடத்தி அவர்களை எதுவித மோதலிலும் குதிக்காதவாறு தம்மிடம் சரணடையச் செய்திருந்தனர்.

எனவே இன்று உலக அரங்கில் பல்வேறு சிக்கலான பிரச்னைகளுக்கும் சமரசப் பேச்சுவார்த்தைகள் மூலமாக தீர்வு காணப்படுவதில் ஆர்வங்காட்டப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் வடக்கு-கிழக்கில் ஆயுத போராட்டத்தை நடத்துவோரையும் சமரசப் பேச்சுக்கள் மூலமாக வழிக்குக் கொண்டு வரும் வழிவகைகளையே அரச தரப்பினர் கையாளவேண்டும்.

ஜனாதிபதி விஜேதுங்க 1994ம் ஆண்டு ஒரு தேர்தல் ஆண்டாக இருக்குமென்று அறிவித்துள்ளார். இந்நிலையில் அரசியல் நடவடிக்கைகள் சார்ந்த ஒரு பரிபூரண தேர்தல் ஆண்டாகவே இந்த ஆண்டு தோற்றம் பெறுவதை நாட்டு மக்களும் விரும்புவர்.

ஜனாதிபதி 1994ம் ஆண்டை தேர்தல் ஆண்டென்று அறிவித்துள்ள இத்தருணத்திலேயே, இலங்கை இராணுவத்தின் புதிய தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி.சில்வாவும் பதவியேற்றுள்ளார்.

எனவே புதிய தேர்தல் ஆண்டில் அரசியல் கட்சிகள் கூட்டணிகளை அமைப்பதிலும், பிரசாரத் தந்திரங்களை வடிவமைப்பதிலும், தேர்தல் கூட்டங்களை நடத்துவதிலும், தம்மை முழுமையாக ஈடுபடுத்தும் சூழ்நிலைகளே தோற்றம் பெறும்.

ஆனால் வடக்கு-கிழக்கு பகுதிகளில் தேர்தல்களை நடத்த முடியுமா என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

இன்றைய சூழ்நிலையில் வடக்கு-கிழக்கில்- குறிப்பாக வடக்கில் அரசியல் வாதிகள் துணிகரமாக காலூன்றுவதென்பதே மிகவும் அபாயகரமானதாகவே இருக்கின்றது.

வடக்கு-கிழக்கில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் இளஞ் சந்ததியினரில் பலர் வடக்கிலும், கிழக்கிலும் பலவருடங்களுக்கு முன்னர் காணப்பட்ட சூடான தேர்தல் காலங்களைப் பற்றி நன்கு அறிந்திராதவர்களாகவே விளங்குவர்.

இன்றைய ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் வடக்கு-கிழக்கில் தேர்தல் கூட்டங்களில் அல்லது வேறு பொதுக் கூட்டங்களில் உரையாற்றும் சந்தர்ப்பங்களை பெரிதும் பெற்றிருக்கவில்லை.

ஆனால் எதிர்க்கட்சித் தலைவியாக இருக்கும் திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்கா நாட்டின் பிரதமராக ஆட்சியிலிருந்த வேளையில் வடக்கே பொதுக் கூட்டங்கள் பலவற்றில் பங்கு பற்றியிருந்தார்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்த்தன, மறைந்த ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா உட்பட அவர்களுக்கு முற்பட்ட இலங்கையின் ஆட்சியாளர்கள் பலரும் வடக்கு-கிழக்கு பிரதேசங்களைத் தழுவியவகையில் பொதுக் கூட்டங்கள், மற்றும் தேர்தல் பிரசாரக்கூட்டங்களில் பங்கு பற்றியிருந்தனர்.

வடக்கு-கிழக்கில் ஆயுதப் போராட்ட நடவடிக்கைகள் தீவிரமடையுமுன்னர், அங்கு தேர்தல்காலம் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரசாரங்கள், அலங்காரங்கள், ஊர் வலங்கள், பொழுது விடியும் வரையிலான கூட்டங்கள் என்பவற்றைக் கொண்டதாகவே காணப்பட்டது.

தேர்தல் காலங்கள் வடக்கு-கிழக்கில் களைகட்டியிருந்த போது கம்பீரமாக ஆளுயர மாலைகளுடன் மேள-தாள வாத்தியங்கள் சகிதம் தேர்தல் ஊர்வலங்களில் ஏறு நடை போட்ட தமிழ் அரசியல் வாதிகளில் பலர் இன்று தாம் பிறந்த மண்ணில் தலைகாட்ட முடியாதவர்களாக இருக்கின்றனர்.

இந்நிலையில் இலங்கையில் புதிய ஆண்டு ஒரு தேர்தல் ஆண்டாகப் பிறந்துள்ளது.

ஆளுங்கட்சியினரதும், எதிர்க்கட்சிகளினதும் தேர்தல் பிரசாரங்களின் பிரதான கருப்பொருளாக வடக்கு-கிழக்குப் பிரச்னையே இடம்பெறும் என்பதில் ஐயமில்லை.

ஆளுங்கட்சியினர் நாட்டின் அபிவிருத்தியை வலியுறுத்தி பிரசாரங்களை வடிவமைத்தாலும், எதிர்க்கட்சிகள் நிச்சயம் வடக்கு-கிழக்குப் பிரச்சனையுடன் சம்பந்தப்பட்ட விடயங்களையே தமது



பிரதான பிரசாரமாகக் கொள்ளுமென்றே எதிர்பார்க்கலாம்.

வடக்கு-கிழக்குப் பிரச்னை தீர்வு குறித்து கடந்த காலங்களில் பல்வேறு அரசியல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அவை எந்தவித பலனையும் தராதவையாகவே விளங்கியிருந்தன.

புதிய தேர்தல் ஆண்டில் தேர்தல் பிரசாரங்களில் பொறி தட்டும் கருத்துக்கள், வடக்கு-கிழக்கு பிரச்னை குறித்து தென்னிலங்கை அரசியல்வாதிகள் கொண்டுள்ள நிலைப்பாடுகளை தெட்டத் தெளிவாக எடுத்து விளக்கும் என எதிர்பார்க்கலாம்.

தேர்தல் ஆண்டில் பல்வேறு வர்ணங்களிலும் பலதரப்பட்ட கட்சிக் கொடிகள் தென்னிலங்கையை ஆக்கிரமிக்கத் தொடங்கும்.

இந்நிலையில் மறுபுறத்தே வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கையையும் ஆட்சியாளர்கள் தமது அரசியல் பிரசாரத்தின் பொருட்டு முன்னெடுக்க முயன்றால் அதனால் ஏற்படும் இழப்புக்களால், அரசியல் கட்சிகளின் பலவர்ணக் கொடிகளிடையே, வெண்ணிறக் கொடிகளும் தொங்கவிடப்படும் சூழ்நிலைகள் தோன்றும்.

எனவே தென்னிலங்கை அரசியலாளர்கள் இப்புதிய தேர்தல் ஆண்டை ஒரு பரிபூரண அரசியல் நடவடிக்கை சார்ந்ததாக மாற்றமடையச் செய்ய வேண்டும். இதன் மூலமே ஆயுதமேந்திய கிளர்ச்சியாளர்களுக்கும் ஜனநாயக அரசியலில் நம்பிக்கையை உண்டு பண்ணச் செய்யும் சூழ்நிலைகளை உருவாக்க முடியும்.



# அழகு விருப்பம் அவலட்சணமாகிவிடக் கூடாது!
## ஒப்பனையின் போது கவனிக்க வேண்டியவை!!

பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் ஒப்பனை செய்கிறார்கள், உலகில் எந்த மூலையில் வாழ்கின்றவர்களும் ஒப்பனை செய்கின்றார்கள். ஆகவே ஒப்பனை செய்வது மனித வாழ்வுடன் ஒன்றிப் போன செயல் என்பதை மறந்துவிடலாகாது.

காலையில் தூக்கம் கலைந்து எழுந்ததும் எவராவது அப்படியே வெளியே போய் விடுவார்களா? முதலில் பல் துலக்கி முடித்து முகம் கழுவி அல்லது குளித்து, தலைவாரி முகத்துக்குரிய ஒப்பனை செய்து சுத்தமான ஆடைகளைத்தரித்த பின்னர் தான் வீட்டை விட்டு வெளியே கிளம்பு வார்கள்.

வீட்டிலேயே அடைந்து கிடப்போரும் படுக்கையிலிருந்து எழுந்த அதே கோலத்தில்தான் அதன்றைய பொழுதைக் கழிப்பார்களா? இல்லை. அவர்களும் தங்களுக்குத் தாங்களே ஒப்பனை செய்துகொள்வார்கள்.

பிச்சை எடுத்து வாழ்க்கை நடத்தும் ஒருவர் கூட ஒப்பனை செய்கிறார். பார்ப்போர் தன்னைப் பார்த்துப் பரிதாபப்படுவதற்கேற்ற தோற்றத்தை அவர் ஒப்பனை மூலம் ஏற்படுத்திக்கொள்ளுகிறார். ஒவ்வொருவரும் தங்களுக்கான இயல்பான தோற்றத்தை மாற்றி பிறரை வசீகரிப்ப தற்கான ஒரு தோற்றத்தை தானாகவே செய்துவிடுகிறார். இது சர்வசாதாரணமாக ஒவ்வொரு மனிதனாலும் செய்யப் படுவதனால், ஒப்பனை செய்கிறோம் என்ற எண்ணமே இல்லாமல் ஒப்பனை செய்கிறார்கள்.

மற்றவர்கள் தங்களுடைய வெளித் தோற்றத்தைப் பார்த்தே மதிப்பளிக்க வேண்டும் என்றே ஒவ்வொருவரும் விரும்புவார்கள். வீட்டிலும் சரி வெளியிலும் சரி, சராசரி மனிதன் இத்தகைய கவர்ச்சியால் உந்தப்படுவதால் ஒப்பனை ஒரு கலையாகவே மலர்ந்துவிட்டது.

அலுவலகங்களிலோ தொழிற்சாலை களிலோ பணிபுரியும் பெண்கள் தங்களை ஒப்பனை செய்துகொள்வதில் பல நுணுக்கமான அம்சங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு பெண்ணும் தன்னைத் தானே அலங்கரித்துக்கொள்வதில் குறிப்பிட்டதொரு பாணியினைப் பின் பற்றுவது அவசியமாகும். ஒரு பெண் தனக்குத்தானே செய்துகொள்ளும் அலங்காரம் அவருக்கே முதலில் திருப்தியாக இருக்க வேண்டும். ஒரு பெண் செய்யும் அலங்காரம், அப் பெண்ணுக்கு-அவருடைய உடலமைப்பு, அங்கங்களின் அளவுப்பரிமாணங்களுக்கு ஏற்றதாக அமைந்திருக்கும். அதனைப் பார்த்து எல்லோருமே பாராட்டலாம். அத்தகைய பாராட்டுத் தனக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காக அதே பாணியினை மற்றுமொரு பெண் அப்படியே பின்பற்றி விடலாகாது. தன்னுடைய அங்கங்களுக்கும் தோற்றத்துக்கும் மெருகூட்ட எத்தகைய ஒப்பனை தேவைப்படும் என்பதனை அறிந்து தீர்மானித்துக்கொள்வது அவசியமாகும்.

நமது நாட்டில் 50 ஆம் ஆண்டுகளில் தான் முதன் முதலில் உதட்டுச்சாயம் (லிப்ஸ்ரிக்) மற்றும் நகச்சாயம் (கியூரெக்ஸ்) போன்ற சாதனங்கள் பெண்களின் பாவனைக்கு வந்தன. இக்காலகட்டத்தில் பல அருவருப்பான சம்பவங்கள் நடை பெற்றதாக எமது பெரியவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன்.

கன்னங்கரேலென்ற கருமை நிறங் கொண்ட பெண்கள் கடும் சிவப்பு உதட்டுச் சாயத்தையும் அதே நிறத்திலான நகச்சாயத்தையும் பூசி வெளியே நடமாடி னால் எவ்வாறிருக்கும் என்பதைக் கற்பனைக் கண்ணால் பார்த்தீர்களானால் அந்த விகாரத்தை உணர முடியும். நவநாகரீகம் என்ற பெயரில் விளைவுகள் ஏற்பட்டுவிடக் கூடாது.

அழகு என்று நினைத்து உள்ளதையும் கெடுத்து அவலட்சணமாகிவிடலாகாது.

தனக்கேற்ற ஒப்பனை எது என்பதை தானே தீர்மானிப்பதைப் பார்க்கிலும் ஒரு பெண், வீட்டில் தாய் சகோதரிகள் இருப்பின் அவர்களிடம் ஆலோசனை கேட்டு அறிந்து கொள்ளலாம். இல்லாவிட்டால் தனது உற்ற தோழிகளிடம் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

தோழிகளிடம் அபிப்பிராயம் கேட்ப திலும் மிகக் கவனம் செலுத்தியாக வேண்டும். ஏனெனில் தோழிகளில் சிலர் உங்கள் மீது பொறாமை கொண்டு, தவறான வழிகளையும் உங்களுக்குக் காட்டி விடுவார்கள்.

இதற்கு எடுத்துக்காட்டாக உண்மையாக நடந்த சம்பவம் ஒன்றையும் கூறிவைக்க ஆசைப்படுகிறேன்.

இராஜேஸ்வரி உண்மையில் ஓர் அழகி. அவள் ஒழுங்காக புடவை கட்டிக்கொண்டு பணிமனை சென்று திரும்புவாள். அலுவலகத்தில் அவளுக்கு-அவளுடைய அழகு, அடக்கம், அவற்றுக்கேற்ற அளவான ஒப்பனை ஆகியவையே சிறப்பம் சங்களாக இருந்தன. அலுவலகத்தில் பணிபுரியும் அத்தனை ஆண்களும் இராஜேஸ்வரியுடன் பழகுவதே தங்களுக்கு பெருமை தரும் என்று கருதும் அளவுக்கு அவள் மீது பற்றுக் கொண்டிருந்தார்கள். இதனால் அலுவலகத்தில் பணி புரியும் பல பெண்களுக்குப் பொறாமை அதிகரித்தது. இராஜேஸ்வரியுடன் மிக நெருக்கமாகப் பழகிய சில பெண்கள் தங்கள் பொறாமைக்கு தூபமிட்டு வளர்த்தனர்.

"உன்னுடைய உடம்புக்கு சாறி நல்லாவே இல்ல. 'கௌன்' போட்டால் மிக அழகாக இருக்கும்" என்றாள் ஒருத்தி.

"நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய். கௌன் கூட உன் அழகுக்கு மேலும் அழகாக இருக்கு; ஆனால் இந்த கௌன் போட்ட உனக்கு இவ்வளவு நீளமான முடி அசிங்கமாக இருக்குடி" என்றாள் மற்றுமொருத்தி–

படிப்படியாக இராஜேஸ்வரியின் சட்டை முழங்காலுக்கு மேலே இரண்டு அங்குலம் உயர்ந்தது. முடியும் கழுத்துவரை வெட்டப்பட்டு உதட்டுச் சாயமும் ஏனைய அலங்காரங்களும் அவளை அவலட்சணமாக்கிவிட்டன. அவளுடைய அழகை ஏற்கனவே ஆராதித்த ஆண்களும் அவளை விட்டு ஒதுங்க ஆரம்பித்தனர்.

நாளாவட்டத்தில் இராஜேஸ்வரி மனம் பேதலித்து, வேலையிலிருந்தே விலகி விரக்தியை அணைத்துக்கொள்ள நேரிட்டது.

ஆகவே, பெண்கள் சினேகிதிகளைத் தேர்ந்ததெடுப்பதில் மிக மிகக் கவனமாக இருத்தல் அவசியம். தங்களுக்கேற்ற ஒப்பனை- அலங்காரங்களைப்பற்றி எவராவது அறிவுரை கூறினால் அதனை அப்படியே ஏற்றுக்கொள்ளலாகாது.

# கரு வளரும் காலத்தில் பெரும் கவனம் தேவை



ஒரு குழந்தைக்குத் தாயாதலே பெண்மையின் முழுமை. ஒரு உயிரை உருவாக்கி உலகுக்கு அளிக்கும் வல்லமை தாய்க்கு இருப்பதனாலேயே தாய் தெய்வத்தின் நிலையில் வைத்துப் போற்றப்படுகிறாள்.

தாய்மை எய்துவது உடலுடன் தொடர்புடையதெனினும் கர்ப்பவதி உளரீதியில் பெரும் தாக்கத்துக் குட்படுகிறாள். எத்தகைய கடுமை யான போக்குடைய பெண்ணும் கர்ப்பம் தரித்ததும் மிக மென்மை யான மனம் படைத்தவளாகிறாள்.

வயிற்றில் குழந்தை வளரத் தொடங்கியதும் அவளின் உடலில் மட்டும் மாற்றம் ஏற்படுவதில்லை. அவளுடைய சிந்தனைகள் மாற்றமடைகின்றன. விபரிக்க முடியாத பல கற்பனைகள் அவளுடைய மனத்தை ஆட்டிப்படைக்க ஆரம்பித்துவிடும்.

முதன்முதலில் தாய்மை எய்தும் பல பெண்களிடம் காரணமற்ற பயமும் காணப்படும். அருவருப்பும் காரணமற்ற கோபங்களும் ஏற்படும். உடலில் பல மாற்றங்கள் நிகழ்வதால் அடிக்கடி சிறு சிறு வருத்தங்களும் ஏற்படக்கூடும். கருப்பையில் கரு உருவாகத் துவங்கியதும் உடலின் சூட்டுத்தன்மை அதிகரிக்கும். காய்ச்சல் பல நாட்களுக்கு நீடிக்கும். மயக்கமும் வாந்தியும் தொடரும்.

இந்தக்காலங்களில் அப்பெண்ணின் தாயோ அல்லது மூத்த சகோதரிகளோ வழமையான அறிவுரைகளை வழங்கவேண்டும். அடிக்கடி மருத்துவர்களை அணுகி ஆலோசனைகளைப் பெறுவது அவசியம்.

நவீன மருத்துவ வசதிகள் மலிந்துவிட்ட இக்கால கட்டத்தில் தாய்மை எய்துவோர் எந்தநிலையிலும் பயப்படத் தேவையில்லை. எத்தகைய சிக்கலான கர்ப்பத்தையும் மிகச் சுலபமானதாக்கி விடும் சாதனங்கள் சர்வசாதாரண மாகிவிட்டன.

போதுமான உடல்வளர்ச்சியும் மன வளர்ச்சியும் பெறாத பெண்கள் தாய்மை எய்துவது தவிர்க்கப்படவேண்டும். ஒரு பெண் பூப்பெய்திய வுடன் அவள் தாய்மை அடையும் தன்மையினைப் பெற்றுவிட்டாலும் கூட அவளுடைய மனமும் உடலும் உடனடியாகத் தாய்மை அடையக் கூடியதாக இருப்பதில்லை. அவளுடைய உள்ளுறுப்புகள் தக்கவாறு வளர்ச்சியடைய வேண்டும். அதே போல அவளுடைய மனமும் பக்குவமடைய வேண்டும்.

தாய்மையெய்துவதற்கு ஏற்ற காலம் எது என்று சரியான கணக்கைச் சுலபமாகக் கூறிவிடமுடியாது. சில பெண்கள் பூப்பெய்தி இருவருடங்களில் கருவுற்று, தேகாரோக்கியமுள்ள குழந்தையினைப் பெற்றுவிடுகிறார்கள். வேறு சில பெண் களின் வயிற்றில் கரு தங்காமல் ஒன்றன்பின் ஒன்றாக கரு கலைந்து விடுவதும், அப்பெண் குழந்தையைத் தாங்கும் சக்தியினைப் பெறவில்லை என்பதற்கான காரணங்களுள் ஒன்று.

இத்தகைய காரணங்களினால் தான் நமது நாடுகளில் பெண்கள் தாய்மை அடையும் வயதை 23க்கு மேல் இருப்பது நல்லது என்று வகுத்துள்ளனர்.

கருவுற்ற பெண் சில சமயங்களில் தன் கணவர் பெற்றார், சகோதரர்கள் ஆகியோருடைய அரவணைப்பை நாடுகிறாள். இவர்கள் தன் மீது பாசம் மிகவும் பொழிய வேண்டும் என்று எதிர்பார்க்கிறாள்.

இக்காலகட்டங்களில் தன் கணவனிடம் அதிகமாகப் பேச வேண்டும் என்ற ஆர்வம் அதிகமாகும். கணவனுடன் கைகோர்த்த வண்ணம் வெளியே சென்று வரவேண்டும்- அவ்வாறு போகுமிடமெல்லாம் தனது தாய்மை எய்தும் அந்தஸ்த்தை வெளிக்காட்ட நாட்டம் ஏற்படும்.

கருவுற்ற பெண்களின் சித்தத்தைத் தடுமாற வைக்கும் கவலைகள் அவளைத் தீண்டாமல் பார்த்துக்கொள்வது மிக மிக அவசியமாகும். கவலைகள் அவளைத் தாக்குமானால் அவை அவளைமட்டும் பாதிக்காமல் கருவிலுள்ள குழந்தையையும் பாதித்துவிடும்.

# சமைப்போம்-சுவைப்போம்

**தருவது–சுகந்தினி**



**தேவையானவை:**

பசும்பால்-2 2/1போத்தல்
முட்டை- 5
வனிலா- 2 தே.கரண்டி
சீனி- 2 இறாத்தல்

**செய்முறை:**

நன்றாக பாலைக்காய்ச்ச வேண்டும். பின்னர் மென் சூடாகும்வரை அதை ஆறவைக்கவும். பின்னர் சுவைக்கேற்ப சீனி சேர்த்து முட்டை மஞ்சட்கருவும் சேர்த்து நன்றாக அடிக்கவும். பின்னர் சிறியளவு உப்பு விட்டு கலக்கிய பின் குளிரூட்டியுனுள் தாழ் வெப்பநிலையில் வைக்கவும். 3 மணி நேரத்தின் பின்னர் வெளியே எடுத்து நன்றாக அடித்துவிட்டு பின்னர் மீண்டும் குளிரூட்டியினுள் வைக்கவும். இறுகிய நிலையை அடைந்ததும் எடுத்துப் பரிமாறலாம்.

# நீங்களும் தைக்கலாம்

## தவழும் குழந்தைகளுக்குக் காற்சட்டை
## (Crawling Knickers)

தேவையான துணி 2அடி×27 அங்குலம்

மார்க்குச் செய்யும் ஒழுங்கு:





BE ஆனது ABயில் ஐந்தில் ஒருபாக நீளம். Fஆனது 3/4 அங்குலம் Aயிலிருந்து கீழ் அல்லது தாழ இருக்க வேண்டும். Gஆனது 3/4 அங்குலம் Fலிருந்து கீழ் அல்லது 1 1/2 அங்குலம் Aயிலிருந்து கீழ் இருக்க வேண்டும்.

CI=CDயில் ஐந்தில் இரண்டு பாக நீளம் இருக்க வேண்டும். பிறகு HI வளைவு காலும், FE வளைவு பின் இடுப்பும், DE வளைவு முன் இடுப்பும், EH நேர் கோடும் இழுக்கவும்.

FE,EH,HIகோடு ஓரமாகக் கத்தரிக்கோல் கொண்டு வெட்டுக. பிறகு மடிப்பைப் பிரித்து, GE கோட்டு ஓரமாக வெட்டுக.

குறிப்பு: கால், இடுப்பு மடிப்புகளை மடித்துத் தைக்க அவைகள் இருக்க வேண்டிய அளவுக்குத் துணி விட்டு வெட்டுக. இது துணியை வெட்டுவதற்கு முன் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம்.




தைக்கும் ஒழுங்கு:

1. இடுப்புக்கு ரப்பர் நாடா அல்லது சாதாரண டேப்பு உபயோகித்துக்கொள்க. இதை நுழைக்க இடுப்புப் புறம் பட்டி மடித்து, உள்ளே நாடா செல்லும்படி தைக்கவும்.
2. கால்புறம் கரையை மடித்து வைத்து, அழகுத் தையல் போட்டு, அழகுபடுத்துக.

# வீட்டுக் குறிப்புகள்




கடைகளுக்கு சென்று அலைந்ததில் கால்வலி வந்துவிட்டதா? கவலைப் படாதீர்கள். உடனடி நிவாரணம் ஒன்று இருக்கிறது. ஒரு அகலமான பாத்திரத்தில், வெதுவெதுப்பான நீரை சூடாக வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளவும். அதில் ஒரு கப் தூள் உப்பை கலந்து கொள்ளவும். பாதங் களை நீரில் அமிழ்த்தி சிறிது நேரம் வைத்திருங்கள். இப்படி செய்வதால், சிறிது நேரத்திலேயே கால்வலி இருந்த இடம் தெரியாமல் போய் விடும். பிறகு காலுக்கு ஒரு தலையணை போட்டுக் கொண்டு படுத்து விடுங்கள். சுகமான தூக்கம் வரும்.



எப்போது தலைவாரினாலும், சீப்பைக் கொண்டு 'பரக் பரக்' என்று வேக வேகமாக வாராதீர்கள். இதனால் முடி அறுந்துவிடுவதோடு, சிக்கு இருந்தால், முடி கொத்துகொத்தாக பிய்ந்து வரவும் வாய்ப்புண்டு. முதலில் முடியில் இருக்கும் சிக்குகளை கை விரல்களால் மெதுவாக எடுத்துவிட்டு, பிரஷ் கொண்டு மெதுவாக வார வேண்டும். அதன் பின்னரே, வழக்கமாக வாரும் சீப்பைக் கொண்டு தலைமுடியை வாரி அழகு செய்ய வேண்டும்.



கண்ணாடி டம்ளர்களை கழுவின உடனே பீரோவினுள் வைத்து விடாதீர்கள். ஒரு பேப்பர் மீது ஒரு மணி நேரம் கவிழ்த்து வையுங்கள். பிறகு துணியால் துடைத்து உள்ளே எடுத்து வைக்கவும். இதனால் டம்ளர்கள் புதியதுபோல் இருப்பதோடு, கீறல் விழாமலும் இருக்கும்.



எவர்சில்வர் பாத்திரத்தில் ஏதாவது கறை இருந்தால், சிறிதளவு உப்பை போட்டு நன்றாக அழுந்தத் தேய்த்து கழுவிவிடுங்கள். கறை இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

*

குழந்தைகளின் படுக்கை அறை சிறியதாக இருக்கிறதா? விதவிதமான போஸ்டர்களை ஒட்டி அழகுபடுத்த முடியவில்லையே என்று கவலைப் படுகிறீர்களா? உங்கள் குழந்தைகளுக்கு பிடித்தமான போஸ்டர் மற்றும் ஸ்டிக்கர்களை வாங்கிக் கொள்ளுங்கள். அறையின் கதவு, ஜன்னல் கதவு, மின்விசிறி, மேற்கூரை போன்றவற்றில் ஒட்டி விடுங்கள். அறை புது பொலிவுடன் மிளிரும்.

# தகவல் பெட்டி

## ஒரு கால் போனபோதும் பரிசு வென்றது!

## நொண்டிக் குதிரையின் அபார சாதனை!



ஒரு கால் போயினும்
வெற்றி நிச்சயம்
பரிசும் நிச்சயம்

அங்கங்களை இழந்து விட்டால் வாழ்க்கையே அஸ்தமித்து விட்டது போல வருந்துவோரைப் பார்த்திருக்கிறோம்.

அங்கங்கள் இழந்த போதும் தன்னம்பிக்கை தளராமல் சாதனை படைத்த மனிதர்களையும் அறிந்திருக்கிறோம்.

ஆனால் ஒரு குதிரை தன் ஒரு காலை இழந்த போதும் மீண்டும் முயன்று தன் பலம் திரட்டி வெற்றி சூடியுள்ள சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது. அதன் விபரங்கள் இங்கே உள்ளன.

ஒரு குதிரை தனது மூன்றே கால்களுடன் ஓடி 10 இலட்சம் டொலர் பரிசு வென்றது.

கலந்து கொண்ட சகல போட்டிகளிலும் தோல்வியே காணாமல் வென்று வந்த குதிரையை ஒரு காலை இழந்த நினோ என்ற பெயரையுடைய குதிரை தோற்கடித்தது.

பிரேஸில் நாட்டில் றியோ டி ஜெனரோ என்ற நகரில் நூற்றுக்கணக்கான - பிரத்தியேகமாக வரவழைக்கப்பட்ட பார்வையாளர்கள் முன்னிலையில் நடைபெற்ற சிறப்புக் குதிரை ஓட்டப்போட்டியின் போதே இந்த அதிசயம் நிகழ்ந்துள்ளது.

பெட்றோ கொயெல்ஹோ என்பவருக்குச் சொந்தமானது நினோ. ரெல்வி யோ சோபார்ஸ் என்ற இலட்சாதிபதியின் குதிரை ஜுல்ஹோ. இக்குதிரை எப்போதும் தோல்வியினைக் காணாதது என்றும் இனிமேலும் தோல்வி அடையாது என்றும் ரெல்வி யோ பெருமையாகக் கூறினார். தனது குதிரையை வேறோர் குதிரை ஓட்டப் பந்தயத்தில் வெல்லுமானால் 10 இலட்சம் டொலர் தருவதாக சவால் விட்டார். இந்தச் சவாலினை பெட்றோ ஏற்றுக் கொண்டார். ஆனால் பெட்றோவின் குதிரை நினோவுக்கு ஆக மூன்றே கால்கள் தான். பிறந்து நாலாவது மாதத்தில் ஒரு மோட்டார் இக்குதிரை மீது மோதியதில் முன்புற இடதுகால் காயமுற்றது. அக்காலை முழுமையாக கழற்ற வேண்டிய நிலை உருவானது.

சவாரிகளில் திறமையாக ஓடும் குதிரையின் குட்டி என்பதனால் நினோ காலை இழந்தாலும் கெந்திக் கெந்தி ஓடும் வலிமையினை இயல்பாகவே பெற்றிருந்தது. எழுந்து நடமாடுவதே முடியாத காரியம் என்று மிருக வைத்தியர்கள் கைவிட்டிருந்த போதும் நினோ எழுந்து நடமாடத்துவங்கவே, தக்க பயிற்றுநர் மூலமாக சவாரிக்கான பயிற்சிகள் அக்குதிரைக்கு அளிக்கப்பட்டன. நான்கு கால்களுமுள்ள குதிரை களைப் போன்றே பாய்ந்து ஓடும் சக்தியினை நினோ வெகு விரைவில் பெற்றுக்கொண்டது. பெட்றோ இதனால் மகிழ்ச்சியடைந்ததுடன் மேலும் சிரத்தை எடுத்து பயிற்சிகளைக் கொடுக்கலானார்.

இந்தக் காலகட்டத்தில்தான் ரெல்லி யோ என்பவரின் ஜுல்ஹோ குதிரையின் தோல்வியடையாத தகவலும் ரெல்வி யோவின் சவாலும் பெட்றோவின் காதில் விழுந்தது. பெட்றோ சவாலினை ஏற்றார்.

றியோடி ஜெனரோவில் ஒரு குதிரை சவாரி மைதானத்தை ரெல்வி யோ சோபார்ஸ் ஏற்பாடு செய்தார். தனது நண்பர்கள் நூறு பேருக்குமேல் அழைப்பு விடுத்தார்.

5 ⁚ பெர்லோங்தூரச் சவாரிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

போட்டி துவங்கியதும் நினோ நொண்டிக் கொண்டே தயங்கியது போல் காணப்பட்டது. ஆனால் திடீரென ஏற்பட்ட உத்வேகத்தினால் அது தாவிக்குதித்து ஓட ஆரம்பித்தது. போட்டி முடிவில், தோல்வியே காணாததெனக் கூறப்பட்ட ஜுல்ஹோவை 10 யார் தூரத்தால் தோற்கடித்து பந்தயத்தில் வெற்றி பெற்றது. இந்தத் தூரத்தினை நினோ ஒரே நிமிடத்தில் தாண்டியிருக்கிறது.

விபத்துக்குள்ளான நினோ இனிமேல் எழுந்து நடக்கவே முடியாதிருக்கும் என்று கூறிய பலர் அது வேதனையால் துடிப்பதைப் பார்த்துச் சகிக்காமல், அதனைக் கொன்று விடும்படி தன்னிடம் கூறினார்களாம். அவ்வாறு அதனை கொன்றுவிட தனக்கு மனமில்லாமல் போய்விட்டது என்று பெட்றோ கூறுகிறார். அந்தப் பிராணியின் கண்களில் புதிய நம்பிக்கை ஒளியை அப்போது அவதானித்ததாகவும் அந்த நம்பிக்கை வீண் போகவில்லை என்றும் அவர் கூறுகிறார்.



ஒரே தடவையில் 15 குட்டிகளை ஒரு நாய் ஈன்றெடுத்துள்ளது. இங்கிலாந்திலுள்ள சொமர்செட் என்ற நகரில் தான் இந்த அரிய சம்பவம் நடந்துள்ளது.

சென் பேணார்ட் ரகத்தைச் சேர்ந்த இரண்டு வயதான ஜென்னா என்ற நாயே இந்தப் 15 குட்டிகளையும் ஈன்றெடுத்தது. தாயும் குட்டிகளும் சுகமாக உள்ளன.

ஜென்னா சற்று களைப்படைந்தும் மெலிந்தும் காணப்பட்ட போதிலும் சீக்கிரமாகவே தேறிவிட்டது. இதனை வளர்க்கும் காள் மொண்ட்கொமாறியும் மனைவி சியூவும் தாயையும் குட்டிகளை யும் மிகக் கவனமாகக் கண்காணித்து வருகின்றனர். தாய் நாயின் பால் 15 குட்டிகளுக்கும் போதாதிருப்பதனால் புட்டிப்பாலும் கொடுக்கப்படுகின்றது. தாய் நாய்க்கு தினசரி 6 இறாத்தல் இறைச்சி கொடுக்கப்பட்டு வருகிறது.

குட்டிகள் அனைத்தும் கண்களை விழித்துக்கொண்டன. காள் வேகமாக வளர்கின்றன என்கிறார் திருமிதி சியூ மொண்ட்கொமறி.

நல்ல செய்திதான்.

## பெற்றுப் போட்டது 15 குட்டிகள்!

## நலமாய் உள்ளன நாயும்–குட்டிகளும்



## வாயைப் பிளக்க வைக்கும் -வரிப் பாக்கி

படத்தில் இருப்பவர் பிரபல பொப் இசைப் பாடகர் மைக்கல் ஜாக்சனின் சகோதரி. ஜாக்சனைப் போலவே இருக்கிறார்.

இருக்கட்டும். விசயம் என்னவென்றால் இந்தச் சகோதரி தனது சொந்தவீட்டுக்கு சொத்து வரிகட்டாமல் பாக்கி வைத்திருக்கிறார்.



லாடொயா ஜாக்சன்

பாக்கி எவ்வளவு? அதிகமாய் ஒன்று மில்லை. ஒரு கோடியே 50 இலட்சம் மட்டும்தான்.

இருக்கிறது. என்றாலும் கொடுக்க மனம் வருமோ? அதுதான்.

## திருட்டிலே ஒரு சாதனை! 40 வருட பழுத்த திருடன்!!



இத்தாலி நாட்டைச் சேர்ந்தவன் கீட்டானோ. தொழில்- திருடுவது.

இன்று நேற்றுத் தொடங்கிய தொழில் அல்ல.

28 வயதில், கீட்டானோ திருட ஆரம்பித்தான். இப்போது 68 வயது. 40 வருட திருட்டு அனுபவம்.

எத்தனை இடங்களில் கைவரிசை காட்டினான் என்ற விபரத்தை விரல் நுனியில் வைத்திருக்கிறான். மொத்தமாக பத்தாயிரத்தி நூற்றி ஐம்பது வீடுகளில் சுருட்டியிருப்பதாகச் சொல்கிறான். புள்ளி விபரம் கையில் இருப்பதால் கீட்டானோவுக்கு ஒரு ஆசை.

எல்லாச் சாதனைகளுக்கும் இடம் கொடுத்து, சாதனை செய்தவரின் பெயரை குறித்து வைக்கும் உலக சாதனைப் புத்தகமான கின்னஸில் தனது பெயரும் இடம்பெற வேண்டுமாம். இதைச் சொல்ல கீட்டானோ வெட்கப்படவில்லை. தனது தொழில் பற்றி கீட்டானோ என்ன சொல்கிறான் தெரியுமோ? "நான் செய்வது தவறான தொழில் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இதனைத் தவிர 'வேறு தொழில் செய்ய எனக்குத் தெரியாது."

கிட்டானோ பக்காத்திருடன் மட்டுமல்ல, பழுத்த திருடன்.

## இவர் இப்படி!

தான் கொஞ்சம் கறுப்பு நிறம் என்று தெரியாத அளவிற்கு மேக்கப்பில் தனிக்கவனம் எடுத்துக் கொள்வார் பானுப்பிரியா.
புகைப்படம் எடுத்துக்கொள்வதில் ஆர்வம் உள்ளவர். போஸ் கொடுக்கப் பின்விற்க மாட்டார். புகைப்படக் கலை பற்றியும் அறிந்து வைத்துள்ளார்.

## யோசனையால் தாமதம்

இளையராஜாவின் இசைமீது நம்பிக்கைவைத்து உருவாகிவரும் படம் குயில்பாட்டு.
சரவணன், பிருதிவிராஜ், சின்னி ஜெயந்த் ஆகியோருக்கு சமமான முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்படும் படம் குயில்பாட்டு. சரவணன் பாடகராக நடிக்கிறார்.
ஆரம்பத்தில் வேகமாக நடந்த படப்பிடிப்பு இப்போது தாமதமடைந்துள்ளது. சரவணனின் மார்க்கெட் சூடு குறைந்திருப்பதால் தயாரிப்பாளர் யோசிப்பதாகத் தகவல்.


## "குளிர்காத்து-காப்பாத்து" பாடுகிறார் ஆஷா போன்ஸ்லே!

சேதுபதி ஐ.பி.எஸ். படத்தில் தீவிரவாதிகளிடம் மாட்டியுள்ள குழந்தைகளை மீனா காப்பாற்ற முயல்வதாக ஒரு காட்சி.
பாதாள சாக்கடை வழியாக ஒரு மாணவனை விஜயகாந்திடம் அனுப்ப வேண்டும். ஆனால் தீவிரவாதிகள் உஷாராக இருக்கிறார்கள். என்ன செய்வதென்று யோசித்த மீனா தீவிரவாதிகளைத் தன் கவர்ச்சியால் மயக்க நினைக்கிறார். உடனே ஒரு பாடல்.
"இப்ப காத்து, நடை காத்து, குளிர்காத்து, காப்பாத்து, கையைக் கோர்த்து இடம் பார்த்து கொடி மேத்து" பாடல்வரிகள் அதுதான்.
இந்தப் பாடலை இளையராஜா முக்கியத்துவம் கொடுத்து இசையமைத்துள்ளார். பாடலை பாடியிருப்பவர் இந்தித் திரையுலகின் முன்னணிப் பாடகி ஆஷா போன்ஸ்லே.

வேல் விழிகள் போதுமே எம்மை வீழ்த்த பின்னர் எதற்காக ஏனைய படைக்கலங்கள்?



படம்-குயில்பாட்டு
சின்னி ஜெயந்த்



பல்லவி

## படப்பிடிப்பில் பிறந்தநாள்!

சுகன்யாவுக்கு சத்யராஜ் படங்களின் படப்பிடிப்புக்களில்தான் கடந்த இரண்டு வருடமாக பிறந்தநாள் கொண்டாட்டங்கள்.
92ம் ஆண்டு வால்டர் வெற்றிவேல் படத்தின் படப்பிடிப்பில் பெரிய கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடினார்.
இம்முறை சத்யராஜ் படமான வண்டிச் சோலை சின்ராசு படப்பிடிப்புக்காக பொள்ளாச்சிப் பகுதியில் இருந்த சுகன்யா அங்கு தனது பிறந்தநாளைக் கொண்டாடினார்.
தமிழில் ரஜனி தவிர்த்த பிரபல கதாநாயகர்கள் சகலரோடும் ஜோடியாக நடித்துவிட்டதில் சுகன்யாவுக்கு மகிழ்ச்சி.
காப்டன் படத்தில் சரத்குமார் காப்டன். சுகன்யா கலெக்டராக நடிக்கிறார். மகாநதியில் கமலுக்கு ஜோடியாக நடிக்கிறார். சுகன்யாவுக்கு கோடம்பாக்கம் வட்டாரம் சூட்டியுள்ள பட்டம் மூக்கழகி.
சுகன்யா இப்போது கவலைப்படுவது ரோஜா-சிவரஞ்சனி போன்றோர் தன்னை முந்திவிடுவார்களோ என்பதைப் பற்றித்தான்.
முன்புபோல் நிபந்தனைகள் போடாமல் நடிக்கத் தொடங்கியிருப்பதும் அதனால் தான்.

## சண்டையும் வேண்டும்!

ரேவதியின் கணவர் சுரேஷ் மேனன் இயக்கி வரும் பாசமலர்கள் படத்தில் கதைப்படி சண்டைக்காட்சி எதுவும் கிடையாது. ஆனால் இப்போது அரவிந்தசாமியும் ரகுவரனும் மோதிக் கொள்ளும் காட்சியை இணைத்துள்ளார்கள். ரகுவரன் ஒரு சில காட்சிகளில் மட்டுமே நடிக்கிறார். ரகுவரனின் நடிப்பாற்றலை அரவிந்தசாமி கைகுலுக்கிப் பாராட்டினார். பாசமலர்கள் விரைவில் திரைக்கு வருகிறது. இயக்கம் சுரேஷ்மேனன். இசை நரசிம்மன்.

## பல்லவியிடம் ஒரு பட்டியல்!

இன்றுள்ள தமிழ் திரையுலக நடிகைகளில் அதிக மொழிகள் அறிந்தவர் யார் என்று கேட்டால் உடனே கை உயர்த்திக் கொண்டு வருபவர் பல்லவி.
தமிழ், தெலுங்கு, மலையாளம், பஞ்சாபி, குஜராத்தி, மராட்டி, இந்தி, பிரெஞ்ச், ஜெர்மன், ஆங்கிலம் என்று தெரிந்த மொழிகளின் ஒரு பட்டியலே வைத்திருக்கிறார்.
வள்ளியில் பால்காரி வேஷம் படு கவர்ச்சியாய் அமைந்ததில் ஆட வருமாறு அழைப்புக்கள் குவிகிறதாம். ஏற்பதா? விடுவதா என்று யோசித்து வருகிறாராம்.

## திறமை மட்டும் போதாது திரையுலகம் பற்றி-சிவரஞ்சனி!

ராசதுரை படத்தில் கிளு கிளுப்பாக நடித்தது பற்றி சிவரஞ்சனியிடம் பத்திரிகைகள் சார்பில் கேள்வி மேல் கேள்வி. உடனே சிவரஞ்சனி பதில் சொல்லிவிட்டார்
இளமையாக இருக்கும் போது கவர்ச்சி காட்டாமல் ஐம்பது வயதிலா கவர்ச்சி காட்டமுடியும்
நடிப்புத்துறையில் போட்டிகள் அதிகம். வெறும் திறமையை மட்டும் காட்டினால் போதாது.
கவர்ச்சியாகவும் நடிக்க வேண்டும். என்று சொல்லிவிட்டார் சிவரஞ்சனி.

## மினி சினி

★ கமலை வைத்து மூன்றாம் பிறை படத்தை இயக்கியவர் பாலுமகேந்திரா. மீண்டும் பாலுமகேந்திராவின் இயக்கத்தில் கமலஹாசன் கதாநாயகனாக வித்தியாசமான வேடமொன்றில் நடிக்கவிருக்கிறார்.

★ சங்கிலி மூலம் பிரபுவை அறிமுகப்படுத்திய சி.வி. ராஜேந்திரன் தயாரித்து, சந்தான பாரதி இயக்கும் படம் 'இன்று முதல்.' இப்படத்தில் முதன்முதலாக பிராமண இளைஞனாக பிரபு நடிக்கவுள்ளார்.

★ கார்த்திக் நடிக்கும் புதிய படமொன்றை இயக்கி வருகிறார் ராஜ்கபூர். இதே நேரத்தில் பாவலர் கிரியேசன்ஸ் சார்பில் ஆர்.டி. பாஸ்கர் தயாரிக்க, புதுமுகங்கள் நடிக்கும் புதிய படமொன்றையும் இயக்குகிறார்.

★ சத்தியராஜ் தமிழில் நடித்த படங்கள் தெலுங்கில் தயாராகும் போது அதிகமாக அதில் நடிப்பவர் மோகன்பாபு. தற்போது சத்தியராஜின் வால்டர் வெற்றிவேல் தெலுங்கில் தயாரான போது, சுப்ரீம் ஸ்டார் சிரஞ்சீவி, சத்தியராஜின் வேடத்தில் நடித்துள்ளார்.

★ ஐந்தி புத்ருடு என்ற தெலுங்குப் படத்தில் முதன் முதலாக நடிக்கிறார் நெப்போலியன். பிரதான வில்லனாக நடித்து வரும் இவர், சொந்தக் குரலிலேயே தெலுங்கு வசனங்களைப் பேசுகிறார்.

★ அன்னையின் பாசமலர்கள் படத்திற்கான கதை விவாதத்தில் கணவர் சுரேஷ் மேனனுடன் ரேவதி கலந்து கொண்டார். விரைவில் சுரேஷ் மேனன் கதை வசனத்தில் படமொன்றை ரேவதி இயக்க இருக்கிறார்.

★ பானுப்பிரியாவின் நூறாவது படத்தை அவரே தயாரிக்கிறார். இப்படத்தை இயக்குவதற்காக பிரபல இயக்குநர் மகேந்திரனை அணுகியுள்ளார்.

★ பாரதிராஜாவின் புது நெல்லு புது நாத்து படத்தில் அறிமுகமாகியவர் சுகன்யா. இவர், அண்மையில் வெளிவந்த கிழக்குச் சீமையிலே படத்தில் அங்கினி என்ற பெயரில் நடித்துள்ளார்.

★ தென்றல் வரும் தெரு படத்தில் இடம்பெறும் பாடல் ஒன்றிற்காக சென்னையைச் சேர்ந்த சில கல்லூரி மாணவர்களைத் தனது இசையமைப்பில் பாடவைத்துள்ளார் இளையராஜா. அத்துடன் பாடலைப்பாடிய அத்தனை பேருக்கும் தனது அன்புப் பரிசாகக் குத்து விளக்குகளை வழங்கினார்.



சுகன்யா

★ நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இரண்டு நேரடித் தமிழ்ப்படங்களில் நடித்து வருகிறார் கமல். ஒன்று ஆர்.கே. செல்வமணியின் அதிரடிப் படை, மற்றொன்று பிரபல தெலுங்கு இயக்குநரின் பெயரிடப்படாத படம்.

## தலைப்பிலே புதுமை!

தமிழ் படங்களின் பெயர்களில் புதுமைகள் ...ல தலைகாட்டி வருகின்றன.
பொன்விலங்கு என்ற படத்தின் நாயகன் ...ஞ்சித் நடிக்கும் படத்தின் பெயர் ஆர். வீரப்பன். ...பார்த்திபன் எழுதி இயக்கி நடிக்கப் போகும் ...ரு படத்தின் பெயர் சரிகமபதநி.

## கமலின் மற்று...
## புதுமை...

# சினிவிசிட்



## புதிய காதல் ஜோடி அறிமுகம்! தயாராகிறது புதிய படம் "மே மாதம்"

பிரபல படத்தயாரிப்பாளர் ஜி.வெங்கடேஸ்வரன் தயாரிக்கும் புதிய படத்திற்கு மே மாதம் என்று பெயரிடப்பட்டுள்ளது.

இசை: ஏ.ஆர்.ரஹ்மான். மணிரத்தினத்தில் உதவியாளராக நாயகன் படத்தில் இருந்து பணியாற்றியவரான பாலசுப்ரமணியம் அவர்தான் மே மாதம் படத்தின் இயக்குநர். படத்தில் நடிப்பவர்கள் அனைவரும் புது முகங்கள். பூனாவைச் சேர்ந்த அழகியான சோனாலியா கதாநாயகியாக நடிக்கவுள்ளார். தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று திரைக்குக் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளார்கள்.

## முக்கிய வேடத்தில் குரங்கு!

இயக்குநர் ஆர். சுந்தர்ராஜன் முக்கிய வேடத்தில் நடித்து இயக்கப் போகும் படத்தின் பெயர்: சாமி சொன்னா சரிதான். ஆர். சுந்தர்ராஜனோடு முக்கிய வேடத்தில் குரங்கொன்றும் நடிக்கப் போகிறது. அதன் பெயர் ராமு.

ராஜா, காவேரி, டெல்லி கணேஷ், ஸ்ரீவித்யா, லொள்ளு ஆகியோரும் நடிக்கின்றனர். இசை தேவா. கதை: இளையராஜா.

## நானே ராணி!

தமிழில் போலீஸ் லாக்கப் சண்டை போடு போடுவதால் தமிழிலும் நான்தான் ராணி என்று விஜய சாந்தி பெருமிதம்.

விஜயசாந்தியை வைத்து எப்படியாவது ஒரு படம் தமிழில் தயாரிக்க வேண்டும் என்று பிரபல பட நிறுவனங்கள் சில அறைக்காகவில் இருக்கின்றன.

பட்டியாக சம்மதம் சொல்லாமல் காமித்து வருகிறார் விஜயசாந்தி.

போலீஸ் லாக்கப் ஆடி கிளப்பியுள்ள கால் சூட்டோடு சூடாக விஜயசாந்தியின் தெலுங்குப் படங்கள் தமிழில் மாற்றப்படுகின்றன.



இதய ராச்சியம் உனக்காக இருக்க வெளியே ஏனடி நீ வந்திருக்க வேண்டும்?

விஜய சாந்தி

## மனோரமா–விஜயகுமார் ஜோடியாக!

தாய் சொல்லைத் தட்டாதே என்ற கருத்தோடு பல படங்கள் வந்துவிட்டன.

இப்போது கஸ்தூரிராஜாவின் இயக்கத்தில் தாய்மனசு என்றொரு படம் உருவாகி வருகிறது. தாய்சொல்லைக் கேட்காத பிள்ளை கஷ்டப்படும் என்பதை புதுவிதமாய் சொல்லியிருக்கிறார்களாம்.

தாய் மனசு படத்தில் தாயாக நடிப்பவர் மனோரமா.

சுத்தப்பிள்ளையாக சரவணனும், செத்தபிள்ளையாக பிருதிவிராஜும் நடிக்கின்றனர்.

பல தலைமுறை கண்ட மனோரமா தாய்மனசு படத்தில் விஜயகுமாருக்கு ஜோடியாக நடிக்கிறார்.



மனோரமா

## ஜெய்ஹிந்த்

தமிழ்ப் படவுலகில் சகுனம் பார்ப்பது, ஜோசியம் பார்ப்பது என்பதற்கு வரைமுறையே கிடையாது. படத்தின் பெயர் வைக்கவேண்டுமா எண்கணித ஜோசியம் பார்ப்பார்கள்.

அர்ஜுன் இயக்கி நடிக்கும் படம் ஜெய்ஹிந்த். ஆனால் 'த்' கிடையாது. அதனால் ஜெய்ஹிந். காரணம் எண்கணித சாஸ்திரப்படி 'த்' வந்தால் ஒரு எழுத்து கூடிவிடும். ராசியில்லையாம்.

## பாடல்கள் இல்லாத ஏர்போர்ட்

மலையாளப் பட இயக்குநர் ஜோஷி வித்தியாசமான படங்களை இயக்குபவர் என்று பெயர் எடுத்தவர்.

அவரது இயக்கத்தில் உருவாகி திரைக்கு வந்துள்ள தமிழ் படம் ஏர்போர்ட்.

படப்பிடிப்பில் பல தாமதங்கள். படம் வருமோ வராதோ என்று பல சர்ச்சைகள். ஒரு விதமாய் படம் திரைக்கு வந்துவிட்டது.

பாடல்கள் கிடையாது. ஏற்கனவே எடுக்கப்பட்ட பாடல் காட்சிகளும் படத்தில் கிடையாது. அதனால் விறுவிறுப்புக் குறையாமல் படம் வேகம் பிடிக்கிறது.

சத்யராஜ் சண்டைக் காட்சிகளில் தூள் கிளப்ப, அவருக்கு ஜோடியாக கௌதமி நடித்துள்ளார். படம் சத்யராஜுக்கு மற்றொரு வெற்றிப்படமாகியுள்ளது.

தமிழ்நாடு சின்னத்திரைகளிலும் ஏர்போர்ட் ஓடிக்கொண்டிருக்கிறது. பார்க்கலாம் பொழுது போக ஒரு படம்.

## கௌதமிக்குப் பிடித்தது!

கௌதமிக்கு சினிமாப் பாடல்களில் பிரியம் அதிகம்.

படப்பிடிப்புகளில் ஓய்வு கிடைக்கும் போது பெரிய டேப் ரெக்கார்டரில் பாடல்களைக் கேட்டபடி இருப்பார்.

கௌதமிக்கு பிடித்த பழைய பாடல், "காலங்களில் அவள் வசந்தம்."

இப்போது ஓய்வு அதிகமாக இருப்பதால் பழைய பாடல்களை மட்டுமல்ல பழைய படங்களையும் அவர் பார்க்கிறாராம்.

## காதோடு சொல்லுகிறோம்

* தன் நடிகைக்கு புருஷன் வீட்டுத் தொல்லையாம். நடிப்புக்கு முழுக்குப் போடச் சொல்கிறாராம் மாமியார். சில புதுப்பட வாய்ப்புகளை மறுத்திருக்கிறார். இன்னும் ஒரு முடிவு செய்யவில்லை என்றும் கூறுகிறார். வெளியூரில் போய் செட்டிலாகவும் அந்த நடிகையின் கணவருக்கு எண்ணமிருக்கிறதாம்.
* நதிய நடிகைக்கு கவர்ச்சி கூடவே கூடாது என்று கணவர் கண்டிப்பாய் கூறிவிட்டாராம். அதுதான் ஒரு கலக்கு கலக்க முடியாமல் இருக்கிறது. இல்லாவிட்டால் தன்னோடு ஒரு நடிகையும் போட்டியில் நிற்க முடியாது என்கிறார் நடிகை. கணவருக்கு நன்றி.
* பெரிய நடிகர்கள் மீது கோபத்தில் இருக்கிறார் 'மென்' நடிகை. முன்பு அப்பாவு எல்லாவற்றை தேடினார்கள். இப்போது திரும்பியும் பார்ப்பதில்லை என்று ஆத்திரம் தீர ஒரு பிடி பிடிக்கிறார்.
* ரோசி நடிகை மார்க்கெட் மங்கிவிட்டதை நினைத்து கவலைப்படவில்லையாம். நட்சத்திர இரவுகளுக்கு நிறைய அழைப்புகள் வருகிறதாம். படப்பிடிப்பு இல்லையென்றாலும் வருமானம் வருகிறதே அதுபோதும் என்று திருப்திப்படுகிறார்.
* இளைஞமைப்பாளர் மான ஆசைப்பட ஆரம்பித்துவிட்டார் என்கிறது கோடம்பாக்கம் வட்டாரம். இப்போது பந்து இசைக்க கேட்கிறாராம். சம்பாதிக்க ஆசை. அதில் என்ன தவறு?
* பிரிய நடிகையின் சகோதரர் அக்காவை பெரிய நடிகையாக்க முயற்சி செய்கிறாராம். கதை எழுதுகிறவர்களை அழைத்து அக்காவுக்கு முக்கியம் கொடுத்து நல்ல கதை எழுதுமாறு சொல்லியிருக்கிறார். எவ்வளவு செலவானாலும் சரி, பெரிய படம் ஒன்று மீண்டும் எடுத்தே தீருவது என்று சபதம் செய்துள்ளாராம்.
* சின்னப்பூ நடிகையிடம் கவர்ச்சியாக நடிக்கலாமா என்று கேட்டால் போச்சு. கோபம் பொத்துக்கொண்டு வந்துவிடும். நான் என்ன ஜொலிப்பார் படத்திலா கவர்ச்சியாக நடிக்கிறேன். இதெல்லாம் பெரிய விஷயமே இல்லை என்று துள்ளுகிறார்.
* இரத்தினமான இயக்குநர் தன் சொந்தப்படக் கம்பெனியை மூடிவிடுவது பற்றி யோசித்து வருகிறாராம். வெளிக்கம்பெனிக்கு படம் இயக்கிக்கொடுத்தால் நஷ்டம் வந்தாலும் பாதிக்காது என்பதே காரணமாம்.



சல்மான்கான்

## மீண்டும் ஒரு பிடிக்காக!

இந்தித் திரையுலகில் பிரபலமாகி இளம் உள்ளங்களைக் கிள்ளி வந்தவர் சல்மான்கான்.

50 இலட்சம் ஊதியம் வாங்கும் அளவுக்கு புகழேணியில் ஏறினவர்.

மைனே ப்யார் கியா மூலம் இந்தியில் வெற்றிக்கொடி நாட்டியவர். அந்தப் படமே தமிழில் காதல் ஒரு கவிதை என்ற பெயரில் மொழிமாற்றம் செய்யப்பட்டது.

இப்போது சல்மான்கானுக்கு கொஞ்சம் மார்க்கெட் டல்.

"ஹம் ஆப் கே ஹைன் கௌன்" படத்தில் நடித்து வருகிறார். ஜோடி மாதுரி தீட்சித். படம் திரைக்கு வந்த பின்னர் மீண்டும் ஒரு பிடி பிடிக்கலாம் என்று நம்பிக்கையோடு இருக்கிறார்.

## இரு மொழிகளிலும் ஒரு படம்

பிரபலமான தெலுங்கு இயக்குநர் ஸ்ரீ உமா மகேஸ்வரராவ் இயக்கிய படம் அங்குரம். அது தேசிய விருது வாங்கி அதில் நடித்த ரேவதிக்கும் நல்ல பெயரைக் கொடுத்தது.

இப்போது உமா மகேஸ்வரராவ் தமிழ், தெலுங்கு இரு மொழிகளிலும் படம் ஒன்றை இயக்கப் போகிறார்.

மம்முட்டி–கமல், நாசர், நக்மா, ஷோபனா, மாலாஸ்ரீ என்று ஒரு பட்டாளமே உண்டு.

கவர்ச்சிக்கு நக்மா. மாலாஸ்ரீ ரவிக்கை அணியாத மலைவாசிப் பெண்ணாக நடிக்கிறார். ஒளிப்பதிவு மது அம்பட். இசை மரகதமணி.

பெரும் பொருட்செலவில் தயாராகப் போவதாகப் பேசுகிறார்கள். பெயர் இன்னமும் வைக்கவில்லை. அதிரடியான பெயர் ஒன்றுக்காக தயாரிப்பாளர் பலரிடமும் கேட்கிறார்.

கமலுக்கு மீண்டும் தமிழில் பெயர் எடுத்துக்கொடுக்கும் படமாக இது அமையலாம்.



வெட்கம் ஏனோ
வெண்ணிலவே
உன்
பக்கம் வந்த
கள்வன் யாரோ
உனக்குள்
வெட்கம் விதைத்தானோ?

மோகினி

## காணவில்லையாம்!

தமிழில் வாய்ப்புக்கள் குறைவாக இருப்பதால் மோகினி வருத்தத்தில் இருக்கிறார். பிறமொழிப் படங்களில் கிடைக்கும் நல்ல மதிப்பை தமிழ் திரையுலகில் காண முடியவில்லை என்று கூறுகிறார். பிறமொழிப் படங்களில் நிறைய அழைப்புக்கள் வருவதாகக் கூறுகிறார்.

## இந்த ஆண்டும் குஷ்பூவும்

தமிழில் மீண்டும் நம்பர் ஒன் ஆகிவிடுவேன் என்கிறார் குஷ்பு.

அதற்கான உதாரணத்தையும் அவரே சொல்கிறார் கேளுங்கள்.

எனது முதல் படமான தர்மத்தின் தலைவன் வெளிவந்த பிறகு ஓராண்டு வீட்டில் இருந்தேன். சரியான வாய்ப்பு வரவில்லை.

அதன்பின்னர் "வருஷம் 16" கிடைத்தது. அந்தப்படம் வெற்றியாகியும் பெரிய வாய்ப்புக் கிடைக்கவில்லை.

மீண்டும் ஓராண்டு இடைவெளி. அதன் பின்னர் "சின்னத்தம்பி"யால் பிஸியானேன் என்கிறார் குஷ்பு.

தன் ஜாதகப்படி ஏற்றமும் இறக்கமும் மாறி மாறி வரும் என்றும் சொல்கிறார்.

குஷ்பு பொறுமைசாலி. இந்த ஆண்டு மீண்டும் பிஸியாகும் நம்பிக்கையில் இருக்கிறார்.

## சுமிதா சொன்ன இரகசியம்!

சினிமாவுக்கு வந்து பதினைந்து வருடமாகியும் உடலை கட்டாக வைத்திருப்பது எப்படி என்று சில்க் சுமிதாவை எல்லோரும் கேட்கிறார்களாம்.

உடனே தன் கட்டான உடலுக்கு காரணமான இரகசியங்களை சுமிதா சொல்லியிருக்கிறார்.

காலையில் நடைப்பயிற்சி, உடற்பயிற்சி. பசி எடுத்தால் கூட இனிப்பு குடிப்பாரே தவிர வெளியே சாப்பிடமாட்டார்.

வெண்ணெய், ஐஸ்கிரீம் போன்றவற்றை தொட்டுப் பார்ப்பது கூடக் கிடையாது.

பச்சைக் காய்கறிகளை வேகவைத்து சூப் சாப்பிடுவதுண்டு.

வெள்ளரி, காரட் போன்றவற்றை பச்சையாகவே சாப்பிடுவார்.

சுமிதாவின் ஆலோசனை இளமை விரும்புவோருக்கு உதவலாம்.

சுமிதா சொல்லியுள்ள இன்னொரு தகவல், பிரபல பட நிறுவனம் ஒன்று தயாரிக்கப்போகும் படமொன்றில் நடிப்பை வெளிப்படுத்தக் கூடிய பாத்திரம் ஒன்று கிடைக்கவிருக்கிறதாம்.

## பாப்பா முரசு சிறுகதை

ஊர் மக்கள் எல்லாம் ஒன்று கூடி அந்த ஊர் ராஜாவை பரிசலில் நெடுந் தூரத்திலுள்ள காட்டிற்கு வழியனுப்பி வைத்தார்கள். அரசர் மட்டுமல்ல, அவரது அனைத்துக் குடும்பமும் சோகமே உருவாகப் பரிசலில் அமர்ந்திருந்தார்கள்.

அரசரை ஊர் மக்கள் எல்லாம் சேர்ந்து வழியனுப்புவதா? இதென்ன புது வழக்க மாக இருக்கிறது என நீங்கள் ஆச்சரியப் படலாம். ஆம். அதுதான்அந்த நாட்டு வழக்கம்.

ஒரு யானை துதிக்கையில் மாலையைத் தூக்கிக் கொண்டு ஊரை வலம் வரும். யானைக்குப் பயந்து ஊர் மக்கள் எல்லாம் ஓடி ஒளிந்து கொள்வார்கள். தப்பு... தப்பு..... யானைக்குப் பயந்து அல்ல. அது கொண்டு வரும் மாலைக்குப் பயந்து.

மாலையில் அப்படி என்ன பயம்? யார் கழுத்தில் யானை மாலையிடுகிறதோ அவரே அந்த நாட்டிற்கு மன்னராகி விடுவார். இந்த விசித்திர வழக்கம் அந்த நாட்டில் இருந்தது. ராஜாவாக ஏன் அனைவரும் ஓடி ஒளிய வேண்டும் என்பதற்கும் ஒரு முக்கிய காரணம் இருந்தது.

அந்த அரசர் ஐந்தாண்டு ஆட்சி செலுத்திக் கொண்டு சுகபோகத்தில் வாழலாம். அந்த ஐந்தாண்டு காலமும் அந்த அரசர் கிழித்த கோட்டை யாரும் தாண்டக்கூடாது. அத்தனை செல்வாக்குடன் அரசாளலாம். அக்கம்பக்கத்து அரசர்கள் யாரும் அந்நாட்டின் மீது படையெடுத்து வரமாட்டார்கள். வராமல் பொதுமக்கள் பார்த்துக்கொள்வார்கள்.

ஐந்தாண்டு ஆட்சிக்காலம் முடிந்த பிறகுதான் அவருக்குச் சோதனை ஆரம்ப மாகும். அந்த அரசர் குடும்பத்தோடு நாட்டை விட்டு வெளியேறி ஆற்றைக் கடந்து வெகு தூரத்திலுள்ள காட்டிற்குள் குடிபோக வேண்டும். கொடிய வன விலங்குகள் உள்ள அந்த காட்டிற்குள் அரசருக்கென ஓலைக்குடிசை ஒன்று அமைக்கப்பட்டிருக்கும். அரசர் அங்கு போய் வசிக்க வேண்டும். குடும்பம் நடத்தத் தேவையான அரிசி, பருப்பு, எது வேண்டுமானாலும் கொண்டு போகலாம். அங்கே ஐந்து வருட காலம் அப்படிக் கஷ்ரப்பட்டு வாழ்ந்த பிறகு, மீண்டும் இதே ஊருக்குள் வந்து சாதாரண குடிமகனாக வாழ்க்கை நடத்தலாம்.

இது அந்த நாட்டின் பரம்பரை பரம்பரையான சட்ட திட்டமாகும். அதனால் அரசராக மாறுவதற்கு எல்லோரும் பயந்தார்கள். அதன் பிறகு யானையிடம் மாலையைக் கொடுத்து அது யாருக்கு மாலையிடுகிறதோ, அவர் அரசராக வேண்டும் என்பது கண்டிப்பாக்கப்பட்டது.

ஊர் மக்களெல்லாம் யானையைக் கண்டு பயப்பட்டு ஓடி ஒளியும் காரணம் இதுதான்.

அந்த முறை அந்தத் தேர்வு முறை நடைபெற்றது. யானையிடம் மாலையை கொடுத்து விட்டு அவரவர்கள் ஓடி ஒளியலானார்கள். யானை பல இடங் களைச் சுற்றித் திரிந்து நெல் குதிருக்குள் ஒளிந்து கொண்டிருந்த வினோதன் கழுத்தில் மாலை போட்டு விட்டது.

மறுநாளில் இருந்து வினோதன்- வினோத மகாராஜா ஆனார். ஊர் மக்கள் எல்லாம் ஒன்று கூடி பலவகை வாத்தியங்களை இசைத்து அவரை அழைத்துச் சென்று அரசபீடத்தில் அமர்த்தினார்கள்.

முதலில் வினோதன் பயப் பட்டாலும் யானை தனக்கு மாலை அணிவித்ததும் துணிச்சலுடன் நடந்து கொண்டார். தன் மனைவி, மூன்று பெண் குழந்தைகள், இரண்டு ஆண் குழந்தைகள், அப்பா, அம்மா, தங்கை அனைவருடனும் அரண் மனையில் குடியேறினார்.

கூலி வேலை செய்து பிழைத்துக்கொண்டிருந்தவர் தான் அவர் என்று அனைவருக்கும் தெரிந்திருந்தாலும், அரசரான பிறகு அவருக்குரிய மரியாதைகள் கொடுக் கப்பட்டன. நாட்டு மக்களுக்கும் நல்லது செய்து, தனது குடும்பத் தையும் செழிப்பாக வைத்துக் கொண்டார்.

அரசராக இருந்தாலும் பல அறிவுப் புத்தகங்களைப் படித்து தன் அறிவை விருத்தி செய்து கொண்டார். பல யுக்திகளைக் கையாளத் தொடங்கினார். அவர் என்ன செய்கிறார், எங்கே போகிறார் என்பதை மிக இரகசியமாகவே வைத்திருந்தார்.

அடிக்கடி அரசர் ஆற்றைக் கடந்து போவது மட்டும் ஜனங்களுக்குத் தெரியும். அதன் காரணம் தெரியாது.

# வினோத அரசர்!




ஐந்து ஆண்டுகள் ஐந்து நிமிடங்களைப் போல கடந்தன. வினோத மகாராஜாவின் குடும்பம் அக்கரையிலுள்ள காட்டிற்குப் புறப்படத் தயாரானது.

பரிசலில் வினோதனின் குடும்பம் மிகவும் சந்தோசமாகப் பேசிக்கொண்டு வந்தது பரிசல்காரனுக்குப் புதுமையாக இருந்தது.

"அய்யா இவ்வளவு சந்தோசமாக இருக்க என்ன காரணம்?" என்று கேட்டான்.

அதற்கு வினோதன் சொன்னான், "எனக்கு முன்பு ஆட்சி நடத்தியவர்கள் அனைவரும் முட்டாள்கள். அந்த ஐந்து வருட காலம் அரசர் ஆணையை மீறக்கூடாது என்கிற சட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. அக்கரையில் காடாக இருந்த இடத்தை யெல்லாம் அழித்து நகரமாக்கி விட்டேன். விளக்குகள், பாதை, குடிநீர் வசதி, பள்ளி எல்லாம் கட்டியிருக்கிறேன். நான் ஏன் கவலைப்பட வேண்டும்," என்றார். "அதுமட்டுமல்ல இனி எந்த அரசரும் நாடு கடத்தப்படக்கூடாது என்கிற புதிய சட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளேன். பின் விளைவுகளை முன்யோசனையால் தடுத்தாட்கொள்ளத் தெரிந்து கொண்டேன்." என்றார் வினோத மகாராஜா. அவர் புத்திசாலி அரசர்.

## விடுகதைகளும் விடைகளும்

1. ஓடுகிற குதிரைக்கு விலா எல்லாம் ஓட்டை.' அது என்ன?
2. பெட்டி நிறைய போலிசுக்காரர்கள். அவர்கள் யார்?
3. அரைசான் ராணி. அவகிட்ட ஆயிரம் முத்துக்கள். அது என்ன?
4. கீழேயும் மேலேயும் கல்லுக் கோட்டை. நடுவில் இருப்பான் செல்லப்பிள்ளை.

1. இரயில் 2. தீப்பெட்டி
3. வெண்டிக்காய் 4. நாக்கு

தவராசா பிரதீபா
கொம்மாதுறை.

1. பறக்கக் கூடியது, பறவையல்ல. வாலுண்டு, காலில்லை. அது என்ன?
2. நீரிலே பிறந்து நீரிலே அழிவான். அவன் யார்?
3. அண்ணன் தம்பி இரண்டு பேர். அவர்களை சுற்றி பனிரெண்டு பேர். அவர்கள் யார்?
4. முட்டையிடும். அடைகாக்காத பறவை எது?
5. குடிக்க நீர் உண்டு. குளிக்க நீரில்லை. அது என்ன?
6. கட்டையன் கருப்பன், காவலுக்கு வீரன். அவன் யார்?
7. ஊசிமூக்கன் சந்தைக்குப் போறான். இவன் யார்?
8. மரத்தில் காய்க்காத பழம். என்ன பழம்?
9. நான் பார்த்த படம். யாரும் பார்க்க முடியாது. அது என்ன?

1. பட்டம் 2. உப்பு
3. கடிகாரம் 4. குயில்
5. தேங்காய் 6. துப்பாக்கி
7. இறால் 8. ஐஸ்பழம் 9. கனவு

எம்.எஸ். ஜ.்.பர்
அன்னூர் மகாவித்தியாலயம்-வாழைச்சேனை.

1. வட்ட வட்ட தட்டு, வால் இருக்கும் தட்டு. பச்சை நிறத் தட்டு. அது என்ன?
2. இல்லாத இடமில்லை, அது இல்லா விட்டால் எதுவும் இல்லை. அது என்ன?
3. இரவு பகலாக உழைப்பான், ஊதியம் வாங்க மாட்டான். அவன் யார்?
4. கொட்டில் விட்டு ஓடும், சீதன் அல்ல, குட்டையில் கிடைக்கும், மீனும் அல்ல. அது என்ன?

1. தாமரை இலை 2. காற்று
3. சூரியன் 4. தண்ணீர்

செல்வி.ம.கார்த்திகா
கொட்டாஞ்சேனை.

1. யாரும் செய்யாத கதவு. தானே திறக்கும். தானே மூடும். அது என்ன?
2. கடலிலே கலந்து கரையிலே பிரிந்து, தெருவிலே திரியும் பூ என்ன பூ?
3. பூவிலே சிறந்த பூ என்ன பூ?
4. தட்டினால் சீறும். ஆனால் கொத்தாது. அது என்ன?
5. அழகிய பெண்ணுக்கு அதிக நாள் பாதிநாள் வாழ்வு. மீதி நாள் சோர்வு. அது என்ன?
6. ஒருவனை கூப்பிட்டால் ஊரையே அழைப்பான். அவன் யார்?
7. ஒரு நெல் குத்தி எல்லாம் உமியாச்சு. அது என்ன?
8. உள்ளே தங்கம். வெளியே வெள்ளி. அது என்ன?
9. காலுண்டு. விரலில்லை. முதுகுண்டு. தலையில்லை. கையுண்டு, விரலில்லை. அது என்ன?

1. கண் 2. உப்பு 3. அன்பு
4. நெருப்புக்குச்சி 5. நிலா 6. காகம்
7. விளக்கு 8. முட்டை 9. நாற்காலி

கந்தசாமி சுமதி-கொழும்பு-13.

## பப்பா முரசு

## விஞ்ஞான விளக்கங்கள்

1. ஒலி எழுப்பியவண்ணம் இருக்கும் சைக்கிள் மணியை கையால் பிடித்தால் அதன் ஒலி குறையக் காரணம்- மணியை கையால் பிடிக்கும் போது அதிர்வுகள் குறைவடையும். இதனால் ஒலி குறைவடையும்.
2. விறகு அடுப்பை ஊதினால் நன்றாக எரியும். ஆனால் மெழுகுவர்த்தியை ஊதினால் அணையும் காரணம்- விறகு அடுப்பை ஊதும் போது காபனீரொட்சைட்டு அகற்றப்படுவதனால் நன்றாக எரியும். ஆனால் மெழுகுவர்த்தியை ஊதும் போது மெழுகு ஆவி அகற்றப்படுவதனால் அணையும்.
3. சவர்க்காரம் வெட்டுவதற்கு கத்தியை விட மெல்லிய நூலே விரும்பத்தக்கது காரணம்- கத்தியை விட நூலின் பரப்பளவு மிகக் குறைவு. இதனால் அமுக்கம் கூடி விசை கூடும். இதனால் இலகுவாக வெட்டலாம்.
4. குளிர் காலங்களில் போர்வையாக கம்பளி உபயோகிக்கப்படுகின்றது. காரணம்- கம்பளியிலுள்ள மயிர்களுக்கிடையில் காணப்படும் வளி ஒரு அரிதிற் கடத்தி. எனவே குளிர் உடலைத் தாக்காது.
5. வாழைக் குட்டியொன்றை மறுபடியும் நடும் போது அதன் இலைகள் வெட்டப்படக் காரணம்- ஆவியீர்ப்பைத் தடுப்பதற்காகும்.
6. மட்கூசாவில் உள்ள நீர் குளிராக இருக்க காரணம்- மட்கூசாவில் உள்ள சிறிய துவாரங்களினூடாக நீர் கசிவதனால் அந்நீர் வெப்பத்தைப்ப பெற்று ஆவியாகும். இதனால் நீர் குளிர்வடையும்.
7. சைக்கிள் சில்லின் காற்றை திறந்துவிட்டு அதில் கையைப் பிடித்தால் குளிர்கிறது காரணம்-அமுக்கம் கூடிய காற்று வெளிவருவதனால் ஆகும்.

அழகானந்தம் அரவிந்தன்-கொழும்பு-15.



## விளையாடு!


விளையாடப்பா விளையாடு!
வீரம் பெறவே விளையாடு!
விளையாடப்பா விளையாடு!
ஓட்டம் ஓடி விளையாடு!

உயரம் தாவி விளையாடு!
நீட்டம் தாண்டி விளையாடு!
நீச்சல் அடித்து விளையாடு!
உற்சாகத்தோடு விளையாடு!

பந்து வீசி விளையாடு!
பந்து உருட்டி விளையாடு!
உடலில் வியர்க்க
விளையாடு!
சுறுசுறுப்புடன் விளையாடு!

என்.எம். இம்ரான்
அக்குறனை மத்திய கல்லூரி.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 08.01.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 22
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு-05.

## வர்ணம் தீட்டும் போட்டி இல. 19

பரிசுக்குரியவர்:
எஸ்.எப்.ரிஸ்மியா சமூன்
அல் அக்ஸா மகாவித்தியாலயம்
கல்பிட்டி.

பாராட்டுக்குரியவர்கள்:
செல்வன்.ப.ருசான்-கல்குடா.

செல்வன்.வேல்முருகு ராமு
புனித மிக்கேல் கல்லூரி-மட்டக்களப்பு.


செல்வன். டீ.கமல்ராஜ்-திருகோணமலை.

எஸ்.எப்.எம். ரம்ஸீ
சாஹிரா கல்லூரி-கொழும்பு-10.

ச.அருண் பிரதாப்- புனித ஜோசப் தமிழ் மகா வித்தியாலயம், மஸ்கெலியா.

இ.சிவகுமார்
இந்துக்கல்லூரி- மட்டக்களப்பு.

## அறிவோம் மனதில் பதிவோம்




இத்தாலியில் 14ம் நூற்றாண்டிலேயே உதைபந்து விளையாட்டு விளையாடப் பட்டது. இதனை இத்தாலிய மொழியில் ஜியோகோ டெல்கேல் சியோ என்று அழைத்தனர்.





இந்தியாவில் மழையை அளக்கும் கருவி கி.மு. 400ம் ஆண்டிலேயே இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. ஐரோப்பாவில் 15ம் நூற்றாண்டில் கூட மழையை அளக்கும் கருவி இல்லை. மோசமான வானிலை, மழை போன்றவை திகதிவாரியாக டயரிக் குறிப்புக்கள் போல எழுதி வைக்கப்பட்டன.

இங்கிலாந்தில் உள்ள எடின்பேர்க் கோட்டை யில் 1449ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட மிகப் பெரிய பீரங்கி உள்ளது. இதன் எடை 6.970 கிலோ. இதில் 249 கிலோ எடையுள்ள குண்டைப் போட்டு வெடிக்கச் செய்யலாம்.



போர் துப்பாக்கிகள் தயாரிக்கப்பட்ட புதிதில் தீக்குச்சியை எரிய வைத்து அதைத் துப்பாக்கிக்குள் வைத்துத்தான் வெடியை வெடிக்கச் செய்ய வேண்டும். பின்னர்தான் வெடிமருந்தை எரியச் செய்யும் 'மட்ச் லொக்' என்ற சுவிட்ச் கண்டுபிடிக்கப்பட்டது. அதுவரை மழைக்காலங்களிலும், காற்று பலமாக வீசும் போதும் துப்பாக்கியை உபயோகித்துப் போரிடுவோர் மிகவும் கஷ்டப்பட்டனர்.



ஐரோப்பியர்கள் கடல் வழிப்பயணம் செல்ல ஆரம்பித்ததும் புதிய புதிய கடல்வழிகளைக் கண்டுபிடித்தனர். கிழக்கு நாடுகளில் இருந்து ஏராளமான வாசனைத் திரவியங்களை ஐரோப்பாவிற்குக் கொண்டு வந்தனர். அதில் முக்கியமானது மிளகு.



# 'ஃபீல்டிங்' முன்னேற வேண்டும்!



சமீபத்திய வெற்றிக்குப் பின்னர் இந்திய கிரிக்கெட் அணி கப்டன் அசாருதீன் மகிழ்ச்சியாக இருக்கிறார். அவர் அளித்துள்ள பேட்டியில் இந்திய அணியின் 'ஃபீல்டிங்' திறமை போதாது என்று கூறியுள்ளார்.

இந்திய அணியில் "பட்டிங்" மற்றும் பந்துவீச்சு சிறப்பாக இருக்கிறது. பந்து தடுப்பு திறன் (ஃபீல்டிங்) மட்டுமே போதுமானதாக இல்லை.

இந்திய அணி தோற்றாலும், ஜெயித்தாலும் விமர்சனம் செய்ய சிலர் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களது விமர்சனங்களை பெரிதாக எடுக்கக்கூடாது. ஒரு கட்டத்தில் அத்தகைய கடும் விமர்சனங்கள் எனக்கு உதறலைத் தந்தது. இப்போது பழகிவிட்டது.

விரைவில் இலங்கை அணியுடன் மோத வேண்டி இருக்கும். அந்த ஆட்டத்தைப் பொறுத்து அணியில் மாற்றங்கள் செய்யப்படும்.

தென் ஆபிரிக்காவுக்கு மேற்கொண்ட சுற்றுப்பயணம் மிக மோசமானது என்றும் அசாருதீன் கூறியிருக்கிறார்.




## நடுவராக கவாஸ்கர்

இங்கிலாந்து-மேற்கு இந்தியத் தீவு கிரிக்கெட் அணிகள் மோதும் போட்டிகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் மேற்கு இந்தியத் தீவில் நடக்கின்றன.

இந்தப் போட்டிகளுக்கு நடுவராக பணியாற்ற இந்திய கிரிக்கெட் அணி முன்னாள் கப்டன் கவாஸ்கர் நியமிக்கப் பட்டுள்ளார்.

பம்பாயில் வியாபாரத்தில் பிஸியாக இருக்கும் கவாஸ்கர் ஒரு டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளுக்கு மட்டுமே நடுவராக இருக்க விருப்பம் தெரிவித்துள்ளார்.

## ஸ்போர்ட்ஸ்



## ஒலிம்பிக் நகரங்கள்

1896ம் ஆண்டு தொடங்கிய ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற நகரங்கள் பற்றிய விபரங்கள் வருமாறு:

| ஆண்டு | நகரம் |
|---|---|
| 1896 | ஏதென்ஸ் |
| 1900 | பாரீஸ் |
| 1904 | செயின்லூயிஸ் |
| 1906 | ஏதென்ஸ் |
| 1908 | லண்டன் |
| 1912 | ஸ்ரொக்ஹோம் |
| 1920 | அன்ட்வெப் |
| 1924 | பாரீஸ் |
| 1928 | ஆம்ஸ்டர்டாம் |
| 1932 | லொஸ் ஏஞ்சல்ஸ் |
| 1936 | பேர்லின் |
| 1948 | லண்டன் |
| 1952 | ஹெல்சிங்கி |
| 1956 | மெல்போர்ண் |
| 1960 | ரோம் |
| 1964 | டோக்கியோ |
| 1968 | மெக்சிக்கோ சிற்றி |
| 1972 | மியூனிச் |
| 1976 | மொன்றியல் |
| 1980 | மொஸ்கோ |
| 1984 | லொஸ் ஏஞ்சல்ஸ் |
| 1988 | சியோல் |
| 1992 | பார்சிலோனா |
| 1996 | அட்லான்டா |
| 2000 | சிட்னி |




1916ம் அண்டு ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கு பேர்லினுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. ஆனால் முதல் உலகப் போர் காரணமாக அந்த ஒலிம்பிக் ரத்துச் செய்யப்பட்டது. 1940ல் டோக்கியோவுக்கு முதலில் கொடுக்கப்பட்டுப் பின்னர் ரத்துச் செய்யப்பட்டு ஹெல்சிங்கிக்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. ஆனால் அதுவும் ரத்துச் செய்யப்பட்டது. இரண்டாவது உலகப் போரே இவற்றிற்குக் கார்ணம். 1944ல் லண்டனுக்கு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டு, சில காரணங்களால் நிறுத்தப்பட்டது.

# தேன் கிண்ணம்

### நாங்கள்

நாங்கள்-
சமூகமணற்
பரப்பில்
கிளைபரப்பி
நிழல்தர
விதைக்கப்பட்ட
பொன்
வித்துக்கள்!

••

எதிர்கால
அத்தியாயம்
வினாவாக
எழுந்து
தலைசுற்ற
விடைதேடும்
பரீட்சார்த்திகள்!

••

இனவாத
வெள்ளம்
அணை
கடந்த போது
அரித்துச்
செல்லப்படாத
மூடுபயிர்கள்!

••

வெண்மணற்கரை
அம்மன் சந்நிதி
தெருக்கோடி-
இவற்றின்
வேடிக்கையான
வாடிக்கையாளர்கள்!

••

நாங்கள்
ஓர்
சூன்ய
மணற்பரப்பில்
கவிதைகளோடு
உறவாடும்
நிழலுக்காக
அழும் விழிகள்...!

-ஆரையம்பதி மனோ-

### விதவை!

திருமணம்
எழுதிய
தொடர்கதைக்கு
காலன் வைத்த
முற்றுப்புள்ளி.

•

வசந்தங்களின்
வயிற்றில்
வளருமுன்னே
கலைக்கப்பட்ட
ஊமைக்குயில்.

•

சுகங்களை பறித்து
சமூகம் போர்த்திய
பொன்னாடை,
அவள் வெள்ளாடை.

•

எண்ணெய் இருந்தும்
எரிய முடியாத
அகல் விளக்கு.

•

இந்த சமூக
அவஸ்தைகளில்
நசிபட்டு சாகும் இவள்,
அதன் விலங்குகளை
இன்னும் பூஜிப்பது
ஆச்சர்யமானது.

•

மரபுத் தளைகளை
உடைத்தெறிந்து
இந்த மண்ணில்
அவள் கூவித்திரியட்டும்.

•

அவளின்
உணர்வின் உதடுகள்
கட்டிப் போட
இங்கு யாருக்கும்
உரிமையில்லை.

•

வாழ்க்கை என்பது
புற்றீசல் அல்ல
பிறந்தவுடன்
இறப்பதற்கு

•

அது ஆலமரம்

அந்த மரத்தின்
ஒரு விழுதாய்
அவளும் வாழட்டும்.

•

சமூகமே
உன்-
மாச்சரியங்களை
உடைத்தெறி
வெள்ளைப் புறாக்களும்
திருமணவானில்
பறக்கட்டும்.

ஒட்டமாவடி-அறபாத்.

### அழியும் ஆண்டுக்கும் ஆகும் ஆண்டுக்கும்



விடியும் பொழுதுக்காய்
காத்திருக்கின்றேன்;
இந்த-
அழுகி நாறுகிற
குப்பை நாட்களோடு
சீவித்துச் சீவித்து
அலுத்தே விட்டது.
எனக்கு-
புதிய நாளொன்றின்
அழகிய சினேகம் வேண்டும்.

•

துப்பாக்கி ரவைகளின்
நச்சு வாசனைகள்
தேவைதானா?
விடியும் பொழுதே...!
சமாதானத்தின்
அன்புக்கரங்களால்
என்னை-
அணைத்துத் தழுவுகிற
புதிய உற்சாகத்தில்
94ஐ புலரச் செய்.

•

கொலைகளை
மிதக்கின்ற பிணங்களை
கண்டு கண்டு
இன்னும் சில தினங்களில்
கண்கள் குருடாகிவிடும்;
அல்லது-
கழன்று ஒழுகிவிடும்
போலிருக்கிறது.

•

பூவைக் காட்டிலும்
மென்மையாக
மலரப் போகும் நாளே!
இனியாவது-
புயலின் அச்சத்தைப்
போக்கிவிட்டு
கண்களுக்குத் தென்றலை
காட்டித்தா!

•

குருதியின் நாற்றத்தை....
கந்தகத்தின் மணத்தை...
அழித்துப் போக்கி
மானுட நேயத்தின்
அழகிய மணத்தை
ஒவ்வொரு நாளும்
உற்பத்தி செய்து தா!

•

எனது தெருக்களில்
புறாக் கூட்டங்களின்
இனிய விழாக்களுக்காக
நான்-
ஏங்கிக் கொண்டிருக்கும் போது
கழுகுகளின் அடாவடியை
காண்பிக்கும் பொழுதே...!
நீ-
காலுடைந்து, கையுடைந்து
இல்லையேல்
செத்துத் தொலைந்து போ!

•

இரத்தம் பூசிய
சிவப்பு நாட்கள் எனக்கு
வேண்டவே வேண்டாம்!

தெண்ணூற்றி நான்கே...
சமாதானத்தின்
வெள்ளைக் கொடிகளை
கரங்களில் ஏந்தி
வருவதென்றால் மட்டும்
நீ வா!
வாசல் முழுக்க
வண்ணக் கோலம் போட்டு
வரவேற்கின்றேன்.

-காத்தான்குடி அனு-

### என்ன காரணம்?

ஓ....!
எங்கள்
பூமி
அன்று
அதிர்வுற்றதே
ஏன்...?
அராஜகப்
பேய்களால்
மண்ணுக்குள்
அநியாயமாய்
ஐக்கியமாக்கப்
பட்டோர்
எல்லாம்
எங்கள்
அவலநிலை
கண்டு
உள்ளே
ஆர்ப்பரித்திருப்பார்களோ?


•

நில
நடுக்கத்தால்
உங்களுக்கு
உடல்
நடுக்கம்
எடுக்கும்
போதாவது
உயிரின்
பெறுமதியை
உணர்ந்து
கொள்ளுங்கள்
என
ஆண்டவன்
நினைத்துவிட்ட
எண்ணத்தின்
வெளிப்பாடோ?
எதுவாக
இருக்கும்?

செல்வி. சுப்பிரமணியம் வாணீஸ்வரி
அப்பர் கலஹா.



### "புதிதாய் பிறக்கும் வருஷம்"



வருஷ வாகனத்தின்
"நம்பர்-பிளேட்"
மாற்றும் நிகழ்வு

கால மகளின்
கருத்தரிப்பிலான
புதிய பிரசவம்

பழைய நாட்காட்டிகளின்
பதவியிறங்கும் வைபவம்
புதியவற்றின்
சுவரேறும் அனுபவம்.

இலக்கங்களை மாத்திரம்
புதிதாய் எழுதும்
மனிதன்-மீண்டும்
பழையதான வாழ்க்கையோடு
கைகோர்ப்பதுதான்
பரிதாபம்.

வயது புதிது-உயிர்களுக்கு
வகுப்பு புதிது-மாணவர்க்கு
வருஷம் புதிது- உலகத்திற்கும் முழுதாய்...
ஆனாலும்,
எதுவும் புதியதாய் நமக்கு?
யுத்தம் பழையது...நமக்கு
இறப்பும் பழையது...நமக்கு
சமாதானம் மாத்திரம் புதிதாய்
ஏன் இன்னும் பிறக்கவில்லை?

-ஷர்மிளா இஸ்மாயில்-
பஹிரவகந்த-கண்டி.

### சின்னக்கவிதைகள்

முக்கால்வாசி
பிரபஞ்சத்தை
தன் முக்காட்டால்
போர்த்துக்கொண்டிருக்கிறாள்
பர்தாக்கன்னி
'தண்ணீர்'

••

வெளிச்சம் தந்து

தானும்
வெந்து செத்த தியாகி
'மெழுகுவர்த்தி'

••

இருளில்
கண்சிமிட்டி
கண்ணடித்த
காரிகை
வெளிச்சத்தில்
காணாமல் போனாள்
'நட்சத்திரம்'

••



-கிண்ணியா சபறுள்ளா-

# இந்த வாரம் உங்கள் பலன்

(02.01.94 முதல் 08.01.94 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

## மீனம்: சுப நேரம்

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரிய சித்தி, புகழ் மேன்மை. | பி.ப 1 மணி |
| திங்கள்- | உறவினர் உதவி, பணச்சேர்க்கை. | காலை 9 மணி |
| செவ்வாய்- | அந்நியர் நட்பு, பணத்தட்டுப்பாடு. | பகல் 12 மணி |
| புதன்- | உயர்ந்தோர் சகாயம், நன்னிலை. | காலை 10 மணி |
| வியாழன்- | வீண் மனஸ்தாபம், துன்பமிகுதி. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | கடன்தொல்லை, காரிய நஷ்டம். | காலை 10 மணி |
| சனி- | அந்நியர் சகாயம், பணவரவு. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 4

## மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வீண் துயர் நீங்கும், மன மகிழ்சி. | காலை 9 மணி |
| திங்கள்- | பணவரவு, காரிய மேன்மை. | பகல் 1 மணி |
| செவ்வாய்- | தூய வாழ்க்கை, இனசன உதவி. | காலை 7 மணி |
| புதன்- | பெரியோர் உதவி, கௌரவம். | காலை 10 மணி |
| வியாழன்- | எடுத்த காரியம் வெற்றி, முன்னேற்றம். | காலை 9 மணி |
| வெள்ளி- | பணப்புழக்கம், தேகசுக நன்மை. | பகல் 12 மணி |
| சனி- | அந்நியர் உதவி, ஆடம்பர வாழ்க்கை. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

## இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வெளியிடப் பயணம், மனமகிழ்வு. | பகல் 12 மணி |
| திங்கள்- | கௌரவ மேன்மை, பணவரவு. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | வெளியிட உதவி, சஞ்சலம் நீங்கும். | காலை 8 மணி |
| புதன்- | மறைமுக எதிர்ப்பு, மனக்கிலேசம். | காலை 7 மணி |
| வியாழன்- | அந்நியர் சகவாசம், வீண் செலவு. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | தேக சுகம், பெரியோர் உதவி. | காலை 7 மணி |
| சனி- | இனசன உதவி, மனக்கவலை நீங்கும். | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

## மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பயமிகுதி, பொருட்செலவு. | காலை 10 மணி |
| திங்கள்- | வீண் பிரயாசம், கடன்படல். | பகல் 11 மணி |
| செவ்வாய்- | காரியானுகூலம், தொழில் சித்தி. | காலை 7 மணி |
| புதன்- | வீண் சகவாசம், ஆடம்பர வாழ்வு. | பகல் 12 மணி |
| வியாழன்- | அந்நியர் நட்பு, எதிர்ப்புகள் நீங்கும். | பி.ப 1 மணி |
| வெள்ளி- | தனவிருத்தி, உயர்ந்தோர் நட்பு. | காலை 10 மணி |
| சனி- | தொழில் சிறப்பு, கடன் பயம். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

## கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செலவு மிகுதி, பொருட் செலவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, உயர்ச்சி நிலை. | காலை 10 மணி |
| செவ்வாய்- | நடைக்கஷ்டம், மறைமுக எதிர்ப்பு. | பகல் 11 மணி |
| புதன்- | வீண் சந்தேகம், கருமங்களில் தடைகள். | காலை 9 மணி |
| வியாழன்- | பொருள் நஷ்டம், பணத்தட்டுப்பாடு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | கௌரவம், கீர்த்தி, பொருள்வரவு. | பி.ப 3 மணி |
| சனி- | செலவு மிகுதி, பணவரவு. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 6

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| தனு | - சூரியன், புதன், வெள்ளி, செவ்வாய் |
| மகரம் | - சனி |
| இடபம் | - கேது |
| துலாம் | - வியாழன் |
| விருட்சிகம் | - இராகு |

சந்திரன்-சிங்கம், கன்னி, துலாம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்
04.01.94இல் மகரப் புதன்

## கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தூர இடப் பயணம், கௌரவம். | காலை 7 மணி |
| திங்கள- | பணவரவு, காரியக் கேடு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | எதிர்பார்த்த கருமம் வெற்றி. மகிழ்ச்சி. | காலை 8 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, கீர்த்தி, மேன்மை. | பி.ப 2 மணி |
| வியாழன்- | உறவினர் இழப்பு, கவலை. | பி.ப 3 மணி |
| வெள்ளி- | செலவு மிகுதி, கடன் பயம். | காலை 8 மணி |
| சனி- | தூர இடப் பயணம், வெற்றி, கவலை நீங்கும். | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

## மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தீயோர் நட்பு, வீண் செலவு. | காலை 7 மணி |
| திங்கள்- | பணக்கஷ்டம், கவலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | மறைமுக எதிர்ப்பு, துயர் அதிகம். | காலை 10 மணி |
| புதன்- | வெளியிட வாசம், எடுத்த கருமம் வெற்றி. | பி.ப 3 மணி |
| வியாழன்- | உறவினர் உதவி, பணவரவு. | காலை 10 மணி |
| வெள்ளி- | துன்பம் நீங்கும், தேகசுக நன்மை. | பகல் 12 மணி |
| சனி- | காணி பூமி மாற்றம், பொருட் செலவு. | காலை 11 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம் -5

## சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், உயர்சி. | காலை 9 மணி |
| திங்கள்- | தொழில் சித்தி, காரியானுகூலம். | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | வீண் சந்தேகம், குடும்பப் பிரச்சனை. | பகல் 12 மணி |
| புதன்- | மறைமுக எதிர்ப்பு, கவலையதிகம். | காலை 10 மணி |
| வியாழன்- | உறவினர் உதவி, பணவரவு. | காலை 9 மணி |
| வெள்ளி- | நடைக்கஷ்டம், தன லாபம். | பி.ப 1 மணி |
| சனி- | பெரியோர் உதவி, அரச விரோதம். | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 1

## தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கௌரவம், பணக்கஷ்டம். | காலை 9 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், பிள்ளைகளால் மகிழ்சி. | காலை 11 மணி |
| செவ்வாய்- | பணவரவு, காரிய சித்தி. | பகல் 12 மணி |
| புதன்- | எடுத்த காரியம் வெற்றி, பகை நீங்கும். | காலை 10 மணி |
| வியாழன்- | உறவினர் உதவி, புதிய முயற்சி. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | தூர இடப்பயணம், கௌரவம். | காலை 9 மணி |
| சனி- | செலவு அதிகம், தனவிருத்தி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -4

## விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | அந்நியர் சகவாசம், திடீர்ப் பயணம். | காலை 7 மணி |
| திங்கள்- | உறவினர் உதவி, செலவு அதிகம். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | காரிய சித்தி, கௌரவ மேன்மை. | காலை 10 மணி |
| புதன்- | அந்நியர் எதிர்ப்பு, பிரயாணக் கஷ்டம். | பகல் 11 மணி |
| வியாழன்- | உறவினரால் சஞ்சலம், கௌரவக் குறைவு. | காலை 8 மணி |
| வெள்ளி- | குடும்பக் கஷ்டம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| சனி- | எதிர்பாராத செலவு, வீண்குறைகேட்டல். | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

## துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்சி, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, கௌரவம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | வீண் கவலை, செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| புதன்- | தனவிருத்தி, குடும்ப நன்மை. | பி.ப 2 மணி |
| வியாழன்- | மறைமுக எதிர்ப்பு, தேகசுகம் பாதிப்பு. | காலை 9 மணி |
| வெள்ளி- | அந்நியர் உதவி, ஆடம்பரச் செலவு. | பகல் 12 மணி |
| சனி- | எடுத்த கருமம் வெற்றி, வீண் செலவு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 7

## கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரிய சித்தி, உயர்சி நிலை. | பி.ப 1 மணி |
| திங்கள்- | பணவரவு, எடுத்த கருமம் வெற்றி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தனலாபம், உயர்ந்த நிலை. | காலை 10 மணி |
| புதன்- | வீண் உபாதை, தேகசுக பாதிப்பு. | காலை 9 மணி |
| வியாழன்- | பெரியோர் உதவி, பணச் செலவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | தனவிருத்தி, தொழில் சிறப்பு. | காலை 10 மணி |
| சனி- | கௌரவ மேன்மை, காரிய சித்தி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 4

# மருத்துவ ✚ விந்தைகள்

## விருந்துப் பிரியர்களுக்கு விருப்பமான யோசனைகள்

### ஒரு பிடி பிடித்தாலும் எடை குறைய வழி

பண்டிகைக் காலம் இது. புதுவருடக் கொண்டாட்டங்களில் எங்கு சென்றாலும் விருந்து தான். திரும்பிய பக்கமெல்லாம் தித்திப்பு, போகுமிட மெல்லாம் பலவகைப் பட்சணங்கள்.

பலவகையான பண்டங்களைப் பார்த்து பூரிப்போருமுண்டு- வயிற்றெரிச்சல் தாங்காமல் மனம் புழுங்குவோருமுண்டு. நோய் நொடியற்றவர்கள் இத்தின்பண்டங்களை ஒரு பிடி பிடிக்கும் போது, நோயென்றும், கட்டுப்பாடென்றும் ஒதுங்கி நின்று மனங்குழம்புவோருமுண்டு.

உடல் நிலை காரணமாக சில வகை உணவுகளை ஒதுக்க வேண்டிய நிலையிலுள்ளவர்கள்கூட பயமின்றி பண்டிகைக்கால விருந்துகளில் கலந்து ஒரு பிடிபிடிக்கலாம். அதுமட்டுமல்லாமல் தங்கள் எடையில் 10 இறாத்தலையும் குறைத்துவிடலாம் என்று உணவியல் துறை நிபுணர் டாக்டர் ஃபிரான்ஸ் வெல்பூல் கூறுகிறார்.

"உங்களுக்கு எத்தகைய உணவினை உண்ண வேண்டும் என்று தோன்றுகிறதோ அவற்றையெல்லாம் நீங்கள் தாராளமாக சாப்பிடலாம். மகிழ்ச்சியாக இருக்க வேண்டிய காலங்களில் உண்ணும் உணவின் கலோரிகளைக் கணக்கிட்டு மனதை வருத்த வேண்டாம். ஆனால், நிதானமாக உண்ணுங்கள். மிக மெதுவாக உண்ண வேண்டும்," என்கிறார் அவர்.

உண்ணும் முறைகள் சிலவற்றை டாக்டர் வெல்பூல் தந்துள்ளார். இம்முறைகளைப் பின்பற்றினால் சிலவாரங்களில் உங்கள் எடையில் 10 இறாத்தலையும் குறைத்துக்கொள்ளலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

- காய்கறிகள், கோழி, வத்தாளைக் கிழங்கு மற்றும் கோஸ் ஆகியவை தாராளமாக உண்ணலாம். இவற்றில் கலோரியும் குறைவு. இவற்றைக் குறைவாக உண்டாலும் நிறைவு உணவு உண்டது போன்ற திருப்தி ஏற்படும்.
- சில கொண்டாட்டங்களின் போது பலவகையான உணவுகள் பரிமாறப் படும். பிரதானமான உணவு சற்றுக் கொழுப்புத்தன்மை கூடியதாகவே இருக்கும். ஆகவே அதனை முதலில் தேர்ந்தெடுத்து ஒரு பிடி பிடித்து விடலாகாது. முதலில் காய்கறிகளையும் பழவகைகளையும் உண்டு வயிற்றில் ஒரு பகுதியை நிரப்பி விடுங்கள். ஆடை நீக்கிய தயிரையும் முதலில் உண்ணலாம். இதனால் முக்கியமான விருந்து உணவினைக் குறைத்தே உண்ண வாய்ப்பு ஏற்படும்.
- உணவு உண்டபின் உணவு பரப்பி வைக்கப்பட்ட மேசையைச் சுற்றி சுற்றி வராதீர்கள். எங்காவது உலாவப் போய் வாருங்கள். உணவுக்குப் பின்னர் குட்டித் தூக்கம் போட முயலாமல் கொஞ்ச தூரம் நடக்கலாம். அல்லது குடும்பத்துக்கான சில பணிகளில் ஈடுபடலாம். மேலதிகக் கலோரிகளைப் பொசுக்குவதற்கு இது உதவும்.
- உணவினைச் சமைக்கும் போது பயன்படுத்தப்படும் எண்ணை வகைகள் கொழுப்புக் குறைந்தவையாக இருப்பது முக்கியம். வெண்ணெய் அதிகம் பாவிப்பதைத் தவிர்ப்பது நல்லது. கொழுப்பு நீக்கிய பாலையே பருகிப் பழகுங்கள். ஆடை நீக்கிய தயிரை ஒவ்வொரு உணவிலும் சேர்த்துக்கொள்வது நல்லது.

### விடுமுறை காலத்திற்கு உகந்த யோசனைகள்

- உணவின் பின்னர் ஐஸ்கிறீம், புடிங் போன்றவற்றை ஒதுக்கிவிட்டு காய்கறி சலாதுகளை வேண்டிய அளவு உண்ணலாம்.
- எத்தகைய உணவையும் மிகக் குறைவாகவே உண்டு பழகுங்கள். பரிமாறப்படும் அத்தனை வகைகளையும் உண்டு தீர்க்க வேண்டும் என்று அவாவுறாமல் உங்களுக்கு விருப்பமான ஒவ்வொரு பதார்த்தத்திலும் மிகச் சிறிய அளவினையே எடுத்து உண்ணுங்கள்.
- உணவருந்து முன்னர் ஒரு கிளாஸ். தண்ணீரைப் பருகுங்கள்.
- உணவருந்தும் போது இறுக்கமான உடைகளையே அணியுங்கள். குறிப்பாக வயிற்றை ஓரளவு இறுக்கிப்பிடிக்கும் உடை மேலதிகமாக உள்ளே உணவு செல்ல விடாது. தளர்ந்த உடைகளை அணிந்தால் மேலும் மேலும் உணவு அதிகமாக உண்ண வேண்டும் என்ற மனநிலையினை ஏற்படுத்தும்.
- 'சோஸ்' எனப்படும் குழம்பு மற்றும் கறி மசாலாக் கூட்டுவகைகளையும் ஒதுக்கிவிடுவது நல்லது.
- உணவு உண்ணும் போது, குடும்பத்தவர்கள் அல்லது வேறு பலருடன் சேர்ந்து ஒன்றாக இருந்து உண்ண வேண்டும். பலதரப்பட்ட சமாச்சாரங்களையோ குடும்பத்தில் உள்ள மகிழ்ச்சிகரமான சம்பவங்களையோ பேசிக்கொண்டே உண்ணலாம். இதனால் உட்கொள்ளும் உணவின் அளவு குறையும். ஆனால் பூரணமான உணவு உட்கொண்ட திருப்தி ஏற்படும்.
- ஒவ்வொரு பதார்த்தத்தையும் மிகவும் மெதுவாகச் சுவைத்து உண்ணுங்கள். வேகமாக உண்ணாமல் மெதுவாக உண்பதனால் உணவுடன் போதுமான காற்று கலந்து உள்ளே சென்று குறிப்பிட்ட அளவு இடத்தையும் பிடித்துக்கொள்ளும். இதனாலும் அதிக உணவு உண்டதான ஒரு மனோ நிலை ஏற்படும்.

## தலைவலி தீர வழி டயனா சொல்கிறார்


பிரிட்டிஷ் இளவரசி டயனாவுக்கு இப்போது ஒற்றைத் தலைவலி அடிக்கடி வருகிறது.

ஒற்றைத் தலைவலி தீர டயனாவே சிகிச்சை செய்து கொள்கிறார்.

இந்தச் சிகிச்சைக்கு கைச்சிகிச்சை என்று பெயர் வைத்துள்ளார்.

தலைவலி, உடல் வலி என்பன வந்தால் நமது கைகளால் மசாஜ் செய்தால் வலி பறந்துவிடும் என்கிறார் டயானா.


இதற்கு முன்னர் ஆஸ்டியோபதி என்ற உடல் சிகிச்சை முறையை டயானா



மேற்கொண்டு வந்தார்.

நல்ல அமைதியான சூழ்நிலையில் இருப்பது, உடலுக்குத் தேவையான சத்துணவை வழங்குவது போன்றவை ஆஸ்டியோபதி சிகிச்சையில் மேற்கொள்ள வேண்டும். அதனை விட கைச்சிகிச்சையில் நல்ல பலன் இருக்கிறது என்கிறார் டயானா.

## எச்சில் படாமல் குடிக்கலாமா?



நீர் அல்லது சூடான பானங்கள் அருந்தும் போது பாத்திரத்தில் எச்சில் படாமல் வாயில் ஊற்றுவது சிலரது பழக்கம்.

எச்சில் படாமல் இருப்பது சுகாதார முறை என்று கருதுகிறார்கள். ஆனால் பாத்திரத்தில் உதடு பொருத்திக் குடிப்பதே உடலுக்கு நல்லது.

உதட்டால் உறிஞ்சிக் குடிக்கும் போது என்ன நடக்கிறது? நமது தொண்டையில் உள்ள தசைநார்கள் எவ்வளவு சூட்டை ஏற்கலாமோ அந்த அளவுக்கு அவற்றைக் குளிர்வித்து அல்லது சூடாக்கித் தரும் பெரும் பொறுப்பை நாக்கும் உள்வாயும் செய்கின்றன. தொண்டையின் மிருதுவான தசைநார்கள் பழுதடைவதால் பல நோய்கள் விரைவில் தொற்றிக்கொள்ளும்.

இனிமேல் உதடு படாமல் நீரோ அல்லது சூடான பானங்களோ அருந்தாதீர்கள்.

## குழந்தையின் மூக்கில் இருந்து இரத்தம் வந்தால் தடுக்க வழி!



குழந்தையின் மூக்கிலுள்ள இரத்தக் குழாய்கள் மிக நுண்ணியதாக இருக்கும். அதனால் எளிதில் இரத்தம் வர வாய்ப்புண்டு.

அப்படி உங்கள் குழந்தையின் மூக்கில் இருந்து இரத்தம் வடிந்தால் நீங்கள் செய்ய வேண்டியவை பற்றி அறிந்து கொள்ளுங்கள். இதோ சில வழிகள்:

குழந்தையை ஒரு அகன்ற பாத்திரத்தின் முன் தலையை சிறிது கவிழ்த்து, மூக்கின் இரு புறமும் ஒரே சமயத்தில் 10 நிமிடத்திற்கு மெதுவாக அழுத்தவும் அப்படிச் செய்யும் போது வெளிவரும் இரத்தத்தை குழந்தை உள்நோக்கி உறிஞ்சாமல் - விழுங்காமல் பார்த்துக் கொள்ளவும்.

பலனளிக்காவிட்டால் ஒரு துணியை குளிர்ந்த நீரில் நனைத்து குழந்தையின் மூக்கின் மேல் 2 நிமிடம் வைத்திருந்து, மீண்டும் மூக்கைச் சிந்துவது போல லேசாக அழுத்தவும்.

இரத்தம் வருவது நின்றுவிட்டால் குழந்தை நான்கு மணி நேரம் மூக்கைச் சிந்தாமல் பார்த்துக் கொள்ளவும்.

இதையும் மீறி இரத்தம் வந்தால் உடனடியாக வைத்தியரை நாடுங்கள்.

## குறட்டையும் இதய நோயும்

குறட்டை விடுவதற்கும் இதய நோய்க்கும் தொடர்பு இருப்பதாக சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இதய நோயாளர்களில் 50 சதவீதத்தினர் குறட்டை விடும் பழக்கமுள்ளவர்கள் என்றும் தெரிகிறது.

ஸ்லீப் அப்னியா (Sleep Apnea) எனப்படும் உறக்கத்தில் சற்று நேரம் சுவாசிக்க மறந்துவிடும் தன்மை குறட்டை விடுபவர்களிடம் காணப்படுகிறதாம். இதனால் மாரடைப்பு அபாயம் அவர்களுக்கு அதிகமாகும் என்று கண்டுபிடிப்புக்கள் கூறுகின்றன.

## திடீர் மகிழ்ச்சி ஏன்? கண்டுபிடிக்கப்பட்டது காரணம்!

எவ்வித காரணமுமின்றி திடீர் மகிழ்ச்சி நமக்குத் தோன்றுவதுண்டு. என்றுமில்லாத ஆனந்தம் திடீரெனத் தோன்றி சுறுசுறுப்பாகவும் வேகமாகவும் காரியங்களை ஆற்றுவதற்குத் தூண்டுகோலாக இருக்கும். ஆனால் சில மணி நேரத்துக்கு அல்லது சில நிமிடங்களுக்கு மட்டும் காணப்படும் அத்தகைய உணர்வு திடீரென மறைந்துவிடும்.



நமது உடலில் திடீரெனச் சுரக்கும் ஒருவகைப் போதைதரும் சுரபியின் செயற்பாடே இதற்குக் காரணமாகும் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். 'மர்ஜுவானா' என்ற போதைவஸ்துவில் காணப்படும் செயலைத் தூண்டும் சுரப்பு ஒன்று எப்போதாவது எமது உடலில் சுரந்து நரம்புகளினூடோ உடலெங்கணும் பரவும் அதே காலகட்டத்தில்தான் நமது உடலில் ஒருவகை உணர்வு தூண்டப்பட்டு மகிழ்ச்சிப் பெருக்கு ஏற்படுகிறது. இத்தகைய உணர்வினைத் தூண்டும் சுரப்பை இனம் கண்டுள்ளதாகவும், இதனை மேலும் ஆராய்ந்து வருவதாகவும் சென்.லூசியிலுள்ள வாஷிங்டன் பல்கலைக்கழக ஆய்வாளர் டாக்டர் அல்லின் ஹெளலெற் தெரிவித்துள்ளார்.

–x–

## நகர மக்கள் கவனத்திற்கு!

மூச்சுத் திணறல், தீராத இருமல் நகர மக்களிடையே நிலவும் நோய்கள். தொழிற்சாலைகள், கார்கள், மனிதர்கள் புகைக்கும் சிகரெட் முதலியவைகளில் இருந்து வெளிவரும் புகையில் உள்ள நைதரசன் டை ஒட்சைட் தான் இதற்கும் காரணமாகும்.

விற்றமின் 'சி' மற்றும் 'இ'யை எமது உணவில் சேர்த்துக்கொண்டால் நைதரசன் டை ஒட்சைட்டை எதிர்க்கும் எதிர்ப்புச் சக்தி அதிகமாகும். ●



## புதுமைத் தொடர்





டி.ஐ.ஜி டென்சிலின் முன் பரந்த பெரிய மேசை இருந்தது. மேசையின் மீது குலாம்ஷா கொண்டுவந்த விபரங்கள் அடங்கிய ஃபைல் இருந்தது.

பேப்பர் வெயிட்டை உருட்டியபடியே குலாம்ஷாவை பார்த்தார் டி.ஐ.ஜி.டென்சில்.

"ரஞ்சித் என்ன சொல்கிறான்?"

"சொல்லவில்லை. சொல்லவைக்கப் பட்டான். ராஸ்கல்."

ஷா பற்களைக் கடித்தார், விரோதிகளைக் கூட மன்னித்துவிடலாம். பகை மறந்து உறவு கொள்ள நேர்ந்தால் கொள்ளலாம். ஆனால், கூட இருந்தே முதுகில் கத்தி எறியும் புத்திகொண்ட துரோகிகளை மன்னிக்கவே கூடாது, ஷாவின் எண்ணம் அதுதான்.

அதனால் இன்ஸ்பெக்டர் ரஞ்சித் குலாம்ஷாவால் நார் நாராய் உரிக்கப்பட்டு, கிழித்து போடப்பட்ட குப்பை போல பொலிஸ் சிறைக்குள் வீசப்பட்டுக்கிடந்தான்.

குலாம்ஷாவின் கவனிப்பு எப்படியிருக்கும் என்பது டி.ஐ.ஜிக்கு தெரியும். அதுவும் உள்ளிருந்தே விளையாட நினைத்த ஒரு துரோகிக்கு குலாம்ஷா எப்படி. மரியாதை கொடுத்திருப்பார் என்பதும் புரியும்.

"கடுமையான கவனிப்போ ஷா. பிரச்சனையாகிவிடும். கவனமாகக் கையாளுங்கள்."

"பயப்படவேண்டாம் டி.ஐ.ஜி. ரஞ்சித் சாகமாட்டான். அவன் சுலபமாக சாக குலாம்ஷாவும் விடமாட்டான். அனுபவிக்க வேண்டும். தன் துரோகத்தின் விளைவை விபரமாக-விளக்கமாக அனுபவிக்க வேண்டும்."

"இதைவிட சாவது மேல் என்று நினைக்கப் போகிறான்."

குலாம்ஷா கொண்டுவந்த ஃபைல் திறந்து விபரங்கள் மீது விழிகளை மேயவிட்டார் டி.ஐ.ஜி.

"ஒரு தோட்டா போதும். ஒரு நொடியில் உயிர் போகும். துரோகத்திற்கு அந்த தண்டனை மிகவும் குறைச்சலானது என்பது என் தாழ்மையான அபிப்பிராயம் டி.ஐ.ஜி."

குலாம்ஷா சொல்ல, ஃபைலுக்குள் அனுப்பிய விழிகளை மீட்டு குலாம்ஷா மீது போட்டார் டென்சில்.

# கண்ணே மதுமிதா



"ஷா உன், சொறி....உங்கள் கோபம் நியாயமானது. எனக்கும் உடன்பாடுதான். ஆனால்.."

டி.ஐ.ஜி தயங்க ஒரு புன்சிரிப்போடு குஷாம்ஷா பேசினார்.

"சட்டம் என்ற ஒன்று இருக்கிறது. அது தன் வேலையைச் செய்யும். சட்டத்தை நாம் கையில் எடுக்கக்கூடாது. நீதிமன்றம் முன் நிறுத்தவேண்டும். இப்படியெல்லாம் தானே சொல்ல வருகிறீர்கள். இதெல்லாம் கேட்டுப் புளித்துப்போன வசனங்கள் டி.ஐ.ஜி."

"அதனால்?"

"முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும் என்கிறேன். சட்டைப்பை நிறைய நோட்டுக்கள் உள்ள குற்றவாளிகளால் சட்டத்திற்குள் புகுந்து விளையாட முடியும். எமது எதிரிகளிடம் இரண்டு பலம் இருக்கிறது டி.ஐ.ஜி."

குலாம்ஷா சொல்ல கேள்வியாய் நிமிர்ந்து அவர் முகம் பார்த்தார் டென்சில்.

"யெஸ். ஒன்று நோட்டுப்பலம். இன்னொன்று வேட்டுப்பலம். குற்ற உலகில் ஆயுத நடமாட்டம் அதிகமாகிவருகிறது."

"தெரியும். தெரு மோதலிலும் துவக்கு வெடிக்கிறது."

டென்சிலின் முகத்தில் கோபம் பாதி. கவலை மீதி. கலவையாய் தெரிந்தது.

குலாம்ஷா இறுக்கமான குரலில் சொன்னார்.

"அதனால்தான் சொல்கிறேன் டி.ஐ.ஜி,நாங்கள் கொஞ்சம் விளையாட வேண்டும். எங்கள் பலம் என்னவென்று காட்டவேண்டும். தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும். தர்மம் மறுபடியும் வெல்லும் என்று சொல்லிவிட்டு கைகட்டிக்கொண்டு நிற்கக்கூடாது. சோ இப்போது என் கைகளுக்கு சுதந்திரம் வேண்டும்."

குலாம்ஷா கேட்க, டி.ஐ.ஜி டென்சில் தன் உதட்டில் புன்னகை காட்டினார். பதில் அதிலே இருந்தது. பின்னர் கேட்டார்,

"வில்பிரட் ஒரு முக்கிய சாட்சி. அவன் உயிரோடு இருக்கவேண்டும். அது முக்கியம். இப்போது எப்படியிருக்கிறான் ஷா?"

"கால்களில்தானே காயங்கள். என்ன, கொஞ்சம் பலமாக நாலு தட்டு தட்டியதால் ஒரு வாரத்திற்கு படுத்தபடி இருக்க வேண்டியிருக்கும். அவன் சொன்ன விபரங்களும் ஃபைலில் இருக்கின்றன டி.ஐ.ஜி."

"ரைட், அடுத்த கட்டமாய் எந்தத் திசையில் குறிவைக்க உத்தேசம் ஷா?"

"முதலில் மதுமிதாவைக் காப்பாற்ற வேண்டும். தனபாலை மடக்க வேண்டும்."

குலாம்ஷா சொல்ல, கை உயர்த்தி தடுத்து சிரித்தார் டென்சில்.

"தனபாலை நீங்கள் மடக்க வேண்டிய தேவையே இல்லை குலாம்ஷா."

ஏன் என்ற கேள்வியாய் புருவம் உயர்த்தினார் ஷா.

"யெஸ். தனபால் விபத்தொன்றில் மடிந்துவிட்டான். நீங்கள் வில்பிரட்டையும், ரஞ்சித்தையும் விசாரித்துக்கொண்டிருந்த பிசியில் இருந்தீர்கள். அதனால் உடனே தெரிவிக்கவில்லை. விபத்தில் சிக்கிய போலி மதுமிதா உயிரோடு தப்பியிருக்கிறாள்."

"விபத்து எப்படி.."

"சந்தேகமே இல்லை. திட்டமிட்டு நடக்கவில்லை. பாஸ்டினின் நிறை போதை லொறிக்கு இரையாக வானை கொடுத்து விட்டது. பாஸ்டினும் காலி."

குலாம்ஷாவுக்கு தனபால் மடிந்ததில் திருப்தி வந்தது. எனினும் விசாரிக்கப்படாமல் அவன் செத்துப் போனதில் அவனோடு கூடவே சில இரகசியங்களும் செத்திருக்கலாம், அதை அறிய முடியாமல் போனதே என்று கவலையும் வந்தது.

ஃபைலில் இருந்த விபரங்களை டி.ஐ.ஜியும், குலாம்ஷாவும் விவாதித்தார்கள். விபரமான திட்டம் வகுத்தார்கள். எதிரிகளின் குற்ற உலகை நோக்கி குறி வகுக்கப்பட்டது. இனி செயற்பட வேண்டும். குலாம்ஷாதான் தளபதி.

■

**வீ**ட்டின் முன்புறமாய் எல்லோரது கவனமும் இருக்க, இன்ஸ்பெக்டர் ரஞ்சித்தின் உதவியோடு வீட்டின் பின்புற கதவு வழியாக பி.எம் லாலின் ஆட்களால் கடத்தப்பட்டாள் மதுமிதா.

கடத்தப்பட்ட மதுமிதா இப்போது பி.எம்.லாலின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்தாள்.

லால், பி.எம்.லால். போதை தெளிந்திருந்தான்.

போலி மதுமிதா கடத்தப்பட்ட செய்தி போதையை முறித்தது.

புதிதாய் தோன்றியுள்ள எதிரி யார் என்று மூளையைக் குடைந்ததில் போதை பொத்தென்று இறங்கிவிட்டது.

இப்போது ஒரிஜினல் மதுமிதா, ஒரு தேவதையாய் எதிரே கொண்டுவந்து நிறுத்தப்பட்டதில், நிறுத்தப்பட்டவள் மீது விழிகள் மேய்ந்ததில் உள்ளே ஒரு மயக்கம் வந்தது. தொட்டுப்பார்த்தால் என்னவென்று ஆசை வந்தது.

லாலுக்கு அருகில் இருந்த சுஜிதாவுக்கு கோபம் வந்தது. தன் அழகில் மயங்கிக் கிடந்தவன் வேறு ஒரு பெண்ணை உரித்துப் பார்க்கையில் தன் அழகு இவளைவிட மட்டமோ என்று பொறாமை வந்தது.

தொண்டையைச் செருமி தானும் அருகில் இருப்பதை உணர்த்தினாள் சுஜி.

திரும்பிப் பார்த்தான் லால்.

"பார்த்தாயா சுஜி. மதுமிதாவாய் நடித்தவள் எம்மிடமிருந்து கடத்தப்பட்டாள். இப்போது ஒரிஜினல் மதுவே என் முன்னால் நிற்கிறாள். மது...நல்ல பெயர். உச்சரிக்கும் போதே உள்ளே போதை ஏறுகிறது. மதுவுக்கும் உனக்கும் என்ன வித்தியாசம் தெரியுமா மதுமிதா?"

மதுமிதா முறைத்தாள். சீ... நீயும் ஒரு மனிதனா? என்பது போல பார்வையில் வெறுப்பு நிறைத்து வீசினாள். லால் அவள் கோபத்தையும் ரசித்தான்.

"குடிக்கும் மதுவை கிண்ணத்தில் நிரப்பலாம். உன்னை எண்ணத்தில்தான் நிரப்ப வேண்டும். இன்னொரு விசயமும் இருக்கிறது. மதுவுக்கு நாம்தான் கிண்ணம் கொடுக்க வேண்டும். ஆனால் இந்த மதுவோ இதழ்கள் என்னும் கிண்ணங்களில் போதையை ரெடியாக வைத்திருக்கிறது."

சொல்லிவிட்டுச் சிரித்தான். கண்களில் காமம் வழிந்தது.

காறி அவன் முகத்தில் துப்பிவிட நினைத்தாள் மதுமிதா. மறு நொடியே எண்ணம் மாற்றினாள். அவன் பலவீனம் புரிந்து ஒரு தருணம் தேட நினைத்தாள். எனவே அவன் இரசனை கண்டு வெட்கப்படுவது போல தலை குனிந்தாள்.

லாலுக்கு உற்சாகம் வந்தது. பெண் வெட்கப்பட ஆணுக்குள் உற்சாகம் எழும். ஆசைவரும். லாலுக்கும் ஆசை வந்தது. மதுமிதா பணிவாள் என்ற எண்ணம் வந்தது.

"மதுமிதா பயப்படாதே. உன்னைப் போன்ற அழகான, இனிதான பெண்களை கொன்றுவிடும் அளவுக்கு உபயோகம் தெரியாத முட்டாள் அல்ல லால். இதோ இருக்கிறாள் பார் சுஜி. இவளைக் கேள். லால் உபயோகம் தெரிந்தவன். உபயோகிக்கவும் தெரிந்தவன் என்று எத்தனை முறை வேண்டுமானாலும் சத்தியம் செய்வாள்."

சொல்லிவிட்டு அருகில் இருந்த சுஜிதாவின் தொடையில் கிள்ளிக்கொண்டு சிரித்தான்.

சுஜிதாவுக்கு எரிச்சலாக இருந்தது. மறைத்துக்கொண்டு வேண்டுமென்றே சிரித்தாள்.

"சுஜி நீ உன் அறைக்கு போகலாம். உனக்கு ஒரு முக்கியமான வேலை வைத்திருக்கிறேன். ரெடியாய் இரு. கூப்பிடுவேன்."

வெட்டிவிடுகிறான் என்பது புரிந்தது. மதுமிதாவோடு தனித்து இருக்க விரும்புகிறான். உள்ளே கோபம் வந்தது. பொறாமை எட்டிப்பார்த்தது. வெளியே போனாள் சுஜி. வெறுப்போடு போனாள் சுஜி.

இருக்கையை விட்டு எழுந்தான் லால். மதுமிதாவுக்கு அருகே போய் தோளில் கைவைத்தான்.

மதுமிதா அசையாமல் நின்றாள். லாலுக்கு துணிச்சல் வந்தது.

மதுமிதாவின் இடையில் கைவைத்து தன்னோடு சேர்த்து அணைத்தான். மென்மையாய் இருந்த வயிற்றில் மெல்ல அழுத்தினான்.

மதுமிதா அனுமதித்தாள். லால் மேலும் சுதந்திரம் எடுத்துக்கொண்டான்.

கரம் உயர்ந்து மதுமிதாவின் நிமிர்ந்த அழகுகள் இரண்டிலும் உற்சாகமாய் ஊர்ந்துகொண்டிருக்க, லால் கேட்டான்,

"மது உனக்கு என்ன வேண்டும்?"

மதுமிதா ஒரு பெருமூச்சுவிட்டாள். லால் அவளது மார்புகளையே முறைத்துப் பார்த்தான். பெருமூச்சுக்கு ஏற்ப ஏறி இறங்கி அசைவு காட்டிய அழகுகள் உள்ளே ஆசைத்தீ மூட்டின.

லால் தன் மார்புகளை பார்த்துக் கொண்டிருக்க, மதுமிதா அந்த அறையைச் சுற்றி விழிகளால் நோட்டமிட்டாள். லால் எழுந்து வரும் போது சோபாவில் விட்டு வந்திருந்த பிஸ்டல் என்னை வந்து எடுக்கலாம். விருப்பம் போல் பயன்படுத்தலாம் என்பது போலக் கிடந்தது.மதுமிதாவின் விழிகள் பிஸ்டலின் மீது நிலைத்தன.

லால் தன் நிலை மறந்தான். மதுமிதாவின் மார்பில் முகம் புதைத்தபடி தன் கரங்கள் விரித்து அவள் முதுகில் பதித்து அணைத்தான். பின் முகம் உயர்த்தி மீண்டும் கேட்டான்.

"மது உனக்கு என்ன வேண்டும்? உடனே கேள். ஆனால் எனக்கு நீ வேண்டும். இந்த சொர்க்கம் வேண்டும்."

மதுமிதா கேட்டாள்.

"என்ன கேட்டாலும் தருவீர்களா?"

"லாலால் முடியாதது எதுவுமில்லை கேள்."

"போட்டோக்கள்!"

லால் மதுமிதாவை சந்தேகமாய் பார்த்தான்.

"எந்தப் போட்டோக்கள்?"

"தெரியாதது போல கேட்கிறாயே லால். என் தந்தையாய் வேசம் போட்டு நடித்த தனபாலும் நீயும் சேர்ந்து நடத்திய நாடகத்தில் எடுக்கப்பட்ட போட்டோக்கள். அது இப்போது உன்னிடம்தான் இருக்கிறது."

"என்ன சொல்கிறாய் மது? எந்த நாடகம். என்ன போட்டோ?"

மதுமிதா சிரித்தாள்.பதில் சொல்ல உதடு திறந்த நொடியில்,

"நீ சொல்ல வேண்டாம் மதுமிதா. அதை நானே சொல்கிறேன்!"

கதவருகில் இருந்து வந்தது குரல். லால் திகைத்துப் போய் திரும்பிப் பார்த்தான். வார்த்தைகள் தேடித் திணறினான்.

"நீ...த..ன..பால் நீ சாக..வில்..லை...யா?"

"இல்லை. நான் தனபால் இல்லை. தனபால் செத்தது நூறுவீதம் சத்தியம்."

வந்தவர் சொல்லிவிட்டுச் சிரித்தார். இடக்கரத்திலே இருந்து பிஸ்டல். பளபளத்தது.

"அட..அ...ப்படியா..னால்?"

"ஒரு கதை சொல்லட்டுமா லால்? சுவாரசியமான கதை. அதற்கு முன்னர் மது கேட்ட போட்டோக்களை கொடுத்துவிடு ராஜா. இல்லாவிட்டால் இதோ இருக்கிறது பாரப்பா பிஸ்டல். இதுக்கு மூளையே கிடையாது. சுடு என்று தட்டிக்கொடுத்தால் போதும் உயிரை அள்ளிவிடும். என்ன உத்தேசம்?"

"த...தருகிறேன்."

"தட்ஸ்குட்... அதைச் செய் முதலில்."

லால் தயங்கினான்.

மதுமிதாவுக்கு குழப்பமாக இருந்தது. குரலில் அதே இனிமை. அதே பரிவு.

"என்னம்மா மது அப்படிப் பார்க்கிறாய்? எல்லாம் விபரமாய் சொல்கிறேன். முதலில் அந்தப் போட்டோக்கள், நெக்கடிவ்கள் எம் கைக்கு வரட்டும்."

மதுமிதாவுக்குள் சந்தேகம் இருந்த இடம் தெரியாமல் போனது. மனதில் எழுந்த உற்சாகத்தில் அவள் கால் உயர்ந்தது. லால்மீது உதைத்தாள். நெஞ்சின் மையத்தில் விழுந்தது உதை.

"போடா...எடு போட்டோக்களை"

உத்தரவிட்டாள்.

சுவர் ஓரமாய் இருந்த இரும்பால் செய்யப்பட்ட அலுமாரி திறந்தான் லால்.

உள்ளே என்ன இருக்கிறது என்று பார்க்க முடியவில்லை. லாலின் முதுகு மறைத்தது. உள்ளே ஒரு இயந்திரத் துப்பாக்கி இருந்தது. எடுத்தவுடன் சுடுவதற்கு வசதியான தயார் நிலையில் இருந்தது.

லால் இயந்திரத் துப்பாக்கியை மெல்லத் தூக்கினான்.

திடீரென்று வேகமாய் திரும்பினான்.

■

ரம்யா கட்டிலில் படுக்கவைக்கப்பட்டு ஒட்சிசன் ஏறிக்கொண்டிருந்தது.

அவன் ஒரு பூனைபோல ரம்யா படுத்திருந்த கட்டிலை நெருங்கினான். முகத்தை துணியால் மறைத்திருந்தான்.

கட்டிலுக்கு அருகில் போனவன் ரம்யாவை உற்று நோக்கினான்.

அழகான இளம் பெண்ணே! உன் விதி என் விரல் நுனியில் இருக்கிறது. உன் மூச்சுக்காற்று தங்கள் மேல் படாதோ என்று எத்தனை பேரை துடிக்க வைத்திருப்பாய். இப்போது உன் மூச்சே நின்றுவிடப் போகிறது. இல்லை, இல்லை. நிறுத்தப்படப் போகிறது.

மனதுக்குள் சொல்லிக்கொண்டான்.

பின்னர் ஒட்சிசன் வருவதை நிறுத்த கைகளை மேலே உயர்த்தி குழாயில் கைவைத்தான்.

"அத்தோடு போதும் மிஸ்டர் பாஸ்கரன். கையைக் கொஞ்சம் கீழே இறக்க முடியுமா?"

பதறிப்போய் திரும்ப, உள்ளே பாத்ரூம் கதவு திறந்திருக்க, அங்கே நின்று கொண்டிருந்தார்,

குலாம்ஷா.

பாஸ்கரனை பார்த்துச் சிரித்தார் குலாம்ஷா.

"பணம் பாதாளம் வரையும் பாயும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். வைத்தியம் செய்யும் டாக்டர் வரையும் கூட பாயும் என்று அறிந்த போது சந்தேகப்பட்டேன். எதற்கு வீண் சந்தேகம். ஆராய்ந்து பார்க்கலாம் என்று வந்து பாத்ரூமில் பதுங்கியிருந்தேன். கிடைத்த தகவலை மெய்ப்பித்துவிட்டீர்கள் மிஸ்டர் பாஸ்கரன். அது சரி,இனி ஏன் மிஸ்டர் போட வேண்டும். போடா வெளியே."

நெருங்கிவந்து கழுத்தில் கரம்வைத்து தள்ளினார். கதவு திறக்க வெளியே பிரதம டாக்டர் சடகோபன் நின்றார்.

"பார்த்தீர்களா டாக்டர். உங்கள் துணை டாக்டர் செய்த நல்ல காரியத்தை?"

"பயிருக்குள் மறைந்திருந்த களை." என்றார் வெறுப்பான குரலில் சடகோபன்.

"கிடைத்த தகவல் பற்றி சொன்னதும் முன்வந்து ஒத்துழைத்ததற்கு நன்றி டாக்டர். பின்னர் உங்களோடு தொடர்பு கொள்கிறேன்."

பாஸ்கரன் தலைகுனிந்தபடி குலாம்ஷாவோடு போய் வெளியே நின்ற ஜீப்பில் ஏறினார்.

சாரதியை பின்னால் போய் இருக்குமாறு கூறிவிட்டு ஜீப்பை தானே ஓட்டிச் சென்றார் குலாம்ஷா.

நகரில் இருந்து விலகி வெளியே பறந்தது ஜீப்.

பின்னால் இருந்த பொலிசாருக்கு எதுவுமே புரியவில்லை.

எங்கே போகிறார் குலாம்ஷா?

■




## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: எஸ்.ஆர். புஸ்பராஜன்
வயது: 22
முகவரி: 108, கண்டி வீதி,
நுவரெலியா.
பொழுதுபோக்கு: கதை, கவிதை எழுதுதல், பேனா நண்பர் தொடர்பு, சஞ்சிகைகள் வாசித்தல்.



பெயர்: கே. பபிலோயா
வயது: 26
முகவரி: 34, பெரேரா பிளேஸ்,
குடாப்பாடு, நீர்கொழும்பு.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம், பத்திரிகை வாசித்தல், வானொலி.



பெயர்: என்.எல். முஸம்மில்
வயது: 17
முகவரி: அல்-அமீன் வீதி,
புதிய காத்தான்குடி-6.
பொழுதுபோக்குவானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.



பெயர்: எம்.எவ்.எம். நிஸ்தார்
வயது: 21
முகவரி: 174/126,
ஆப்தீன் மாவத்தை, தக்கியா வீதி
கொச்சிகடை
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப் புத்தகம் வாசித்தல், வானொலி கேட்டல்.

பெயர்: சே. செல்வம்
வயது: 24
முகவரி: ம.தே. பிரிவு,
தும்பர எஸ்டேட்,
இங்கிரிய.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், கதைப்புத்தகம் வாசித்தல்.


பெயர்: பி. பிரசாந்தி
வயது: 13
முகவரி: கே/18, நவகம்புர,
வெல்லம்பிட்டிய,
கொழும்பு-14.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், கதைப்புத்தகம் வாசித்தல்.

பெயர்: எம்.எஸ்.எம்.அமீனுதீன்
வயது: 23
முகவரி: 65, நிஸ்வி சின்ன
லெப்பை மாவத்தை,
வாழைச்சேனை.
பொழுதுபோக்கு: வழமையான பொழுதுபோக்குகள்.

பெயர்: பாத்திமா ஸக்கி [illegible]
முகவரி: 350/1, கண்டி [illegible]
மாவனல்லை.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி [illegible] பேனா நண்பியர்களுடன் தொடர்பு, தையல்.

# தலைமைத்துவம்

-தி/ இளையவன்-



இன்றைய நாளாந்த பத்திரிகையில் வெளியான செய்தி உச்சி வெய்யில் சூட்டுக்கு முன்பே ஊருக்குள் உலா வந்து ஊரையே பரபரப்பிற்குள்ளாக்கியது. கடந்த கால கசப்புணர்வுகளை மறந்து மக்கள் இனவிரோதம் பார்க்காது மெதுவாகத் தங்கள் பழைய வாழ்க்கையினை ஆரம்பிக்கத் தொடங்கிய காலத்தில் வெளியான அச் செய்தியானது இஷ்டம் போல திரிவடைந்து, விரிவடைந்து மக்களுக்கிடையே அச்ச உணர்வை ஏற்படுத்தி அதன் மூலம் இனப்பிரச்சனையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு நல்ல வாய்ப்பைக் கொடுத்துக் கொண்டிருந்தது. இப்போ ஊர் பூராவும் இதைப் பற்றியே பரவலாக எங்கும் கதையாக இருந்தமையினால், அந்த முஸ்லிம் ஊரைத்தாண்டிச் செல்லக்கூடிய தமிழரது வாகனங்கள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட்டிருந்தன.

ஊர் நல்ல நிலமைக்குத் திரும்பிக் கொண்டிருந்த நம்பிக்கையில் முன்னைய நாளன்று ஊருக்குள் வந்து மாட்டிக்கொண்ட ஒரு சில தமிழர்கள் நெருங்கிய முஸ்லிம் நண்பர்களின் உதவியுடன் மறைவாகவே ஊர் எல்லையைத் தாண்டிக் கொண்டிருந்தனர்.

"கடையெல்லாம் பூட்டி ஹர்த்தால் செய்யுங்கோ..."

சில பைசிக்கிள்களில் பலராக வந்த இளைஞர் கோஷ்டி, சொல்வதுடன் நிற்காது தாமாகவே திறந்திருந்த கடைகளின் கதவுகளை இழுத்துப் பூட்டிக் கொண்டும் சென்றனர்.

"இவனுகளுக்கு வேற வேலையில்ல. எங்கேயோ அடிச்சானாம் பல்லுப்போச்சாம் என்பது மாதிரி, சம்பந்தமில்லாததை யெல்லாம் தொடர்புபடுத்தி ஊரையே நாசப்படுத்த தொடங்கிட்டானுங்களே..." ஒரு வயதானவர் தனக்குள்ளே முணுமுணுத்துக்கொண்டே தனது கடையைப் பூட்டிக் கொண்டார்.

ஒரு சில நிமிடங்களுக்குள்ளேயே கடைத்தெரு முழுவதும் வெறிசோடிக் காணப்பட்டது. இளைஞர் கோஷ்டியில் சிலர் என்ன நினைத்தார்களோ தெரியவில்லை, பழைய டிறக்டர் டயறை முச்சந்தியில் போட்டு நெருப்பு வைத்தனர். அந்தக் கோரக் காட்சியானது அப்பிராந்தியத்தில் அச்ச நிலைமையைத் தோற்றுவித்தது. அந்தக் கோஷ்டியில் இருந்து பிரிந்து கொண்ட சிலர் அந்தப் பிராந்தியத்தின் ராஜாக்கள் தாங்கள் தான் என்பது போல கம்பீரமாக ஊரைச்சுற்றி உலா வந்தார்கள்.

தங்கள் தலைவனின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு செயற்படுகின்றோம் என்ற வீராப்பு எல்லோரிடமும் நிறைந்திருந்தது. பாவம்! அவர்கள் தலைமைத்துவத்தின் தன்மையை ஏனோ அறியத் தவறி விட்டார்கள். எண்ணங்களுக்கேற்பவே அவ்வூரின் பெரும்பான்மை சமுதாயம் மலர்கின்றது.

புதிய எண்ணங்கள்ளையும் இலட்சியங்களையும் உருவாக்கி ஒரு தலைவன் தனது சமுதாயத்தை புதிய உலகை நோக்கி அழைத்துச் செல்கின்றான். அல்லது மக்களின் அபிலாஷைகளுக்கேற்ப மக்களால் நடாத்திச் செல்லப்படுகின்றான். எப்போதும் மக்களின் ஆசைகளைத்தான் நான் பிரதிபலிக்கின்றேன் என்ற எண்ணம் ஒரு நல்ல தலைவனுக்கு இருத்தல் வேண்டும். இவர்களைப் பொறுத்த வகையில் இங்கே எல்லாமே தலைகீழ் மாற்றம். மக்கள் ஆயுதக் கலாசாரத்தை ஏற்றுக் கொண்டுள்ளார்களோ தெரிய வில்லை. கெட்ட செயல்களைத் தடுக்க தைரியமில்லாவிட்டாலும் பரவாயில்லை. நல்லதைச் சொல்வதற்கு முன் வருகின்றார் களில்லையே என்ற நீண்ட நாளைய எதிர்பார்ப்புக்களுக்கு இன்று ஒரு பரீட்சை.

"இந்த நாசமாப்போறவனுகள் நல்லா இருக்கிற ஊரையே அழிக்கப் போறானுகள். யா அல்லாஹ்! இவனுகளுக்கு நீ தான் நல்ல புத்தியைக் கொடுக்க வேண்டும்." வார்த்தைகள் சற்று உயர்வாக இருந்த மையினால் அவர்கள் காதில் வீழ்ந்தது. சைக்கிளை விட்டிறங்கி வேகமாக வந்தவர்கள் அவரைப் பெரியவர் என்றும் பார்க்காது அவர் மேலிருந்து சால்வையை இழுத்து,

"நாங்கள் நாசமாப் போனா நீங்க மட்டும் நல்லா இருந்திடுவீங்களா...?"

"நீங்க செய்ற பாவத்துக்கு நாங்களும் நாசமாப் போக வேண்டியதுதான்." கிழவர் அதிகமான தைரியத்தை வரவழைத்துக் கொண்டார். அவர்களைப் பார்த்து முகத்துக்கு நேரே சொன்னார்.

"அந்தக் காபீர்கள் செய்றதைப் பார்த்துட்டு சீலைக்குள்ள பூந்துட்டு இருக்கவா சொல்றீங்க...?"

"டேய் இவருக்கெல்லாம் என்னடா மரியாதை? வாழ்ந்து முடிஞ்சதுகள் இன்னும் வாழணும் என்கிற ஆசையைப் பாரு. இஸ்லாத்திற்காக நாங்க செய்ற தியாகத்தையெல்லாம் மதிக்கத் தெரியாத ஜென்மங்கள்." அவனது வார்த்தையின் சூடு கிழவரை நன்றாகவே ஆட்கொண்டது. நீண்ட நாட்களாக மனதை அரித்துக் கொண்டிருந்த எண்ணங்களுக்கு இன்று எப்படியும் முடிவு கண்டேயாக வேண்டும் என்ற வெறி உக்கிரமடைய அவரையறியாமலே உள்ளத்தில் ஒரு உறுதி உதயமாகியது.

"இஸ்லாத்திற்காக தியாகமா...? யாருக்குடா கதை சொல்றீங்க?"

"இஞ்ச பாருங்கோ நாங்க மரியாதை கொடுக்கிறதெல்லாம் உங்களுக்கில்ல. இந்த தோற்றத்துக்காகத்தான். நல்லா கேட்டுக் கோங்க, நாங்களும் ஹதீஸ்படி தான் தலைமைத்துவத்திற்கு மதிப்புக்கொடுத்து, கட்டுப்பட்டு இதுநாள் வரைக்கும் செயற்படுகின்றோம் புரியுதா...?"

"எப்படியான தலைமைத்துவம்? உண்மைகளை விசாரிக்காம அநியாயமாக ஆட்களை வெட்டியும் குத்தியும் நாசம்பண்ண கட்டளையிடுற தலைமைத்துவத்திற்குக் கட்டுப்பட்ணும் என்றா ஹதீஸ்ல சொல்லியிருக்கு.....?"

கோஷ்டியில் சற்று வயதானவன் போலிருந்த ஒருவன் எல்லோரையும் தள்ளிக் கொண்டு முன்னே வந்து,

"விசர் கதை கதைக்காதீங்க. நாங்க உங்களைக் காப்பாற்றத்தான் எங்கட வாழ்க்கையையே தியாகம் செய்திருக்கோம். இது எங்கட மண். நாம பரம்பரையா வாழ்ந்த இடம். காபீர்களோட கட்டுப்பாடுகளும், கட்டளைகளும் எங்களுக்குத் தேவையில்லை. நாங்களே எல்லாத்தையும் கவனிச்சு ஒரு முடிவுக்கு வந்துள்ளோம்."

இளைஞர் கோஷ்டி நீண்ட நேரமாகவே ஓரிடத்திலிருந்து ஏதோ வாக்குவாதம் செய்வதைக் கண்ணுற்ற அவ்வூர் பெரிய பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் துணைக்கு ஒருவரை அழைத்துக்கொண்டு விரைவாகவே அவ்விடம் வந்தார்.

"நானும் பார்த்துக்கொண்டுதான் வாறன். இப்போ எதுக்காக பசாரைப் பூட்டச் சொல்றீங்க...?"

"தலைவர், இன்னிக்குப் பேப்பர் பார்த்தீங்கதானே...?"

"ஓ...அந்த செய்தியையும் பார்த்தன். நம்ம ஊர் பையன் கடற்கரையோரம் நேத்து சூட்டுக் காயங்களுடன் மௌத்தாகிப் போயிருந்த படமும் போட்டிருக்கு."

"வெடி படுகிறதற்கு முதல்நாள் அந்த தமுல் (தமிழ்) பொடியனோட காக்கா தேத்தண்ணி கடையில சாப்பிட்டு கடற்கரையோரமாப் போனதா பார்த்தவங்க சொல்றாங்க."

"ஆதாரம் இருக்கா...? சும்மா ஒருவர் முகத்தையொருவர் பார்த்து முழிக்காதீங்க. உங்கள்ள பார்த்தது யாராவது இருக்கா? எதுவுமேயில்ல. சொன்னவனையும் அடையாளம் தெரியல... என்னப்பா இதெல்லாம்...?"

"அதுக்குத்தான் நாங்க அந்த தமுல் பொடியனை விசாரிக்கப் போனோம். ஆனா ஊருக்குள்ள ஆளையே காணோம். மறைச்சுப் போட்டானுகள்."

"எப்படிப் போனீங்க...? பெரியவங்க என்று யாரைக் கூட்டிப் போனீங்க? உங்க பாட்டுக்கு கையில ஆளுக்கொரு கொட்டானையும் கம்பையும் எடுத்துக் கொண்டு போனால் எவன் உங்களை நம்பி விளக்கம் சொல்ல முன் வருவான்?"

இருவருக்கிடையேயும் விவாதம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது சில இளைஞர்கள் வந்து கோஷ்டியுடன் சேர்ந்து கொண்டதும், தூர நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த சில ஊர்க் காரர்களும் தைரியமாகவே வந்து கூட்டத்துடன் கலந்து கொண்டனர். வந்த இளைஞர்களுள் சற்று உயர்ந்த மெல்லிய தாடி வைத்திருந்த ஒருவனைக் கண்டதும் இளைஞர்கள் மௌனமாக ஒதுங்கி வழிவிட்டனர்.

"என்ன சொன்னீங்க.....? அவங்ககிட்ட விளக்கம் கேட்ட பெரியவங்க எவரையும் கூட்டிப் போகல என்றா...? அவனுகளோட ஆட்கள் முன்பு நம்மட ஊருக்குள்ளால புகுந்து அட்டகாசம் செய்தபோது எங்க ஓடி ஒழிச்சாங்க. நீங்க சொல்ற பெரியவங்க? நாங்க அண்ணைக்குத் துணியாட்டி இண்ணைக்கு இந்த ஊர் மையத்து வாடியாகத்தான் இருந்திருக்கும். ஞாபகம் வைச்சுக்கோங்க."

"தம்பி, அப்போ உங்க துணிச்சல் பாராட்டக்கூடியது. அது தேவையும் தான். ஆனால் எல்லா காலத்திற்கும் பொருத்தமாப் படாதே"

"இனி வந்து எங்களை தாக்க மாட்டானுங்கள் என்று என்ன உறுதி? நீங்க சும்மா பள்ளித் தலைவர் பதவியோட வீட்டுக்குள்ள இருங்க. வெளி விசயங்களை நாங்க பார்த்துக்கிறோம்." அவன் சற்றுக் கிண்டலாகச் சொன்னதும் இளைஞர்கள் சிலர் வாய்விட்டுச் சிரித்தது அவருக்குள் கொதிப்பையேற்படுத்தியது. வார்த்தை களில் மென்மையானவைகளையும், பார்வையில் புன்னகை நிறைந்தவை களையும் கடைப்பிடித்தே வாழ்ந்து பழக்கப்பட்ட பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் முகம் வழக்கத்தைவிட மாற்றம் அடைந்தது பலரை வியப்பிற்குள்ளாக்கியது.

"தம்பி தலைவன் சிறு பிள்ளைபோல முடிவெடுப்பதோ அல்லது பிடிவாதம் பிடிப்பதோ நல்லதல்ல. நம்பிக்கையானவர்களிடமும் நாலு விசயங்களையும் கேட்டறியணும். உண்மைகளை பார்க்க மறுத்தால் அதன் பலன்களைத் தலைவனோ அவரோடு சேர்ந்த தொண்டர்களோ அனுபவிக்கப் போவதில்லை. பலனை இந்த ஊர்தான் அனுபவிக்க வேண்டி வரும்."

"அப்போ நானென்ன பபாவா...?"

"அப்படிச் சொல்லவில்லையே."

"பின்னென்ன! நாங்களெல்லாம் பிரச்சனையென்றால் ஓடிப்போயிடுவம். நீங்கதான் அடிபட்டு சாகப் போறதாகச் சொன்னீங்களே."

"தம்பி! அதுக்கு அப்படிக் கருத்தில்லை. இப்போ நான் சொல்ற விளக்கம் குழப்பத்திற்கல்ல. குழப்பங்களை விளக்குவதற்குத்தான். ஒரு நல்ல தலைமைத்துவம் எப்படி இருக்கணும் என்று சொல்ல வாறன்."

"இவ்வளவு காலமும் தலைவனா-பிரச்சனையில்லாம தானே இருந்தேன். ஊருக்குள்ள எல்லைக்காவல் எல்லாம் போட்டு இராப்பகலா காவல் காத்ததையெல்லாம் மறந்துட்டீங்களா?"

"தம்பி! தம்மைச் சூழ்ந்திருப்பவர்களை பொதுவாக தமது சமூகத்தை நம்புகிற வர்களே நல்ல தலைவர்கள். ஆனால் உங்கட ஆட்களால் வீணா விசாரிக்கப்பட்டு அடிபட்டு மனசு உடைஞ்சு போயிருக்கிற நம்மட ஆட்களோட எண்ணிக்கை தெரியுமா உங்களுக்கு? ஒண்ணை மட்டும் ஞாபகம் வைச்சுக்கோங்க. சூழ்ந்திருப்போர்களின் உறவுகளிலிருந்து விடுபட்டு தனித்து வாழும் ஒரு மன இயல்பை ஒரு தலைவன் வளர்த்துக்கொள்ளும் போது அவனது அதிகார போதை அதிகமாகி, நம்ம மார்க்க முறைகள், ஊர் வழமைகள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டு தலைவனது வார்த்தைகளே பெரிதாக மதிக்கப்பட்டு அது தொண்டர்களால் செயற்படுத்தப்படும் போது அது மக்களுக்கு வேண்டப்படாத தலைமைத்துவமாக மாறிவிடும்."

அவர் பேசி முடிப்பதற்கு முன்பே இளைஞர்களுக்கிடையே சலசலப்பு தோன்றத் தொடங்கியது. எப்படி அவர் தங்கள் தலைவனைப் பார்த்து அப்படிச் சொல்லலாம் என்று அவர்கள் ஆவேசப்பட, அவர் சொல்வதில் என்ன பிழை என்று வேறு சில இளைஞர்கள் நியாயம் சொல்ல, கூடி நின்ற ஊர்மக்களும் அந்த இளைஞர்களுக்காக வாதாட, அவ்விடம் பெரிய சிக்கலை ஏற்படுத்தக்கூடிய இடமாகவே மாறிக் கொண்டிருந்தது.

"நன்றிகெட்ட தனமா கதைக்காதீங்க. ஊருக்குள்ள அப்போ நாங்க துணிஞ்சு நின்ற போது எங்ககூட வரமறுத்த பயந்தாங்கொள்ளிகள் தான் இப்போ நாங்க செய்யிறதப் பிழையென்று நியாயம் சொல்லுதுகள்."

"பெரிசா பீத்தாதீங்க. அப்போ சரி. பிறகு உங்கட ஆட்களும் நீங்களும் செய்த மோசடிகளையும் அநியாயங்களையும் ஊரே பார்த்து கைகொட்டிச் சிரிக்குதே." சற்று ஆவேசமாகவே ஒரு இளைஞன் கூறினான்.

"மூடுடா வாய...(கெட்ட வார்த்தைகள்) பெரிய ஆளென்று பேச வந்துட்டானுகள்." கோஷ்டியின் தலைவன் அதட்டியதும் எதிர்தரப்புக் கோஷ்டி உசாரடைந்தது. யார் என்ன பேசுகின்றார்கள் என்பதைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. வார்த்தைகள் ஆக்ரோஷமாக ஒன்றையொன்று மோதிக்கொண்டிருந்தன. சப்தங்கள் மேலோங்க, இன்னும் பல ஊர்சனங்கள் அவ்விடத்தில் கூட, பெரிய கூட்டமொன்று நடைபெறுவது போன்று அவ்விடம் தோற்றமளித்தது. உயர்ந்த சப்தத்தை அடக்குவதற்காக பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் பலமாக 'அல்லாஹு அக்பர்' என்று பலமாக ஒலி எழுப்பியதும் எல்லோர் சப்தமும் அடங்கி அனைவர் முகங்களும் அவரையே ஏறிட்டன.

"நமக்குள்ள சண்டை போட்டு ஊர் சிரிக்கப் பண்ணாதீங்க. இப்போ நாம என்ன செய்யனும் அத யோசியுங்க."

"எதிர்ப்பைக் காட்டணும், ஹர்த்தால் போடணும். நாங்க முடிவெடுத்தாச்சு." உறுதியாகவே இளைஞர் கோஷ்டியின் தலைவன் கூறியதும் நிர்வாக சபைத் தலைவருக்கு எரிச்சல் அதிகமாகியது.

"எல்லாத்துக்கும் நீங்க முடிவெடுக்க ஜனநாயக முறைப்படியா தலைவரா வந்தீங்க...?" முகத்துக்கு நேரே சற்றுப் பலமாகவே அவர் கேட்டதும் அவனும் கொதிப்படைந்து, "இல்லாம! கூட்டம் கூடி இளைஞர்களால் முறைப்படி தெரிவு செய்யப்பட்டுத்தான் வந்தேன். உங்களுக்குத் தேரியாம இருந்தா நானென்ன செய்வது?"

"அப்படியில்ல தம்பி! ஜனநாயகம் என்பது வேறு. அது பரஸ்பர நம்பிக்கையில் வளர்வது. சமுதாய விழிப்புணர்வில் வளர்வது. தலைவன் என்பது மக்கள் எழுப்பி விடும் உற்சாகத்திலும் அதன் பிரதிபலிப்பாக மக்கள் பெறும் எழுச்சி உழைப்பினாலும் வளர்வது. முழு மக்களும் அதில் அங்கம் வகிப்பார்கள். சுருக்கமாகச் சொல்லப் போனால் ஜனநாயகம் என்பது ஒரு தராசு போல. ஒரு பக்கம் தலைவன் மற்றொரு பக்கம் மக்கள்." பேச்சை நிறுத்திக் கொண்டவர் கூடியிருந்த கூட்டத்தினரைப் பார்த்து,

"நீங்களும் நல்லாக் கேட்டுக்கோங்க. ஒரு தலைவனைத் தேர்ந்தெடுத்துவிட்டோம். இனி மேல் அவன் பொறுப்பு என்று விட்டு விடுவீர்களேயானால் தலைவன் தானே நாட்டின் நிரந்தர தலைவனாகத் தன்னை ஆக்கிக் கொள்ள வாய்ப்புண்டு. ஊர் நிலைமையை, இங்கு நடக்கின்ற பிரச்சனைகளின் உண்மைகளைப் புரிந்து கொள்ள சக்தியற்ற சமூகத்திலிருந்து தோன்றக் கூடிய தலைவன், தான் தோன்றியாகப் பேச-செயற்பட இடமுண்டு. நெருக்கடி மிகுந்த நேரங்களில் தலைவன் ஒருவன் தோன்றுவது இயற்கைதான். அந்த நேரத்தில் சில ஆதரவுகளையும், பலத்தையும் கொண்டு செயற்படும் போது ஊரார்களால் கேள்விகள் இல்லாமல் ஏற்றுக் கொள்ளப்படுவது என்னவோ நிஜம்தான். ஆனால் இப்போ நிலைமை வேறு. நாம ஒத்துமைக்காக-நிம்மதிக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்ற காலமிது. நாமதான் நிதானமா, பொறுமையா செயற்படணும். கையோட சில படிச்சவங்களுக்கும் சொல்றன். எப்பவும் நீங்க கண்டனம் சொல்றதிலேயே காலத்தைக் கழிக்காதீங்க. சிலருக்கு அது பெருமையாக்கூட இருக்கும். கெட்டதுகளை நிறுத்த முடியாட்டாலும் மாற்றுக்கு என்ன வழி, நல்ல காரியத்தை இப்படித் தான் செய்ய வேண்டுமென்ற யோசனைகளைக் கூடத் தெரிவிக்காது வீணே கண்டனங்களை மாத்திரம் செய்து கொண்டிருப்பது ஊருக்கும் நல்லதல்ல. இனியும் படித்த வர்கள் பயந்து ஒதுங்கிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. அதனால இப்போ நடக்கிறதே நல்ல உதாரணம். நல்லாவே கேட்டுக்கோங்க. மௌத்து எப்பவாச்சும் ஒரு தடவைதான். நாம எதையும் கொண்டு போகப் போறதில்லை. பாதுகாப்பை மனுசங்களால் எவ்வளவு காலத்திற்குத்தான் தர முடியும்...? சொல்லுங்க. எல்லா வற்றிற்கும் அந்த அல்லாஹ்வே போதுமானவன். எதுவும் பயன்படாது. சரிப்பட்டுவராது என்று நம்பிக்கையிழந்து ஒதுங்கி வாழ்வதைவிட நல்ல எண்ணத்தோட செயற்பட்டு மௌத்தாப் போனாக்கூட அதுலதான் பெருமை, புகழ் எல்லாம் இருக்கு. ஒன்று மட்டும் நிச்சயம், படித்தவர்கள் தயங்கும் போது யாராவது தேவையை நிரப்ப வருவார்கள். அவர்கள் கையில் முழு பொறுப்புக்களும் போனதன் பின்னாடி படித்தவர்கள் குறைபடுவதில் எதுவிதமான அர்த்தமுமில்லாமல் போயிடும்."

முகத்தில் முத்து முத்தாக வியர்த்தவைகளை தோளில் கிடந்த சால்வையினால் அழுத்தமாகவே ஒற்றியெடுத்துக்கொண்டே, ஊராரை அர்த்தம் நிறைந்த பார்வையில் ஆழமாக நோட்டமிட்டார். ஊரார்களிடத்தில் புதிதாகத் தோன்றியிருந்த விழிப்புணர்வு அவரை மகிழ்ச்சிப்படுத்தியது.

"இப்போ நாங்க என்ன செய்யணும்...? என்ன செய்யணும்..?" எல்லோரும் பலமாக அதையே உச்சரித்ததும் அட்டகாசம் செய்த இளைஞர் கோஷ்டியினர் தடுமாறிக் கலங்கிப் போய் செய்வதறியாது மௌனமாக நின்றனர்.

"அப்படிக் கேளுங்க. நாம ஒன்றைக் கவனிக்கணும். ஒரு தலைவனை நாம தேர்ந்தெடுக்கும் போது அவன் நல்லவனா, நேர்மையுள்ளம் படைத்தவனா உண்மையில் தனிமனித உயிரையும் உடமைகளையும் அக்கறையுடன் மதிப்பவனா; இல்லை தலைவன் சந்தர்ப்பவாதியா, பதவியினால் இழுத்துச் செல்லப்படக்கூடியவனா? என்பதை நல்லாகவே கவனிக்க வேண்டும். பெரும் இலட்சியங்களுக்காக வாழும் ஒரு தனி மனிதன் தனிமனித நிலையிலிருந்து தலைவனாக உயர்கிறான்.

அவன் கூறும் யோசனை, காட்டும் பாதை என்பன சரியானவை என்று சமூகம் நம்புகிறது. தங்களையே தியாகம் செய்யக் கூடிய உண்மையான தொண்டர்கள் கூட்டம் அவனைப் பின் தொடர்கின்றது. ஒரு ஊரோ நாடோ சமுதாயமோ இருக்கின்ற நிலையில் அவதிப்பட்டு, சோதனையில் சிக்குண்டு விடிவுகள் தெரியாதா? எமக்குரிய தலைமைத்துவம் வராதா? என ஏங்கிக் கொண்டிருக்கும் காலச் சூழ்நிலையில் உதயமாகும் ஒரு உண்மையான இயக்கம் தான் நல்ல தலைவன். என்ன புரிஞ்சுதா......?"

எல்லோரும் ஒருமித்து அவரது கூற்றுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்ததும் வெறுப்படைந்த பிரச்சனைக்குரிய இளைஞர் கோஷ்டியின் தலைவன் எவ்விதமான வார்த்தைகளையும் கூறாது மௌனமாக அவ்விடத்தை விட்டகன்றான். அவனுடன் இணைந்து செயற்பட்ட தொண்டர்களில் மிகக் குறைந்தவர்களே அவனைப் பின் தொடர்ந்து கொண்டிருந்தனர்.

"முதல்ல பத்துப் பெரியவங்களைத் தெரிவு செய்து தமிழ் பகுதிக்கு சமாதானம் சொல்ல அனுப்பி வையுங்க. நாம ஒண்ணா வாழ அவங்க வழி செய்வாங்க. இளைஞர்களில் சிலர் பத்துகிற டயரையெல்லாம் எடுத்து றோட்டைச் சுத்தப் படுத்துங்க. வியாபாரிங்க எல்லாம் கடைகளை உடனடியாகத் திறந்து வியாபாரத்தைக் கவனியுங்க. முடிஞ்சா வாகனம் ஓடக்கூடியவங்க வழக்கம் போல தங்கட ரூட்படி தொழிலைக் கவனியுங்க." அவர் கட்டளையிட்டு முடிப்ப தற்கு முன்னரே சரியென்று கூட சொல்வதற்கு நேரத்தையொதுக்காது உடன் செயற்பாடுகளில் இறங்கி தமது உண்மையான தலைமைத் துவத்திற்கு முழுமையான மதிப்பும் மரியாதையும் கொடுத்தனர். அவர்களுக்கென்று ஒரு உண்மைத் தலைமைத்துவம் கிடைத்துவிட்டது.

(யாவும் கற்பனைதான்)

## பெற முடியாத காதல்




அவள் கேட்டாள்,
"நான் உன்னைக் காதலிக்க வேண்டுமா?"
வளைந்து, நெளிந்து அவன் பதில் சொன்னான்.
"ஆமாம்."
"எனக்கு யோசிக்க அவகாசம் கொடு."
"எடுத்துக்கொள்."
"உன்னை ஒன்று கேட்கலாமா?"
"கேள்."
"நான் உன்னை ஏமாற்றினால்?"
"மன்னித்து விடுவேன்."
"உன்னைப் பாடச் சொன்னால்?"
"பாடுவேன்."
"உன் நண்பனை இழந்துவிடச் சொன்னால்?"
"இழந்து விடுவேன்."
"சரி, யாரையாவது கொல்லச் சொன்னால்?"
"கொன்று விடுவேன்."
"உன்னை சாகச் சொன்னால்.."
"செத்து மடிவேன்."
அவள் சிரித்தாள்.
"உனக்கு வேண்டியது என் காதல் தானே?"
அவள் கேட்டவுடன் அவன் அவசரமாய்,
"ஆமாம் அதுதான்."
"ஆனால் அதை நீ பெறவே முடியாது."
அவன் முகம் வாடிவிட்டது. குரலில் பலவீனம் பளிச்சிட கேட்டான்,
"ஏன்?"
அவள் தீர்க்கமாய் சொன்னாள்.
"அடிமையை ஒருபோதும் காதலிக்க மாட்டேன்."

-பசுமைக்குமார்-

## புத்தாண்டுக் க(டி)தை

### "உண்மையிலேயே உனக்கு என்னைப் புடிச்சிருந்தா, புதுவருஷத்தன்னைக்கு நீ ஏதாச்சும் எனக்கு வாங்கித் தரணும்..... தருவியா?"

-எம்.சுரேஷ்-



# புத்தாண்டுப் புதுமை

"ஏதாவது வித்தியாசமா செஞ்சா கணுமே..... ஆ.....சுவர்ணா.... அடியே சுவர்ணா...."

"ஏங்க இப்பிடிக் கத்தித் தொலைக்கிறீங்க?"

"சுவர்ணா! புதுவருஷம் வருதுடி!"

"பாவங்க அதுபாட்டில வந்துட்டுப் போகட்டும்."

"ஐயோ! காதலிச்ச பைத்தியமும் சரியில்ல. கட்டிக்கிட்ட பைத்தியமும் சரியில்ல."

"சரிசரி ஒப்பாரி வைச்சது போதும். சொல்லுறதை சொல்லித் தொலைங்க..."

"ஆகா! என்னே பதிபக்தி...சுவர்ணா! புதுவருஷத்துக்கு ஏதாவது வித்தியாசமா செய்யணும்டி."

"சீ....போங்க...எனக்கு வெக்கமா இருக்கு!"

"அடிப்பாவி! ஏண்டி இப்பிடித் தப்புத்தப்பா யோசிக்கிறே.... நான் வித்தியாசமா செய்யணும்னு சொன்னது... என்னடி வயித்த வலியா?"

"இல்லையே..."

"அப்ப 'ம்'ன்னு பெரிசா கத்தின?"

"பொதுவாகத்தாங்க 'ம்'சொன்னேன்."

"மெதுவா சொன்னதே அவ்வளவு சத்தமா?... சரிகேளு..... நம்ம பக்கத்துவீட்டு முனியாண்டி புதுவருஷத்துக்கு என்ன பண்ணியிருக்கான் தெரியுமா? தன்னோட குடுமியை ஒட்ட வெட்டி, மைக்கல் ஜெக்சன் ஸ்டைலுக்கு முடிமுதல் அடிவரை எல்லாத்தையுமே மாத்திட்டான்......பாவம் அவன் பொஞ்சாதியை மட்டும் மாத்தவே முடியல்ல..... பொண்டாட்டி பழசு, வாழ்க்கை புதுசு..... ஒவ்வொரு புது வருஷத்துக்கும் நம்ம முனியாண்டி மாதிரி ஏதாவது வித்தியாசமா செய்யணும்னு மனசு துடிக்குது....."

"மனசுதானே துடிக்குது? கவலைப் படாதீங்க... கொஞ்சநேரம் துடிச்சிட்டு அதுபாட்டில நின்னு போயிடும்!"

"அடிப்பாவி! விட்டா கழுத்த நெரிச்சே கொண்ணுடுவ போலிருக்கே...ஐயோ.... இந்த அனியாயத்தை கேக்க யாருமே இல்லையா...?

"என்னை மன்னிச்சிடுங்க, ஒங்க மனசு ஆறுதலடையத்தாங்க அப்பிடிச் சொன்னேன்."

"ஆறுதலடையச் சொல்லுற வார்த்தை யாடி அது?"

"சரி சரி இந்தாங்க, எங்க அண்ணன் சிங்கப்பூர் போயிட்டு வர்றப்போ வாங்கி வந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்.... எல்லாமே வித்தியாசமான படங்கள். இதில ஒண்ணை உங்க நண்பன் முனியாண்டிக்குக் கொடுங்க..."

"எங்க கொண்டுவா பாப்போம்.....ம்..... "சாந்தியும், சமாதானமும் உண்டாக வேண்டும்" ....தூ....இந்த வசனத்தையே பத்துவருஷத்துக்கு மேல எழுதி எழுதி வாழ்க்கையே வெறுத்துப் போச்சு... சாந்தி உண்டாகினாலும், சமாதானம் எப்பிடி உண்டாகும்? (முணுமுணுக்கிறார்)

"யாருங்க சாந்தி?"

"நம்ம முனியம்மாவோட மூத்த பொண்ணுதான்...சுவர்ணா! உன்னைப் போன்ற ஒரு அறிவுக்கடலை வாழ்க்கைத் துணையா அடைஞ்சதை நெனைச்சுப் பெருமைப் படுறேண்டி."

"அத்தான்! இதுக்குப் போய் எங்கால்ல விழுறீங்களே!...வேண்டாம் அத்தான்...."

"அடியே! கீழ விழுந்த "வாழ்த்தை" எடுக்கத்தாண்டி குனிஞ்சேன்.... ஏண்டி இப்பிடி என்னைக் கொல்ற?"

"ஹி...ஹி... என்னை மன்னிச்சிடுங்க அத்தான்."

"ஒரே ஒரு பொஞ்சாதி இருக்கிறதால எப்படியும் மன்னிச்சுத்தானே ஆகணும்!..... இங்க கிட்டவா (காதில் ஏதோ குசுகுசுத்தார் சிவநாதன். சுவர்ணாவின் கண்கள் ஒளிவீசியது)

"ஆகா! சூப்பர் ஐடியாங்க! நீங்க சொன்னபடியே செஞ்சு அசத்திடுறேன்... அத்தான் உங்கள எனக்கு ரொம்பப் புடிச்சிருக்கு."

"உண்மையிலேயே உனக்கு என்னைப் பிடிச்சிருந்தா புதுவருஷத்தன்னைக்கு நீ ஏதாச்சும் எனக்கு வாங்கித் தரணும்..... தருவியா?

"கண்டிப்பா தருவேன்."

(லவ் பண்ணிய காலத்தில் ஓடுவதைப் போல் துள்ளிக் குதித்து ஓடினாள் சுவர்ணா! சிவநாதன் பெருமூச்சுவிட்டார்.)

• • •

மறுநாள் புத்தாண்டு....காலையிலேயே குளித்து, முழுகி புத்தாடைக்குள் புகுந்து கொண்ட சிவநாதனுக்கு ஏகப்பட்ட சந்தோஷம். நண்பன் முனியாண்டியை விட வித்தியாசமாய் ஏதோ செய்துவிட்ட திருப்தி.

"புதியவானம், புதிய பூமி, எங்கும் பனிமழை பொழிகிறது...." பாடலை தேவையில்லாமல் முணுமுணுத்துக் கொண்டார். சுவர்ணா தட்டுநிறைய அடுக்கிக் கொடுத்த பலகாரங்களை எடுத்து முதுகிற்குப் பின்னால் மறைத்தபடி முனியாண்டி வீட்டை முற்றுகையிட்டு, கதவைத் தட்டினார்.

கதவைத் திறந்து வெளியே எட்டிப்பார்த்த முனியாண்டி கிட்டத்தட்ட 25 பற்கள் தெரியும்படி சிரித்து, மைக்கல் ஜெக்சனை ஞாபகப்படுத்தினான்.

"என்னடா! வித்தியாசமா ஒண்ணையும் காணல்லியே...?"

"வித்தியாசமா? நெறைய இருக்கு, மொதல்ல புத்தாண்டு... ஆ... கால மிதிக்காதடா... வாழ்த்துக்கள்."

"ஹி..ஹி...ஹி.... Very happy New Year

"டேய்! முனியா...ஒனக்குப் புதுவருஷ வாழ்த்துக்கள் வந்திச்சா?"

"ஆமா வந்திச்சு..."

"அதில அமைதி உண்டாகட்டும், சபீட்சம் உண்டாகட்டும்'ன்னு வசன மெல்லாம் எழுதியிருந்திச்சா?"

"ஹி... ஹி... ஆமாடா!"

"ஆனா நீ எண்ணைக்காவது சமாதானத்தையும், அமைதியையும் தொட்டு அனுபவிச்சிருக்கிறியா?"

"இல்லையேடா..."

"அங்கதான் நிற்கிறான் சிவநாதன்! இன்னிக்கு நீ அமைதியைத் தின்னு, சமாதானத்தைக் குடிக்கப் போறே! ஆ....ஆ...."

"நீ....நீ....என்னடா சொல்ற?"

"இதோ!... டிங்டடிங்..." சிவநாதன் முதுகிற்குப் பின்னால் மறைத்து வைத்திருந்த பலகாரத் தட்டைக் காட்டியதும் முனியாண்டி ஆச்சரியத்தால் தடுமாறினான். அவன் என்றுமே பார்த்திராத வர்ணங்களில், புதிய டிசைன்களில், கலர்கலராய் பலகாரங்கள்...

"ஹி.....ஹி.....எல்லாமே என்னோட கண்டுபிடிப்புத்தான்... இதோ இது என்ன தெரியுதா? இதுதான் புத்தாண்டு பூரி, இது அமைதி அல்வா....."

"இங்கபாருடா... இதுதான் ஜனநாயக ஜாங்கிரி! சுபீட்ச சுண்டல், நிம்மதி முறுக்கு, இதோ இந்த சட்டியில இருக்கிறது என்னென்று தெரியுதா?"

"ம்... தெரியல்லியே".

"இதுதாண்டா சமாதான சாம்பார்... ஹி...ஹி....ஹி...." (சந்தோஷ மிகுதியால் "அமைதியை" ....ச்சீ.... "அமைதி அல்வாவை" எடுத்து ஒரு கடிகடித்தான் முனியாண்டி!)

---

## சிறுகதை

# நரகத்திற்குப் போ

அவனை அவனாக்கும் ஜேசுதாஸின் கானம் அவனது காதுகளில் விழுந்து கொண்டிருந்தாலும் மனம் என்னவோ இந்த நாட்டைவிட்டுப் போவதற்கான சந்தர்ப்பத்தைத் தான் வலை போட்டுத் தேடிக்கொண்டிருந்தது. மனைவியை விட இனிய தோழமையுள்ள அந்தக்குரல் கூடக் கசந்தது.


அவசரம் அவசரமாக உடுப்புக்களை மாட்டியவன் ரேப் ரெக்கோடரை அழுத்தி மூடிவிட்டு வீட்டை விட்டு வெளியில் வந்தான். 'ஹௌஸ் போய்' கதவை மூடிக்கொண்டான்.

குளிரூட்டப்பட்ட 'ஜக்குவார்' அவனுக்காகக் காத்திருந்தது. அவனுடைய 'ப்ரீஃப் கேஸை' வாங்கி காரினுள் வைத்தான் 'பிலிப்பினோ' சாரதி. தானே முன்கதவைத் திறந்து காரில் ஏறிக்கொண்டவன் ரேடியோவைத் திருகினான். எங்கேயோ மிக முருதுவாக ஒரு 'ஸ்பனிஷ்' பாடல் பாடிக்கொண்டிருந்தது. தலையாட்டி ரசித்தான்... சத்தங்கள் யாவும் இசைதானே... கண்ட இசையையும் கேட்பதால் பல இசையமைப்பாளர்கள் தன்னிடம் மாட்டிக்கொள்கிறார்களே என அவர்களுக்காகத்தான் வெட்கப்பட்டான்.

வழவழப்பான அந்தச் சாலையில் ஓட ஆரம்பித்த கார் மெல்ல மெல்ல ஆர்முடுகி அவனது கந்தோரின் முன்பாக வந்து நின்றது. காரியாலய சுற்றாடலில் உள்ள புறதரைக்கு நீர் வார்த்துக் கொண்டிருந்த பியூன் ஓடிவந்து கதவைத் திறந்துவிட்டான். இறங்கி நடந்தவன் எதிர்வந்த 'குட்மோனிங்' எல்லாவற்றுக்கும் பதில் கொடுத்தான். தனது அறையின் உள்ளே வந்து சுழல் நாற்காலியில் மெத்தென்று அமர்ந்து கொண்டான். ஏ.சி. சுகம் வருடிக் கொடுத்தது. அனுபவிக்க முடியவில்லை. மனதில் அவ்வளவு சுமை.

'இவ்வளவு சுகங்களையும் கைக்கொள்ளாத அளவு சம்பளத்தையும் கௌரவத்தையும் விட்டு மனம் எனது நாட்டை நோக்கியே ஓடுகிறதே- ஏன்? எனக்கு ஏன் இவை எதுவும் பிடிக்கவில்லை? மூன்று வருடங்களாக வராத இந்த 'ஹோம் சிக்' இப்போது இந்த ஒரு மாதமாக என்னைப் பிடித்து வாட்டுகிறதே.'

'மனைவி, மக்கள், உறவினர்களை விட்டு இங்கு வாழ்வது தங்கக் கூண்டில் வாழ்வது போலல்லவா இருக்கிறது. சீ என்ன இயந்திரத்தனமான வாழ்க்கை? கார்க்கதவைத் திறக்க ஒருத்தன்.... காரோட்ட ஒருத்தன்.... சமைக்க ஒருத்தன்.... படுக்கையைத் தட்டிப்போட ஒருத்தன்... 'ரோபோ'க்கள் மாதிரி. நான் தலைமை ரோபோவோ?'




அஸ்வதி...

நெருங்கிக் கொண்டு பஸ்ஸில் பயணம் செய்யும் போது கசங்கி இரண்டாகி வீட்டுக்கு வந்து படுக்கையில் விழும் போதும் கிடைத்த சுகம், கிணற்றில் அள்ளி தலையில் ஊற்றும் போது கிடைத்த சுகம், அதிகாலையில் எழும்பி திருப்பள்ளியெழுச்சி பாடிய போது கிடைத்த சுகம், இது போல இன்னும் பலவற்றில் கிடைத்த சுகங்களும் இப்போது கிடைக்கவில்லையே! மேலங்கியைக் கழற்றினால் குளிர் உடலைச் சுருக்குகிறது. சாரம் உடுத்து 'ஹாயாக' நிலத்தில் உட்கார முடியவில்லை. இந்தத் தங்கக் கூண்டிலிருந்து எனக்கு விடுதலை வேண்டும். இந்த சௌகர்யங்கள் எதுவும் எனக்கு வேண்டாம். எனது மனைவி வேண்டும், எனது பிள்ளைகள் வேண்டும். எனது மண்ணில் கால்பதித்து நான் நடக்க வேண்டும்.'

'மின் வெட்டு, நீர் வெட்டு, ஊரடங்குச்சட்டம், குண்டுவீச்சு போன்ற கசப்புணர்வுகளிலிருந்தாலும் அதில் உள்ள'த்ரில்' இங்கு இல்லை.'

கதவைத் திறந்து கொண்டு பியூன் நுழைந்தான்.

"சேர், உங்களைப் பெரியவர் கூப்பிடுகிறார்."

பியூனின் வாக்கியம் முடிவதற்கு முன்பாகவே பெரியவரின் அறையில் நின்றான் அவன்.

நல்ல கலையுணர்வுள்ள ஒருவனால் அந்த அறை அலங்கரிக்கப்பட்டிருந்தது. பெரியவரின் மேசையின் பின்னிருந்த கண்ணாடி அலுமாரியில் அந்தக் கம்பனி பெற்றுக் கொண்ட விருதுகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஒளியமைப்பும் உள்ளகத் தாவரங்களும் மேலும் அழகைக் கொடுத்தன. குறுந்தாடி வட்டக் கண்ணாடியுடனிருந்தார் பெரியவர்.

"குட்மோர்னிங் சேர்."

"மோனிங், பீ சீற்றட் மிஸ்டர் நரேன்."

இருந்தான்.

"உங்களுக்கு என்ன நடந்தது நரேன்? இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுவிட்டீர்களே. 'ஒப்பரேஷன்ஸ் மனேஜர்' என்பது என்ன சாதாரண பதவியா? உங்களுக்கு என்ன குறை? நான்தான் எல்லா வசதிகளையும் செய்து தந்திருக்கிறேனே. எதற்காக வேலையை ராஜினாமா செய்கிறீர்கள்?" பெரியவரிடமிருந்து வந்ததால் ஆங்கிலம் மேலும் அழகு பெற்றது.

"நான் எனது மனைவியைப் பார்க்க வேண்டும், குழந்தைகளைப் பார்க்க வேண்டும். எனது நாட்டுக்குப் போவதாக முடிவெடுத்துவிட்டேன். என்னை யாராலும் தடுக்க முடியாது."

"நல்லது நரேன். அதற்கு ராஜினாமா வழியல்ல. ஆறுமாதம் சம்பளத்துடன் லீவு தருகிறேன். போய் வாருங்கள். அல்லது மனைவியையும் பிள்ளைகளையும் இங்கு அழையுங்கள். எல்லோருக்கும் ஒரு மாறுதலாயிருக்கும்."

"நோ...நான் எனது நாட்டுக்குப் போக வேண்டும்."

"நான் சொல்வது புரியவில்லையா நரேன்? கொஞ்சம் யோசித்து முடிவெடுக்கலாம். எதனையும் இரண்டு தடவைகளுக்கு மேல் யோசித்து முடிவெடுக்கக் கற்றுக் கொள்ளுங்கள். உணர்ச்சி வசப்படாதீர்கள்."

"இரண்டு தடவைகளல்ல, இரண்டாயிரம் தடவைகள் யோசித்துவிட்டேன். நான் எனது நாட்டுக்குப் போக வேண்டும்.

"அங்கு நடக்கும் அவலங்களைத் தாங்க முடியாது. அங்கிருந்து அனேகர் வெளிநாடுகள் நோக்கி ஓட, இவ்வளவு பெரிய பதவியில் கௌரவமாக இருக்க முடியாது நீங்கள்....."

"நான் எனது நாட்டுக்குப் போக வேண்டும்."

"நீங்கள் போக வேண்டிய காரணத்தைச் சொன்னீர்கள். நான் மிகவும் நிச்சயமான. மாற்று வழிகளைச் சொன்னேன். ஏற்காது அடம்பிடிக்கிறீர்களே நரேன்."

இருவருக்குமிடையில் உபதேசமும் அதனை அலட்சியம் செய்து பிடிவாதமாயிருப்பதுவும் தொடர்ந்தது. மறுப்பே தெரிவிக்க முடியாத ஒரு காரணத்தை மனம் தேடிக்கொண்டிருந்தது நரேனின் மனம்.

"இங்கிருக்கும் எந்த வசதியும் உங்கள் நாட்டில் இல்லையே நரேன்."

"அப்படியென்றில்லை. அங்கு மின்வெட்டு உண்டு. இங்கு இல்லை. அங்கு நீர் வெட்டு உண்டு. இங்கு இல்லை. அங்கு ஊரடங்குச் சட்டமுண்டு. இங்கு இல்லை. அவலமாயிருந்தாலும் அதில் உள்ள சுகம் இங்கு இல்லை."

"நான் எனது நாட்டுக்குப் போக வேண்டும்."

"நான் எனது நாட்டுக்குப் போக வேண்டும்." உணர்ச்சிவசப் பட்டான் நரேன்.

பெரியவர் பொறுமையை இழந்தார்.

"ஓல் ரைட்... ஓல்ரைட்...கோ ரு ஹெல்."

நரேனுக்கு வாய்விட்டுச் சிரிக்க வேண்டும் போல் இருந்தது. தனது அறையை நோக்கி நடந்தான்.

(யாவும் கற்பனை)

---

## சிந்தியா பதில்கள்

ரஜனி அரசியலுக்கு வரப்போவதாக முன்பு பேசப்பட்டது. இப்போது பேச்சையே காண வில்லையே ஏன்?

கு.யாசீர்-புத்தளம்.

இப்போது தமிழ்நாட்டு அரசியலில் கலைஞர்-வை.கோ மோதல் சூடுபிடித்திருக்கிறது. அதுவே பத்திரிகைகளுக்குப் போதுமான அரசியல் செய்தியாக இருப்பதால் ரஜனி விடயத்தை மறந்து விட்டார்கள்.

•

புலிகள் இயக்கத்தினர்தான் பயங்கரவாதப் பிரச்சனையை இனப்பிரச்சனை என்று மாற்றுவதாகச் சொல்கிறார்களே?

என்.பாலச்சந்திரன்-கொழும்பு-11.

அப்படியானால் புலிகள் அமைப்பு உருவாக முன்னர் இருந்ததே அது என்ன பிரச்சனை? அதுவும் பயங்கரவாதப் பிரச்சனை என்றால் அதனை இனப்பிரச்சனை, பிரச்சனை என்று கூறிய தமிழரசுக் கட்சியோடு ஐ.தே. கட்சி கூட்டுச் சேர்ந்திருந்ததே. அமைச்சர் பதவியும் கொடுத்ததே. அது எப்படி? என்று கேள்வி வருகிறதல்லவா.

•

இனவாதம் கக்கும் பத்திரிகைகள் பற்றி என்ன சொல்கிறீர்கள் சிந்தியா?

நா.மகேஸ்வரன்-பாண்டிருப்பு.

பிணம் சுமந்தால் பணம் வரும் என்றால் புதைத்து நாறும் பிணத்தையும் தோளில் தூக்கிவர ஆட்கள் இருக்கிறார்கள் என்று தெரிகிறது.

•

மாத்தையா இறந்து விட்டாராமே?

எல்.நசுருதீன்-கல்முனை.

அப்படியா? இறுதிச் சடங்கு எங்கே நடந்தது என்றும் சொல்லாமல் விட்டர்களே. அந்தளவில் பரவாயில்லை.

•

புலிகளுக்குள் உட்பூசல் என்பது உண்மையா?

சா.நாகேஸ்வரி-கொழும்பு-06.

உண்மைதான். சமீபத்திய பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றில் திரு.பாலசிங்கம் பூசலை பூசி மெழுக முயன்றும் பூசல் தெரியத்தான் செய்தது.

•

புத்தாண்டில் போர் நிறுத்தம் வருமா?

பெ.தியாகலிங்கம்-திருகோணமலை.

**அதிக சந்தேகம் கொள்வது ஆண்களா? பெண்களா?**

அப்படியொரு நினைப்பே வேண்டாம். எதிர்வரும் சமீப காலங்களில் அது பற்றிய பேச்சுக்கே இடமில்லைப் போல் இருக்கிறது.

•

தமிழக அரசியல் நிலவரம் இப்போது எப்படியிருக்கிறது?

வி.ஜவாஹர்-மட்டக்களப்பு.

தி.மு.க உட்பூசலும், கலைஞரின் வெளிப்படையான பலவீனமும், குடும்ப அரசியலும் ஜெயலலிதாவுக்கு நிம்மதி கொடுத்திருக்கிறது. பாவம் கலைஞர், வை.கோ வை வெளியேற்றி விட்டு அதற்கு ஆயிரம் காரணம் சொல்லி தன் பலத்தில் பாதியைக் குறைத்துக் கொள்கிறார்.

•

திருடா-திருடா படம் எப்படிப் போகிறது?

மு.இலியாஸ்- நீர்கொழும்பு.

எதிர்பார்க்கப்பட்டளவுக்கு வெளியான பின்னர் பேசப்படவில்லை. என்றாலும் தோல்வியில்லை.

•

இன்றைய அரசியல் போக்கு?

வி.எம். நிலாம்-பொலன்னறுவை.

ஆரோக்கியமாக இல்லை.

•

அதிகம் சந்தேகம் கொள்வது ஆண்களா, பெண்களா?

செல்வி நிர்மலா முருகையா-பண்டாரவளை.

அது ஒரு பொது வியாதி. அதற்காக எல்லாவற்றையும், எல்லோரையும் நம்பவேண்டும் என்று அர்த்தமல்ல.

•

கடவுளுக்கு ஒரு கடிதம் எழுதுவதாயின் என்ன விடயத்தைக் குறிப்பிடுவீர்கள்?

எம்.நிஸா முஸம்மில்-தியத்தலாவை.

இங்குள்ள நாட்டு நிலவரத்தை குறிப்பிடலாம். ஆனால் கடவுளையும் ஏன் கண்ணீர்விட வைக்க வேண்டும்? கடிதம் வேண்டாமே.

•

சினிமாப் பாடலில் உங்களுக்கு பிடித்த ஒரு பாடலின் வரிகள்?

வி.சந்திரிக்கா-பண்டாரவளை.

"தோல்வி நிலையென நினைத்தால் மனிதன் வாழ்வை நினைக்கலாமா?"

•

தீபாவளிப் படங்களில் வசூலை குவிக்கும் தமிழ் படம் எது?

எ.ஜோச்-வவுனியா.

பொலிஸ் லாக்கப், கிழக்குச் சீமையிலே என்பது தகவல்.

•

**தருவது ரசிகன்**

**இலக்கிய நயம்**



நந்திவர்மன் சிரித்தான். வாய்விட்டுச் சிரித்தான். தூரத்தில் யாராவது நின்று பார்த்திருந்தால் நந்திவர்மனுக்கு பைத்தியமோ என்று சந்தேகித்திருப்பார்கள். ஏனெனில் நந்திவர்மன் ஆற்றங்கரையருகே இருந்தான். அருகில் யாரும் இல்லை.

நந்திவர்மன் நேற்று இதே இடத்தில் சங்கவியோடு சரசமாடிக் கொண்டிருந்தான். அதையே இப்போது நினைத்தான். நினைத்தபோது நெஞ்சு முழுக்க மகிழ்ச்சி நிரம்பக் கண்டான்.

"சங்கவி உனக்கொரு விசயம் தெரியுமோ?"

"என்ன விசயம்?"

# நேற்று நடந்தது இன்றும் இனித்தது!

அமுதைப் பொழியும் குரலில் இளவரசி சங்கவி வினா தொடுத்தாள். ஏற்கனவே வளைந்திருந்து, அம்பிருந்தால் எடுத்து தொடுத்துவிடலாம் என்று எண்ணவைக்கும் சங்கவியின் விற்புருவங்கள் வினா தொடுத்தபோது உயர்ந்து வளைந்த அழகை நந்திவர்மன் இரசித்தான். மனதால் படம் எடுத்து பத்திரப்படுத்திக் கொண்டான்.

"பெண்களின் இடையிருக்கிறதே இடை"

"என்ன?"

"சொல்லி முடிக்கும் முன்னரே கோபப்பட்டால் எப்படி?"

ஏதோ விஷமமாய்த்தான் சொல்லப் போகிறான் என்று சங்கவி நினைத்தாள். விஷமம் அறிய உள்ளே மனது விரும்பியது. வெளியே விரும்பாதது போல முகத்திலே பொய்க் கோபம் அரும்பியது.

"விஷமம் இல்லாத விசயம் என்றால் சொல்லுங்கள்."

"விஷமம் உள்ள விசயம் என்றால் என்ன செய்வாயாம்?"

"நீங்கள் தனித்திருந்து பேசிக் கொண்டிருக்கலாம். நான் அரண்மனைக்குச் சென்றுவிடுவேன்."

"சென்றுவிடுவேன். சென்றுவிடுவேன். வந்தவுடனேயே இந்த வார்த்தையோடுதான் பேசவே ஆரம்பிக்கிறாய். அதைச் சொல்லியே என்னைக் கொன்று விடுகிறாய்"

நந்திவர்மன் சலித்துக்கொண்டான். நாழியாகிறதே என்ற தவிப்போடு, அரண்மனையில் தேடுவார்களே என்ற பயத்தோடு சங்கவி வானத்தை நிமிர்ந்து பார்த்தாள். நாழியாகிறதோ என்றுதான் பார்க்கிறாள் என்பது புரிந்து நந்திவர்மன் மேலும் சலித்தான்.

"என்ன பார்க்கிறாய் சங்கவி?"

சொன்னால் கோபிப்பான். தெரியும். எனவே பொய் சொன்னாள்.

"இந்த பரந்த வானத்தில் சுற்றித் திரிய சிறகிருந்தால் எப்படியிருக்கும். என்று யோசித்தேன். பார்த்தேன்."

"சிறகு வேண்டும் என்று நீ அசைப் படுகிறாய். என் சிறகுகளை மட்டும் ஏன் அடிக்கடி வெட்டிப் போடுகிறாய்?"

"என்ன? நான் வெட்டிப் போடுகிறேனா?"

ஆச்சரியம் தொனித்த குரலில் கேள்வி வந்தது.

"ஆமாம் சங்கவி! நீ அருகில் இருக்கும் போது போர் மறந்துவிடுகிறது. யாரோ சில மன்னர்களுக்காக களத்திலே உருண்டு கொண்டிருக்கும் ஏதுமறியா அப்பாவிகளின் தலைகள், பாயும் குருதி, எதுபற்றியும் கவலைப்படாமல் அரசியல் சதுரங்கத்தில் காய்களை நகர்த்தி, வெட்டி, பதவியே குறி என்று ஓடிக்கொண்டிருக்கும் மகுடாதிபதிகளின் எண்ணக்குதிரைகள், அந்தக் குதிரைகள் மீது எனக்கு ஏற்பட்டு வரும் வெறுப்பு, விடுபடமுடியாமல் நானும் ஒரு காயாக நகர்த்தப்படுவதால் ஏற்படும் வேதனை, விரக்தி எல்லாமே மறந்து விடுகிறது சங்கவி!"

நீளமாய் பேசினான். உள்ளம் திறந்து உண்மை பேசினான். பகிர்ந்து கொள்ள இடம் கிடைத்த திருப்தியில், தன் சோகம் இறக்கிவைத்து மனது இளைப்பாற இடம் கிடைத்த சந்தோசத்தில் குரல் கனக்கப் பேசினான்.

"ஆனால் சங்கவி, நீ சென்றுவிடுவேன் என்று அடிக்கடி நினைவூட்டும் போது நான் சிறகுகள் வெட்டப்பட்டு மீண்டும் தரையில் விழுந்துவிடுகிறேன். இரத்தம் படிந்த, சூதும், வாதும், கபடமும், பொய்யும் நிறைந்த புழுதியில் விழுந்துவிடுகிறேன்."

நந்திவர்மனின் இதயசோகம் சங்கவிக்கும் புரிந்தது. பேச்சின் திசையை மாற்ற நினைத்தாள்.

"ஏதோ கடையோ இடையோ என்று சொன்னீர்கள்!"

நந்திவர்மனின் இதயபாரம் இறங்கி மனது இலவம் பஞ்சுபோல இலேசானது. மீண்டும் கேலிசெய்து பேசும் மனநிலை வந்தது.

"பெண்களின் இடையிலே ஒரு நரம்பு இருக்கிறதாம். அதை தொட்டுப் பார்த்தால் காதல் பிரிவில் முடியுமோ வெற்றிக் களிப்பில் தொடருமோ என்று தெரியுமாம்."

"யார் சொன்னது? அப்படி ஒரு நரம்பு இருப்பதாய் தெரியவில்லையே?"

"போடி பைத்தியக்காரி. இதெல்லாம் பெண்களுக்குத் தெரியாது. ஆண்களுக்கு மட்டுமே தெரிந்த இரகசியம். காதல் விவகாரங்களில் கை தேர்ந்த ஒரு யோகிதான் எனக்குச் சொன்னார். நம்பு."

"சரி இப்போது அதற்கென்ன?"

"அப்படிக்கேள். சொல்கிறேன். நமது காதலின் முடிவு பற்றி அறிய ஆவல். அனுமதி வேண்டும்!"

புரிந்துவிட்டது. சுற்றிவளைத்து எங்கே வருகிறான் என்று தெரிந்துவிட்டது. தெரியாதது போல கேள்வி வீசினாள்.

"என்ன அனுமதி?"

நந்திவர்மன் அப்பாவிபோல முகத்தை வைத்துக்கொண்டு சொன்னான்.

"உன் இடையில் தொட்டுப்பார்க்க வேண்டும். அங்கே என்ன நிலவரம் என்று அறிய வேண்டும்."

சங்கவிக்கும் அவன் அணைப்பு வேண்டும் போல் இருந்தது. அவன் கரம் இடையிலே வந்து என்ன செய்யப் போகிறது என்று அறிய வேண்டும் போல் இருந்தது. ஆயினும் மனதின் தவிப்பை வெட்கம் தடுக்க, வலிய வரவழைத்த பொய்க்கோபம் குரலில் காட்டினாள்.

"ஆளைப்பார்! அந்த ஆராய்ச்சி எல்லாம் வேண்டாம்."

"ஏன் வேண்டாம்?"

இப்போது நந்திவர்மன் அனுமதிக்காக காத்திருக்கவில்லை. நேசம் தந்த உரிமையோடு உள்ளே ஆசை விதைத்த ஆவேசத்தோடு சங்கவியின் இடையில் கரம் பதித்தான்.

சங்கவி தடுப்பது போல நடித்தாள். அவன் கையை விலக்க முயல்வது போல மேலும் தன் இடையில் அழுத்தும் படியாய் பார்த்துக்கொண்டாள்.

"என்ன இன்னும் ஆராய்ச்சி முடியவில்லையாக்கும்."

"இன்னும் ஒரு ஆராய்ச்சி பாக்கியிருக்கிறது."

"என்ன ஆராய்ச்சி?"

"நரம்பைக் கண்டுவிட்டேன். இது மேலே சென்று எங்கே முடிகிறது என்று பார்க்க வேண்டும். பொறு சங்கவி!"

நந்திவர்மன் கரம் இடையின் வளைவுகளில் புரண்டு, மேலே உயர்ந்து கோபுர கலசங்களாய் நிமிர்ந்திருந்த அழகுகளில் அழுத்தியது.

"போதும் ஆராய்ச்சி. ஆளைப்பார்! யோகி சொன்னாராம் யோகி!"

சங்கவி தன் வளைக்கரங்களின் விரல்கள் மடக்கி நந்திவர்மனின் மார்பில் குத்தினாள். பின் புள்ளிமானாய் துள்ளி எழுந்து, அரண்மனை நோக்கி ஓடினாள்.

நேற்று நடந்தது அந்தச் சரசம். இப்போது நினைத்த போதும் நந்திவர்மனின் மனது துள்ளியது. தான் விரித்த ஆராய்ச்சி வலையை நினைத்த போதுதான் நந்திவர்மன் சிரிக்கத் தொடங்கினான்.

அவன் சிரித்துக் கொண்டிருக்கட்டும். நாம் திருவள்ளுவரிடம் இதற்கு ஒரு குறள் கேட்டுப்பார்க்கலாமா? அட.... தயாராகவே வைத்திருக்கிறார்.

**"உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்**
**கள்ளுக்கில் காமத்திற்கு உண்டு"**

அதிகாரம் 129
குறள் 1281

## குறுக்கெழுத்துப் போட்டி இல–31

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | ■ | 3 | 4 |
| | | 5 | 6 | | | |
| 7 | | | | ■ | | |
| | ■ | 8 | | | | |
| ■ | 9 | | | | ■ | |
| 10 | ■ | | ■ | 11 | | ■ |
| 12 | | | | ■ | 13 | |

### இடமிருந்து வலம்

1. இந்து ஆலயங்களில் பாடப்படுவது.
5. மிகச் சிறந்த மனிதர்களையும் இப்படிச் சொல்வதுண்டு.
7. இந்து,பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் இறந்துவிட்டால் இதுதான் நடக்கும்.
8. இராமாயணத்தில் வரும் சூர்ப்பனகையை இப்படியும் சொல்லலாம். (குழம்பியுள்ளது)
9. மருந்திற்கும் பயன்படும் பூ.
11. இதற்கென்றே தனி அலங்கார நிலையங்கள் இங்கு ஏற்பட்டு விட்டது.
12. இது விவசாயிகளுக்கு உதவும்.
13. இதை வதைக்கக் கூடாதென்று காந்தி சொல்லியிருக்கிறார்.

### மேலிருந்து கீழ்

1. கிழக்கிலும், வவுனியாவிலும் இது விரைவில் நடக்கப் போகிறது.
2. இறைச்சிக் கறிக்குச் சுவை சேர்க்கும். (தலைகீழாக உள்ளது)
3. இது வெற்றியாக முடியும் போது மாற்றங்கள் ஏற்படுவதுண்டு.
4. பாம்பு இவனுக்குப் பயன் கொடுக்கிறது.
6. தொடர்ச்சியான பரம்பரை.
8. மனித உயிருக்கு இங்கு இதுதான் அடிக்கடி நடக்கிறது.
10. சிறையிலே இது அடித்தால் தான் சோறு. (தலைகீழாக உள்ளது)

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 08.01.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல-31**
**தினமுரசு வாரமலர்**
**88/14, சோமாதேவி பிளேஸ்,**
**கிருலப்பனை**
**கொழும்பு -05.**

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-29க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 வி | க | ட | க | வி | ■ | 2 த |
| 3 ல் | க | க் | சி | ■ | 4 ம | ந் |
| லு | ■ | 5 மு | ■ | 6 ப | ந் | தி |
| ப் | 7 எ | ல் | 8 சை | ■ | தி | ■ |
| பா | 9 ம | லை | ச் | 10 சா | ர | 11 ல் |
| ட் | ன் | ■ | ர் | ர | ம் | ணு |
| டு | ■ | 12 வ | ச | தி | ■ | பூ |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.29இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. திருமதி.த. பிரேமாவதி ஹட்டன்.
2. எம்.எஸ்.எம். ஹமீட் கொழும்பு-2.
3. என். தாரிக் சிலாபம்.
4. பாத்திமா பர்ஹானா ஜலீல் மதுரகுளி.
5. கலீல் சுஹைல் கம்பளை.
6. வி. மூர்த்தி திருகோணமலை.
7. என். காந்தரூபன் கண்டி.
8. எல். கலாவதி வவுனியா.
9. எம். சுந்தரலிங்கம் புத்தளம்.
10. கு. நரேஷ் கொழும்பு-7.

**இந்த அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.**

(19ம் பக்க, மகாபாரதம் தொடர்.)

உயிரைக் காப்பாற்றுவது எனது தார்மீகக் கடமை. இதைவிட வேறு மார்க்கம் எனக்குத் தோன்றவில்லை. ரோகினி! என் தங்கை தேவகியிடம் போய் அவளுக்கு ஆறுதல் கூறு! அவள் கருவுற்றிருப்பதாக தகவல் வந்துள்ளது!

-காட்சி மாற்றம்-

*(சிறைக்கூடம்)*

**தேவகி:** நான் அபாக்கியவதி. தாயாகப் போகிறவள் எவ்வளவு மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும்! எனது வயிற்றில் வளரும் சிசு- பிறந்ததும் இறக்கப் போகிறதே!

**வாசு:** ஆண்டவனை நம்பு தேவகி! அவன் தான் துணையற்றவர்களுக்கு துயர் களைந்து துணை புரியவல்லவன். அவனுடைய லீலாவிநோதங்களை அவனன்றி வேறு யார் அறியவல்லார்? இதை மட்டும் நம்பு! இன்று இந்தச் சிறைக்கூடத்தில் நாம் இருப்பது அவனுடைய ஆணை. எமது எதிர்காலம் எமக்குப் பிறக்கப் போகும் எட்டாவது குமாரனில் தான் தங்கியிருக்கிறது. அவனை எதிர்பார்த்துக் காத்திருப்போம். அதுதான் நமது கடமை. உலக எதிர்காலத்தின் நம்பிக்கை நட்சத்திரம் அவனே. கம்சனின் கொடுமைகளிலிருந்து உலகை விடுவிக்க அவன் வருவான். அந்த அற்புதமான குழந்தையும் உனது வயிற்றில் வளரப்போகிறது. அதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நீயும் அவன் கடாட்சத்திற்குரியவள். இந்தச் சிறைக்கூடமே அவனுடைய அவதாரத்திற்கான புனித பூமியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**உக்கி:** தேவகி! வாசுதேவன் கூறுவது உண்மை. உலகமே எதிர்பார்க்கும் அந்தத் தெய்வீக அவதாரத்தை எதிர் பார்த்தே நாம் மூவரும் காத்திருப்போமாக. கம்சனுடைய கொடூரமான அட்டூழியங்களை இன்று உலகிலுள்ள எந்தப் பராக்கிரமசாலியாலும் தடுக்க முடியாதிருக்கிறது.

**தேவகி:** எனக்குப் பிறக்கும் எட்டாவது குழந்தையால் தான் அண்ணனுக்கு அழிவு என்றால், எனது ஏனைய ஏழு அப்பாவிக் குழந்தைகளையும் ஏன் கொல்ல நினைக்க வேண்டும்?

**வாசு:** அமைதியாக இரு தேவகி. உலகத்தில் காரணகாரியங்கள் இவ்வாறு தான் நடக்க வேண்டும் என்றால் எவர்தான் தடுக்க முடியும்?

-காட்சி மாற்றம்-

*(மதுராபுரி அரசவை-ரிஷி சங்கிலியால் பிணைக்கப்பட்டுக் கொண்டுவரப் படுகிறார்)*

**கம்ச:** ஏய் சந்நியாசி! உனது கற்பனையில் வேறு தீர்க்கதரிசனங்கள் தோன்றியுள்ளனவா? அப்படியானால் அவற்றைக் கூறு.

**ரிஷி:** உன்னுடைய அழிவுக்கு ஆக இன்னும் எட்டுப் படிகளே பாக்கியுள்ளன. உன் தலையெழுத்திலிருந்து நீ தப்பவே முடியாது.

**கம்ச:** சந்நியாசி, நீ ஒரு நகைச்சுவைப் பெட்டகம். எத்தகைய முடிவுகளையும் எனது வாளே நிர்ணயிக்கும். இன்று எனக்குப் போதுமான நகைச்சுவை சம்பவங்கள் கிடைத்து விட்டன. இவனை இழுத்துச் செல்லுங்கள்.

-காட்சி மாற்றம்-

*(சிறைக்கூடம்)*

**உக்கி:** தனது சொந்தத் தங்கையின் குழந்தைகள்; சொந்த மருமக்களைக் கொல்லும் ஒரு மாமன் எப்பேர்ப்பட்டவன்? இவை எமது முற்பிறப்பில் செய்த வினைப்பயன்.

**வாசு:** மனம் தளராதீர்கள் மகாராஜா! எமது முற்பிறப்புப் பாவங்களுக்கான தண்டனையை நாம் இப்பொழுது அனுபவிக்கவில்லை.

**உக்கி:** இல்லையானால் நாம் இங்கு ஏன் இருக்க வேண்டும்?

**வாசு:** கம்சனின் அக்கிரமங்களுக்கு முடிவு கட்ட அவதரிக்கப் போகும் அந்தத் தெய்வமகனை வரவேற்கவே நாம் இங்கு காத்திருக்கின்றோம். ஆகவே நாம் இறைவனின் அனுக்கிரகம் பெற்றவர்களே மகாராஜா!

**உக்கி:** மதுராபுரி அரண்மனையின் மருமகன் நீர். இன்று உம்மையும் தேவகியையும் இந்தக் கோலத்தில் காணும்போது என் மனம் வேதனை அடைகிறது. உரிய அந்தஸ்தில் உங்களை வைக்க முடியாதிருக்கும் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.

**வாசு:** இது தண்டனையல்ல மகாராஜா! இது இறைவனின் செயல். எதிர்காலத்தின் நம்பிக்கைக்குரியவர்கள் நாங்கள். கம்சனின் தீய செயல்களை எண்ணாமல் எதிர்காலத்தின் ஒளியை எண்ணிப் பாருங்கள். இந்தத் துன்பங்களனைத்தும் கதிரவனைக் கண்ட பனிப்போலாகிவிடும்.

**உக்கி:** கம்சனின் கொடுமைகளிலிருந்து எம்மை விடுவிக்க உண்மையில் அந்த ஆண்டவன் ஒருவனால்தான் முடியும்.

*(ரோகினி வருகிறாள். உக்கிரசேனரின் பாதங்களைத் தொட்டு வணங்குகிறாள்)*

**உக்கி:** இறைவன் உன்னை ஆசிர்வதிப்பானாக.

**ரோகி:** (வாசுதேவரிடம்) நலமாக இருக்கிறீர்களா பிரபு?

**வாசு:** நலம்தான்... ஆனால் தேவகியின் நிலமை தான் சகிக்க முடியாதிருக்கிறது. அவளை ஆற்றுப்படுத்த முடியவில்லை. நிலமையை விளக்கி அவளை அமைதியடையச் செய் ரோகினி.

**தேவகி:** வாருங்கள் அக்கா...!

**ரோகி:** எழுந்திருக்க வேண்டாம். படுத்தே இரு.

**தேவகி:** பரவாயில்லை அக்கா... முதன் முதலாக இன்று சந்திக்கும் உங்களுக்கு ஓர் இருக்கையினை அளிக்கவும் முடியாத பாபி நான்.

**ரோகி:** தைரியத்தை இழக்கலாகாது தேவகி. கணவன் இருக்க வேண்டிய இடத்தில் தான் நானும் இருக்க வேண்டியவள். எட்டாவது மகனின் பிறப்பு வரை நானும் உங்களுடன் இருந்து விடலாமா என்று நினைக்கிறேன். ஆனால் கம்சன் அதற்கு அனுமதிக்க மாட்டான். கண்ணீரைத் துடைத்துக்கொள். இறைவன் அவதாரம் எடுக்க உன்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறான். அதுவே உனக்கு பேரதிஷ்டம் அல்லவா? மனித குலத்தைக் காக்கும் அந்த மனித தெய்வம் உன் வயிற்றில் உருவாகப் போகிறது. ஆகவே அமைதியாக இரு!

**தேவகி:** இங்கு ஆதவனைத் தரிசித்து ஆராதிக்கவே மார்க்கமில்லை அக்கா. ஒளியே புகாத இருள் சூழ்ந்த குகை. குழந்தை பிறந்த பின்னர் எனது துயரங்கள் நீங்கலாமோ என்னமோ! கம்சன் நம் குழந்தையை உயிருடன் விட்டு வைப்பானா?

**வாசு:** கம்சன் இந்தக் குழந்தையை ஏன் அழிக்கப் போகிறான்? நம்மைப்போல் அவனும் நமது எட்டாவது குழந்தையைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான்.

**ரோகி:** தேவகி, உன் அருகில் நான் இல்லாவிட்டாலும் உனது துன்பங்களை நானும் அனுபவிக்கிறேன்.

**தேவகி:** அக்கா அடிக்கடி வாருங்கள் அக்கா.

**ரோகி:** கட்டாயம் வருவேன் தேவகி.

-காட்சி மாற்றம்-

*(கம்சனின் அரண்மனை- உணவு உட்கொள்ளும் போது காவலன் வருகிறான்)*

**காவலன்:** மகாராஜா! சிறை அதிகாரி செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

*(கம்சன் உணவை விட்டு எழுகிறான்)*

(தொடர்ந்து வரும்)

(எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது)

# மகாபாரதம்
## அங்கம் 10

**இது-**
**எம்.ரி.வி. தொலைக்காட்சியில் இவ்வாரம் இடம்பெறும் தொடர்.**
**(02.01.94 ஞாயிறு மாலை 7.00மணி)**
**அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்**

**காலத்தின் குரல்:** மதுராபுரியின் இளவரசன் கம்சன் பராக்கிரமசாலிதான். ஆனால் அவன் தீயவழிகளில் தனது ஆற்றலை அழிக்கிறான். குடிமக்களைக் கொடுமைப் படுத்துகிறான். அராஜகத்துக்குத் தூபமிடுகிறான். தனது சிரம் மட்டுமே நிமிர்ந்திருக்க வேண்டும் என்றும் ஏனையவை தாழ்ந்துவிட வேண்டும் என்றும் விரும்பி கொடூரத்தை விதைக்கிறான். பேரழிவுகளினால் ஏற்பட்ட முடை நாற்றத்துடனும் பொசுங்கிப் போன மனிதர்களின் பிண வாடையுடனும் மதுராபுரிக்கு வந்து கொண்டிருக்கிறான்.



-காட்சி துவக்கம்-

*(கம்சன் இரதத்தில் வருகிறான். படை தொடர்கிறது. எதிரே மகத நாட்டு மன்னனும் கம்சனின் மாமாவுமான ஜராசந்தன் தேரில் வர அவருடைய படைகளும் தொடர்கின்றன.)*

**கம்சன்:** (தேரைவிட்டு இறங்கி) மகத நாட்டதிபரே! வருக வருக!

**ஜராசந்தன்:** மருமகனே! உஜ்ஜெய்னியை வென்றுவிட்டாய் என்று அறிந்தேன். உன்னைப் பாராட்டவே மதுராவை நோக்கி வருகிறேன். இங்கேயே உன்னைக் கண்டதில் பெருமகிழ்ச்சி. உன்னை விட வீரன் இந்தக் கண்டத்திலே கிடையாது. நீ ஆயுதங்களுடனேயே ஐக்கியமாகி விட்ட மாவீரன். எத்தனையோ மாவீரர்களைப் பார்த்திருக்கிறேன். எவரும் உனக்கு ஈடாக மாட்டார்கள்!

**கம்ச:** அளவுக்கு மீறிப் புகழ்ந்து விட்டீர்கள் மாமா.

**ஜரா:** இல்லவே இல்லை மதுராபுரி இளவரசே! எனது முகாம் அண்மையில் தானுள்ளது. வாரும் விருந்துண்டு செல்லலாம்.

**கம்ச:** இல்லை மகாராஜா! நீங்கள் மதுராவின் எல்லைக்குள் வந்துவிட்டீர்கள். நீங்களே என்னுடன் வந்து உணவருந்தியபின் நகர் செல்லலாம்.

**ஜரா:** உம்மை வாழ்த்தவே வந்தேன். மதுராவில் வேறு பணி எனக்கில்லை. உம்முடைய முகாமுக்கே வந்து உணவருந்துகிறேன்- செல்வோமா?

-காட்சி மாற்றம்-

*(கம்சனின் முகாம்)*

**கம்ச:** என் மீது இத்தனை புகழாரம் சூட்டு வீர்கள் என்று எண்ணவில்லை மாமா!

**ஜரா:** எனது மகளை மணந்தவன் என்பதற்காக நான் உம்மைப் புகழவில்லை. இப்புகழ்ச் சிக்கு நீர் அருகதையுடையவரே! பாரதத் தின் எதிர்காலம் நீயே! உன் தந்தையோ நானோ இறந்த காலத்துக்குரியவர்களாகி விட்டோம். மாமன்னனாக வேண்டியவர் நீரே! மதுராபுரியின் மாமன்னராக வேண்டியவர்...

**கம்ச:** தங்கள் ஆசிதான் எனக்கு வேண்டும் மகத மாமன்னரே!

-காட்சி மாற்றம்-

*(மதுராபுரி அரசவை)*

**காவலன்:** பராக்! பராக்!..... மதுராபுரியின் மாமன்னர் உக்கிரசேன மகாராஜா சபைக்கு வருகிறார்!

**சபையோர்:** வாழ்க மகாராஜா...வாழ்க! வாழ்க!

**உக்கி:** மாமந்திரியாரே!

**மந்திரி:** நகர மக்களின் பிரதிநிதிகள் தங்கள் சமுகம் நாடி வந்துள்ளனர் மகாராஜா!

**உக்கி:** எனது குடிமக்களுக்கு அரசவையில் மட்டுமல்ல எனது இதயத்திலும் தனியான இடமுண்டே! அவர்கள் வரவு நல்வர வாகுக...ஆனால் அமைச்சரே! ஏதோ விபரீதம் நடந்துள்ளது போல் உங்கள் முகக்குறிப்புக் காட்டுகிறதே!

**அமை:** உண்மை தான் மகாராஜா!

**உக்கி:** என்ன நடந்தது?

**அமை:** நீங்களே நேரடியாகக் கேட்டறிவதே நல்லது. கருத்துக்கள் சிதைவுறாமல் நேரடியாக அறிவதே நன்மை பயக்கும்!

**உக்கி:** மரியாதையாக அவர்களை அழைத்து வாருங்கள்.

**காவலன்:** மக்கள் பிரதிநிதிகளே உள்ளே வாருங்கள்.

**ம.பிரதிநிதி:** வாழ்க மகாராஜ்!

**உக்கி:** தங்கள்வருகைக்கான காரணம் என்னவோ?

**ம.பிரதி:** தனியாக வருவதற்கே அஞ்சுகிறோம் மாமன்னரே!

**உக்கி:** என்ன? உங்கள் மன்னவனிடம் நீங்கள் வர ஏன் தயங்க வேண்டும்? அவ்வாறா னால் ஆட்சி பீடத்திலிருக்கவே நான் லாயக்கற்றவன்! குடி மக்களுக்கும் அரசருக்குமிடையில் தடுப்பணை இருக்க லாகாது. அஞ்சாமல் கூறுங்கள். உங்கள் துயரம் என்ன?

**ம.பிரதி:** மகாராஜா! மக்களுக்கு ஒரேயொரு பிரச்சனை தான் உள்ளது.

**உக்கி:** என்ன பிரச்சனை?

**ம.பிரதி:** இளவரசர் கம்சன்...!

**உக்கி:** இளவரசர் கம்சனா? இளவரசர் என்ன செய்தார்?

**வாசுதேவன்:** நல்லன எதையும் செய்யவில்லை மகாராஜா..

**உக்கி:** என்ன? நீ அவனுடைய உற்ற நண்பன் அல்லவா வாசுதேவா?

**வாசு:** நண்பன் தான். அதற்காகத் தீய செயல்களையும் பொறுத்துக் கொள்ள வேண்டுமா மகாராஜா? மதுரா புரியின் உயிர் நாடியையே கம்சன் இரத்தக் கறையாக்கி விட்டான். இறைவன் அருளால் தாங்கள் நீடூழி வாழ வேண்டும். மதுராவின் எதிர்காலத்தை கருத்தில் கொள்வது தங்கள் கடமை மகாராஜா!

**ம.பிரதி:** மகாராஜா நீடூழி வாழ்க!

**உக்கி:** மனம் திறந்து பேசுங்கள்.

**ம.பிரதி:** இளவரசரின் அட்டூழியங்கள் அளவு கடந்துவிட்டன மகாராஜா! எங்கள் உயிர், எமது கலாசாரம், பாரம்பரியம், எமது பெருமை எல்லாமே அவரால் சிதைக்கப் படுகின்றன. பெண்கள் கூட பயந்து நடுங்குகின்றனர். புண்ணிய யமுனா நதிக்கரையிலுள்ள மதுராபுரி துன்பத்தில் ஆழ்ந்துள்ளது மகாராஜா!

**உக்கி:** என்ன உண்மையாகவா? நான் அவனிடம் பேசுகிறேன். நீங்கள் அமைதி யடையுங்கள்.

-காட்சி மாற்றம்-

*(கம்சனின் அரண்மனை)*

**ஒற்றன்:** வாழ்க மகாராஜா! மக்கள் பிரதிநிதி ஒருவர் இன்று அரசவை சென்றார் மகாராஜா!

**கம்ச:** ஆமாம்! அப்பா என்ன சொன்னார்?

**ஒற்ற:** அரசரை விட யாதவ இளவரசர் வாசுதேவரே அதிகம் பேசினார்.

**கம்ச:** அது இருக்கட்டும்- அப்பா என்ன சொன்னார்? அதனை முதலில் கூறு.

**ஒற்ற:** மகாராஜா அவர்கள் கூறியவற்றை யெல்லாம் கேட்டு மிகவும் கவலைப் பட்டார்.

**கம்ச:** அப்படியா? அவரும் கவலை யடைந்தாரா? சரி இப்போது அரசர் எங்கே இருக்கிறார்?

**ஒற்ற:** அரண்மனை சோதிடரிடம் சென்றுள்ளார். தங்கள் தங்கை இளவரசி தேவகி அம்மையாரின் திருமணத்துக்கு நாள் பார்க்கச் சென்றுள்ளார்.

-காட்சி மாற்றம்-

*(மதுராபுரி அரண்மனை- சோதிடர் கணக்குப் பார்க்கிறார்)*

**உக்கி:** சோதிடரே! எனது குமாரத்தி தேவகி, வாழ்நாள் முழுவதும் ஆனந்தமாக வாழ ஏற்ற நாள் ஒன்றினைப் பாருங்கள்.

**சோதி:** அப்படியே மகாராஜா!

**காவலன்:** வாழ்க மகாராஜா! இளவரசர் வந்து கொண்டிருக்கிறார்.

**உக்கி:** தன்னைத் தூய்மைப்படுத்தாமல்- அப்பாவிகளின் உயிர்களைப் பறித்த தனது அங்கங்களைத் தானும் சுத்தம் செய்யாமல் இங்கே வருகிறானா? அதுவும் தேவகியின் திருமணத்துக்கான நாள் பார்க்கும் இந்த நல்ல வேளையில் வருகிறானா?

*(ஆயுதம் தாங்கிய வீரர்களுடன் கம்சன் வருகிறான்)*

**கம்ச:** மதிப்புமிக்க தந்தையே!

**உக்கி:** உனது அங்கங்களையாவது கழுவிக் கொண்டு இங்கு வரலாகாதா?

**கம்ச:** எனது வெற்றிகளின் வாடையை என் தந்தையே விரும்பவில்லைப் போலும்!

**உக்கி:** அப்பாவிகளின் இரத்தத்தைச் சிந்திப் பெற்ற வெற்றி உண்மையில் தோல்வியே! இந்த நாட்டின் ஆட்சிக்கு வாரிசாக வரவே அருகதையற்றவன் நீ!

*(கம்சன் சிரிக்கிறான்)*

**கம்ச:** நீங்கள் உண்மையில் இந்த நாட்டை ஆளத் தகுதியற்றவர் என்றே எனக்குப் படுகிறது.

**உக்கி:** நீ என்ன சொல்கிறாய்?

**கம்ச:** உங்கள் காதில் எது விழுந்ததோ அதனையே தான் கூறினேன்! அதுதான் உண்மை தந்தையே! உங்கள் கடைசிக் கட்டளை என்ன?
உங்கள் மகுடத்தை நீங்களே எடுக்கிறீர் களா? அல்லது அதற்கு நானே உதவட் டுமா? தீர்மானத்துக்கு வரத் தயங்கு கிறீர்களே! தந்தையே! முடியை எடுக்கி றீர்களா? அல்லது நானே எடுக்கட்டுமா?

**உக்கி:** நானே அகற்றி விடுகிறேன். கம்சனே! ஒன்றை நினைவில் வைத்துக்கொள்! ஒருவன் செய்யும் பாபங்களே அவனை அழித்துவிடும். ஆண்டவன் பொறுக்க மாட்டான். உன் முடிவு காலம் நெருங்கி விட்டது.

*(கம்சன் முடியைத்தானே சூடிக்கொண்டு அரசரிருந்த இருக்கையில் அமர்கிறான்)*

**கம்ச:** இப்பொழுது உம்மைக்கவனிக்கிறேன்! ஆண்டவனைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்.
மதுராபுரியின் முன்னாள் மன்னரை பாதாளச் சிறையில் அடையுங்கள்.

*(காவலர் முன்வருதல்)*

**கம்ச:** என்னை வாழ்த்தக் கூடாதா தந்தையே?

**உக்கி:** என்னுடைய சாபத்துக்கே அருகதை யற்றவன் நீ...!

**கம்ச:** அப்பாவுக்கு சகல வசதிகளையும் செய்து கொடுங்கள்.

**காவலன்:** தங்கள் சித்தம் பிரபு!

**உக்கி:** நீ எனது மகனாகப் பிறந்ததே எனது துர்ப்பாக்கியம்!

-காட்சி மாற்றம்-

*(சிறை-உக்கிரசேனரிடம் கம்சன் வருகிறான்)*

**கம்ச:** துறவு பூணுவதற்கான காலம் இது. சிறையினையே கானகமாகக் கருதுங்கள். தியானத்தில் அமருங்கள். அரசியலைப் பற்றி சிந்தித்தீர்களானால், இதுவரை பலமற்ற, சக்தியற்ற ஓர் அரசர் இங்கு ஆண்டுவந்தார் என்ற உண்மை புலனாகும். உங்களைப் போன்ற ஒருவர் ஆட்சி புரிய லாயக்கற்றவர். மதுராபுரிக்கு நீங்கள் அரசரானதே வரலாற்றில் ஏற்பட்ட ஒரு கறை.

**உக்கி:** வரலாறு எனக்குத் தெரியாது. உன்னை எனக்கு மகனாகத் தந்து ஆண்டவன் என்னை வஞ்சித்து விட்டான்.
நீ எனது மகனல்ல. முற்பிறப்பில் நான் செய்த பாபம் உன் உருவில் என்னை வந்து சேர்ந்தது. மதுராவுக்கும் பாரதத் துக்கும் எனக்குமே நீ ஒரு சாபத்தின் சின்னம். சாபங்களுக்கும் ஒரு விமோசன முண்டு. உனது முடிவை நானும் காணத்தான் போகிறேன்.

**கம்ச:** (பலமாக நகைத்த வண்ணம்) ஆமாம் அவ்வாறே நினைத்துக் கொண்டிருங்கள். பொழுது போகும்!

**உக்கி:** ஆண்டவனே! மீண்டும் நான் பிறவி எடுத்து எனக்கு ஒரு மகவு கிடைத்தால் அது ஒரு கருங்கல்லாக இருப்பின் அதனை நான் வணங்குவேன். ஆனால் கம்சனைப் போல் ஒரு மகன் வேண்டவே வேண்டாம்.

-காட்சி மாற்றம்-

**வாசுதேவன்:** எவ்வளவு கொடுமை! செய்வ தறியாது நாம் பார்த்துக்கொண்டிருக்கும் போதே மாமன்னரை கம்சன் சிறையி லடைத்து விட்டானே! மதுராபுரிக்கு மட்டுமல்ல; மனித சமுதாயத்துக்கே இது மாபெரும் கொடுமை!

**அமைச்சர்:** ஆத்திரமே மனிதனின் முழு எதிரி! ஆத்திரம் அறிவைக் கெடுத்து விடும் வாசுதேவா!

**வாசு:** நாம் வெறுமனே இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டே இருப்பதா? மதுராபுரியை கொடுமையிலிருந்து மீட்பது நம் கடமையல்லவா? நட்புக்காக மனச்சாட்சியைக் கொல்ல வேண்டுமா?

**அமைச்:** ஆமாம்! அரசியல் என்றால் அப்படித்தான். இன்றுள்ள நிலையில் மதுராபுரிக்கு மட்டுமல்ல, யாதவர் குலத்துக்கும் அதுவே நல்லது. கம்சன் உங்களை நாடுவான். அவனுக்கு உதவி புரியுங்கள். பேரழிவு நிகழும் காலத்தில் மக்கள் நலம் கண்காணிக்க உங்களைப் போன்ற ஒருவர் இங்கே இருப்பது அவசியம். துன்பங்களையும் அபவாதங் களையும் சுமக்க நேர்ந்தாலும் பொறுமையுடன் இருங்கள்.

-காட்சி மாற்றம்-

*(கம்சனின் அரண்மனை)*

**கம்ச:** (சோதிடரிடம்) எனது அன்பு நண்பன் வாசுதேவனுக்கும் எனது அருமை தங்கை தேவகிக்கும் மணம் முடித்து வைக்க ஏற்ற முகூர்த்தம் கணியுங்கள்.

**சோதிடர்:** தங்கள் கட்டளைப்படி இளவரசே!

**கம்ச:** இளவரசனா? நான் மாமன்னன்!

**சோதி:** தங்கள் சித்தம் மகாராஜா!

**கம்ச:** எனது நண்பன் வாசுதேவனுக்கும் எனக்கும் பிணைப்பை மேலும் உறுதி யாக்கும் இந்தத் திருமணத்தை நடத்த ஏற்ற தருணத்தைக் கணித்துக் கொடுங்கள். பாரத நாடே பார்த்து மகிழும் வண்ணம் எனது தங்கையின் மணவிழாவை மிகச் சிறப்பாக நடத்தியாக வேண்டும்!

-காட்சி மாற்றம்-

*(கம்சனின் அரண்மனை)*

**காவலன்:** வாழ்க மகாராஜா!

**கம்ச:** என்னது...?

**காவ:** யாதவ இளவரசர் வாசுதேவர் தங்கள் சமூகம் நாடி வருகிறார்.

**கம்ச:** வரச்சொல்.

**காவ:** உள்ளே செல்லுங்கள் இளவரசே!

**கம்ச:** வாரும் யாதவ இளவல் வாசுதேவரே! இந்த வகையில் நான் ஆட்சிபீடமேறியதை நீர் ஆதரிக்க மாட்டீர் என எண்ணுகிறேன்.

**வாசு:** எனது விருப்பு வெறுப்புக்கு இடமேது? இன்றோ நாளையோ தாங்கள் அரசராக வேண்டியவர் தானே!

**கம்ச:** நீர் எனது உற்ற நண்பர் அல்லவா? உண்மையைக் கூற வேண்டுமல்லவா?

**வாசு:** மதுராபுரியின் அரியாசனத்தில் கண்வைத்திருந்தேனேயானால் நிச்சயம் எனக்கு சங்கடமாக இருந்திருக்கும்.

**கம்ச:** நான் மன்னரானதை ஏற்றுக் கொண்டால் எனது கோரிக்கையை ஏற்பீரா?

**வாசு:** ஆணையிடுங்கள் மாமன்னரே!

**கம்ச:** அன்பனுக்கு ஆணையா? இல்லை ஆலோசனைதான்!

**வாசு:** நண்பனின் ஆலோசனைக்கும் ஆணையின் வல்லமை உண்டல்லவா?

**கம்ச:** எனது அன்புத்தங்கை தேவகியை நீர் திருமணம் புரிதல் வேண்டும். எமது நட்பின் உறுதிக்கு அது உதவும்.

**வாசு:** ஆனால் ரோகினி...!

**கம்ச:** ரோகினியையும் தேவகியையும் ஒருங்கே ஏற்க முடியாத குறுகிய இதயமா உமக்கு?

**வாசு:** மகாராஜா! ஆலோசிப்பதற்கு சிறிது அவகாசம் தரமுடியுமா?

**கம்ச:** இல்லை! நண்பனின் கோரிக்கைக்கு மாற்று யோசனை அவசியமில்லை. நமது நட்பினை மதிப்பதானால் இந்த இணைப்புக்கு உடனே ஒப்புதல் வேண்டும்!

**வாசு:** அரசரின் ஆணையினையோ நண்பனின் கோரிக்கையினையோ உதாசீனம் செய்யும் உரிமை எனக்கில்லை.

**கம்ச:** அவ்வாறானால் நாம் இருவரும் அணைத்துக்கொள்வோம். இதன் மூலம் எமது பிணைப்புக்கும் முத்திரையிட்டுக் கொள்வோம்.

-காட்சி மாற்றம்-

*(வாசு தேவனுக்கும் தேவகிக்கும் திருமணம் நடக்கிறது. மாலை மாற்றிக் கொள்ளு கின்றனர். மணமக்களை கம்சன் மகிழ்ச்சியுடன் அணைத்துக்கொள்கிறான்)*

**கம்ச:** உங்கள் இருவருடைய தோளிலும் தொங்கும் மாலைகள் எனக்குப் பேரானந்தத்தை தருகிறது மைத்துனரே! இன்று வரை நீர் என் நண்பர். இனி நீர் என் சகோதரன்- என் மைத்துனர். என் தங்கையை கவனமாகப் பார்த்துக்கொள்.

**தேரோட்டி:** மாமன்னர் வாழ்க! இரதம் ஆயத்தமாகி விட்டது மகாராஜா!

**கம்ச:** இல்லை! இன்று நீ தேரோட்ட வேண்டாம். எனது தங்கை தேவகிக்கு நானே தேரோட்டியாகிறேன்!

**தேரோ:** ஆகட்டும் மகாராஜா!

**கம்ச:** வாசுதேவரே வாரும். தங்கையே இரதத்தில் ஏறிக்கொள்.

*(இரதம் புறப்படுகிறது)*

-காட்சி மாற்றம்-

*(மதுராபுரி வீதிகளில் வேகமாகச் செல்லும் கம்சனின் இரதத்தை மகாரிஷி ஒருவர் தடுத்து நிறுத்துகிறார்)*

**ரிஷி:** மகா காளீஸ்வரருக்கு தோத்திரம்!

*(கம்சன் இரதத்தை நிறுத்துகிறான்)*

**கம்ச:** வணக்கம் ரிஷிகளே! நல்ல நேரத்தில் வருகிறீர்கள். வாருங்கள்! தங்கை தேவகியையும் கணவர் வாசுதேவனையும் வாழ்த்துங்கள்.

**ரிஷி:** அவர்களை வாழ்த்தவே வந்தேன். மதுராபுரி மன்னரே! இந்தச் சந்தர்ப்பத் துக்காகத் தான் காத்திருந்தேன்.

*(தேவகி வணங்குகிறாள்)*

**ரிஷி:** புத்திரபாக்கியமுண்டாகட்டும்! நான் மட்டுமல்ல, இவ்வையகமே உங்கள் திருமணத்தை ஆவலுடன் எதிர்பார்த் திருந்தது, தேவகிக்கும் வாசுதேவனுக்கும் பிறக்கப் போகும் எட்டாவது புத்திரன் உனது கொடுமைகளிலிருந்து மதுரா புரியை மீட்பான்.

**கம்ச:** சாவினை முத்தமிட சங்கற்பம் பூண்டுவிட்டீர் போலும் சன்னியாசி!

**ரிஷி:** மதுராபுரி அரசே! அசரீரியைக் கேட்டவன் நான். இந்தத் தருணத்தையே இதுவரை காத்திருந்தேன்.
(தேவகி-வாசுதேவரிடம்) அஞ்சவேண்டாம். இந்தக் கொடியவனால் உங்களை எதுவும் செய்துவிட முடியாது.

**கம்ச:** உனது கூற்றுப் பொய். நீயும் பொய்யன்!

**ரிஷி:** ரிஷிகள் பொய் கூறுவதில்லை மதுராபுரி மன்னா? ஆண்டவா...!

*(வானில் இடியும் மின்னலும் தோன்று கின்றன)*

**அசரீரி:** கம்சனே! உனது பாபச் செயல்களுக்கு முடிவு காலம் அண்மித்துவிட்டது. தேவகிக்கும் வாசுதேவனுக்கும் பிறக்கும் எட்டாவது குமாரனால் நீ அழிவாய். உனது அட்டூழியங்கள் அனைத்தும் நீங்கி உலகம் உய்யும்.

**கம்ச:** (பலமாகச் சிரித்தபடி): முன்னமே தகவலைத் தந்தமைக்கு நன்றி. தேவகியும் வாசுதேவனும் குழந்தைகளே பெறாமல் செய்துவிடுகிறேன். அப்போது என்ன நடக்கும்? இருவரையுமே கொன்று விட்டால்...! அவர்கள் உயிருடன் இல்லாவிட்டால்அவர்கள் குழந்தைகளை எவ்வாறு பெற முடியும்?

**வாசு:** அவ்வாறு செய்து விடாதே கம்சா! உனது அன்புத் தங்கையைக் கொல்லாதே! அவளின் குழந்தைகள் தானே உனது சத்துரு. வேண்டுமானால் அவற்றைக் கொன்றுவிடு.

**கம்ச:** குழந்தைகளைத் தர மறுத்துவிட்டால்...!

**வாசு:** உனது பயம் நீங்கும் வரை எங்களைச் சிறையில் அடைத்துவிடு. கம்சா உனது நீண்டகால நண்பன் யான். பலதடவைகள் என் உயிரைப் பணயம் வைத்து உன்னைக் காப்பாற்றியுள்ளேன்!

**தேவ:** அண்ணா என் குழந்தைகளால் ஏற்படப் போகும் தீங்குக்காக எங்களை ஏன் வருத்துகிறாய்? உனது அன்பால் ஊட்டப்பட்ட தங்கையல்லவா நான்! உன் தங்கையைக் கொன்று தான் உன் வீரத்தை நிலை நாட்ட வேண்டுமா?

**ரிஷி:** நீ வீரனென்றால் உன் விதியுடன் போரிடு. உனது கையில் புதிய ரேகை ஒன்றை வரைந்து பார். அவர்களைச் சிறையிலிடு. பிறக்கும் குழந்தைகளைக் கொன்று விடு. அவர்களுடைய எட்டாவது மகனையும் கொன்று விட்டாயானால் உனக்கு அழிவேயில்லை!

**கம்ச:** அவ்வாறே ஆகட்டும்! தேவகியும் வாசுதேவனும் சிறையிலடைக்கப்படட்டும். எட்டாவது குழந்தையை நான் கொல்லும் வரை இந்த ரிஷியையும் சங்கிலியில் பிணையுங்கள். எட்டாவது குழந்தையைப் பலிவாங்கிய பின் இந்தச் சன்னியாசியைக் கவனித்துக் கொள்ளுகிறேன்!

-காட்சி மாற்றம்-

*(சிறைக்கூடம்- வாசுதேவன், தேவகி ஆகியோருடன் ரிஷியையும் தள்ளிக் கொண்டு கம்சன் வருகிறான்)*

**கம்ச:** தொழு நோயாளர்களுடன் இந்தச் சன்னியாசியை அடையுங்கள்.

(உக்கிரசேனர் இக்காட்சியைக் காண்கிறார்)

**உக்கி:** ஆ தேவகி! ஏய் கம்சா! தேவகி உனக்கு என்ன துரோகம் செய்தாள்? இந்த மென்மையான மலர் இந்தக் கொடூரமான சிறையின் வேதனைகளை எவ்வாறு தாங்குவாள்?

**கம்ச:** வெறுமனே கம்சன் என்று அழையா தீர்கள் தந்தையே! கம்ச மகாராஜா என்று அழையுங்கள் உம்... இவர்களையும் சிறையில் அடையுங்கள்.

(தேவகி அழுகிறாள்)

**கம்ச:** தேவகி எட்டு குமாரர்களைப் பெறுவாள். அவள் கர்ப்பமானதும் குழந்தை பிரசவிப்பதற்கான காலத்தை அறிந்து எனக்கு அறிவிக்க வேண்டும்!

**காவலன்:** சித்தம் மகாராஜா!

**தேவகி:** அண்ணா! நான் என்ன குற்றம் செய்தேன்? எனக்கேன் இத்தனை தண்டனை? நான் உன் அன்புத் தங்கை என்பதையும் மறந்துவிட்டாயா?

**கம்ச:** தேவகி உனது எதிர்காலம் பிரம்மாவின் கையில்தானுள்ளது. நீ உனது அண்ண னையே கொல்வதற்கான கருவியாகி விட்டாய். பிரம்மாவுக்கு நான் நிரூபித்துக் காட்ட வேண்டிய ஒன்றுண்டு. அவன் எனக்காக வகுத்திருக்கும் திட்டத்தை நிர்மூலமாக்கிக் காட்டப் போகிறேன். அதற்காகத்தான் உன்னைக் கொல்லாமல் விட்டு வைத்துள்ளேன். உனக்குப் பிறக்கும் எட்டுக் குழந்தைகளையும் கொன்றபின் பிரம்மா எனக்கு விதித்த விதியின் கதியைப் பற்றி அவனிடம் கேட்கப் போகிறேன்!

-காட்சி மாற்றம்-

*(கம்சனின் அரண்மனை)*

**காவலன்:** வாழ்க மகாராஜா! ரோகினி தேவியார் தங்கள் சமூகம் நாடி வந்துள்ளார்.

**கம்ச:** ரோகினி தேவியா? யாரது? ஓ வாசுதேவனின் முதல் மனைவியா?

**காவ:** ஆமாம் மகாராஜா!

**கம்ச:** உள்ளே அனுப்பு!

**காவ:** ஆகட்டும் மகாராஜா!

**கம்ச:** வா சகோதரி!

**ரோகினி:** நண்பன் என்ற பண்பை மறந்த உனக்கு நான் எவ்வாறு சகோதரியாக முடியும்? மரணத்துக்குப் பயந்த ஒரு மனிதன் எவ்வாறு வர்ணிக்க முடியாத அளவு விகாரமாகிவிட்டான் என்பதனையே பார்க்க வந்தேன்!

**கம்ச:** உட்காரு சகோதரி!

**ரோகினி:** சொந்தத் தங்கை தேவகியையே கொடுமைப்படுத்தும் நீ எனக்கென்ன மதிப்புத் தரப் போகிறாய்?

**கம்ச:** தேவகியும் வாசுதேவனும் எனது கண்ணின் மணிகள். அவர்கள்மீது எனக்கு எந்தக் கோபமும் கிடையாது. எனது அழிவு பற்றிய ஓர் அசரீரியை எதிர்த்தே எனது போராட்டம், அன்பு தங்கை தேவகியையும் அருமை நண்பர் வாசுதேவரையும் சிறையில் வாட விட்டு நான் படும் துயரத்தை எவரும் புரிந்து கொள்ள மாட்டார்கள். தேவகியின் எட்டுக்குழந்தைகளையும் கொன்ற பின் தான் எனக்கு நிம்மதி-நானே நேராகச் சென்று அவர்களை மாளிகைக்கு அழைத்து வருவேன்.

**ரோகி:** எட்டாவது குழந்தையால் தான் தீங்கு நேரும் என்றால் ஏனைய குழந்தைகளை ஏன் கொல்ல வேண்டும்?

**கம்ச:** அதுதான் எனது பிரச்சினை! முதலாவது குழந்தையை எவ்வாறு கணித்துக் கண்டுபிடிப்பது?

**ரோகி:** மதுராபுரிக்கரசரே! அதில் என்ன சிக்கல்? எட்டுவரை எண்ணும் கணக்கு உங்களுக்குத் தெரியாதோ?

**கம்ச:** எண் கணக்கு எனக்குத் தெரியும் ரோகினி! ஆனால், எங்கிருந்து எண்ணிக்கையை ஆரம்பிப்பது? அதுதான் கடினம்!

*(ஒரு வட்டத்தை வரைந்து அதில் 8 புள்ளிகளை வைக்கிறான்)*

**கம்ச:** ஒரு வட்டத்தில் எட்டுப்புள்ளிகள் உள்ளன. நான் நாட்டிலில்லாத சமயத்தில் பிரசவம் நடைபெறலாம். அவ்வாறானால் இப்புள்ளிகளில் எது முதலாவது எது எட்டாவது என்று எப்படிக் கண்டுபிடிப்பது? எனது

(18ம் பக்கம் பார்க்க)

எழிலூட்டும் எடுப்பான தயாரிப்புக்கள்.
குறித்த நேரத்தில் ஓடரை முடித்துத் தருவதே
எங்கள் தனிச்சிறப்பு
அருள்
ஜுவலர்ஸ்
இல. 3, செட்டியார் தெரு
கொழும்பு-11.
தொ.பேசி: 436331



**அழகான ஒரு வீடு** புதிய விருந்தாளர் தொழில்நுட்ப தரம் வீடுகள் அமைப்பதிலும் வித்தை காட்டுகிறது. படத்தில் உள்ள அழகான வீடு அமெரிக்காவின் பிரதான நகரான நியூயோர்க்கில் அமைந்துள்ளது. சந்தடி மிகுந்த நகரின் மத்தியில் சுந்தரமான வீடு.

## கலக்கிவரும் ஜிப்சி

தொலைக்காட்சியின் முன்பாக மக்கள் அமர்ந்துகொண்டு தொடக்கிவரும் நாடக அரங்குகளை நோக்கி செல்வது குறைந்துவிட்டது.

தொலைக்காட்சியின் புதிய தொழில்நுட்ப சாதனங்கள் புகுந்து விளையாடி பார்வையாளர்களைக் கட்டிப் போட்டுவிடுகின்றன. இப்படியெல்லாம் ஏராளமான கருத்துக்கள் நாடகப் படைப்பாளர்கள் மத்தியில் இருக்கின்றன. சிறந்த நாடகங்கள் தொலைக்காட்சி ஆதிக்கத்தையும் மீறி பார்வையாளர்களை நாடக அரங்கு நோக்கி இழுக்க முடியும். அதற்கு உதாரணம் அமெரிக்காவில் மேடையேறிவரும் 'ஜிப்சி' என்னும் நாடகம். 'ஜிப்சி' ஒரு இசை நாடகம். தற்காலத்தில் ரசனைக்கு ஏற்ப புதிய உத்திகளோடு தயாரிக்கப்பட்டுள்ளது. நாடகத்தில் வரும் முக்கிய பாத்திரம் ஒரு அழகி. பெயர் ரோஸ். அருகில் உள்ள படத்தில் இருக்கும் பெற்றி மிட்லர். ரோஸாக நடித்து ரசிகர்களை கவர்ந்திருக்கிறார். 'ஜிப்சி' தொலைக்காட்சி நாடகமாகவும் தயாரிக்கப்படுகிறது. அதற்கான செலவு ஒரு கோடியே 40 இலட்சம் டொலர்கள். சாதாரண திரைப்படமாக தயாரித்து உலகத் திரையரங்குகளில் உலாவர வைக்கும் எண்ணமும் இருக்கிறதாம்.

ரசனை புரிந்து சிறப்போடு படைப்புகளைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் வெற்றி நிச்சயம்.

## அப்படியொரு உதை!

றக்பி விளையாட்டுப் போட்டிகளில் ஒரே ஆட்டத்தில் அதிக 'பெனால்டி கிக்' [illegible] உலகின் [illegible] விளையாட்டுத்துறை [illegible] 1991 ஜூன் [illegible] கனடா [illegible] விளையாட்டரங்கில் [illegible] ஆனாலும் [illegible] ஒரே ஆட்டத்தில் அதிகமான 'பெனால்டி கிக்' அடித்தவர் என்ற உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துவிட்டார்.






வாரமலர் தினமுரசு

## பாறையைக் குடைந்து பாங்கான கால்வாய்!

படமே இத்தனை நீளமாய் இருக்கிறதே என்று ஆச்சரியப்படுவீர்கள். இது கிறீஸ் நாட்டில் உள்ள நீளமான கால்வாய். 1893ம் ஆண்டு அமைக்கப்பட்டது. கொறிந்த் கால்வாய் என்பதே இதன் பெயர். இதில் உள்ள விசேட அம்சம் பாறைகளைச் செங்குத்தாக வெட்டி இக் கால்வாய் அமைத்துள்ளார்கள். 1505 அடி உயரமான பாறையை குடைந்து கால்வாய் அமைத்துள்ளமை உலக சாதனையாகும். கின்னஸ் புத்தகத்தில் கால்வாயின் சாதனை பதியப்பட்டிருக்கிறது.





## அங்கும் அலசுகிறார்கள்

வன்முறைதான் இன்றைய உலகின் முக்கிய பிரச்சனை.
அமெரிக்காவையும் வன்முறை ஆட்டிப்படைக்கிறது. துப்பாக்கிவெடிப்புக்களும் நடந்துள்ளன.
அதனால் அங்கும் தேடுதல் வேட்டைகள், பரிசோதனைகள், சந்தேகப் பார்வைகள்.
தேடுதல்களும் பரிசோதனைகளும் சில சமயங்களில் மனிதர்களின் கௌரவங்களையும் உடைத்துப் போடுவதுண்டு. இங்கே வா- அங்கே நில்- படு. என்ன வைத்திருக்கிறாய்?
பொறுமை தொலைந்து எரிச்சல் வரும். வன்முறை மீதுமட்டுமல்ல பரிசோதனை செய்வோர் மீதும் எரிச்சல் வந்துவிடும். அருகில் உள்ள படம் அமெரிக்காவில் நடைபெறும் வீதிப் பரிசோதனையைக் காட்டுகிறது.



இப்பத்திரிகை கொழும்பு [illegible] 88/11ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 20, [illegible] அச்சகத்தில் [illegible] மாதம் 02ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.